

# உபநிடதம்.

ஸ்ரீ சிவகுருநாத குருபீடம்
அறக்கட்டளை வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# விஸ்வநாதம்

விஸ்வநாதம் விபும் பூரணம் - நமாமி

- விஸ்

பக்த அனுக்கிரக பரம கிருபா நிதே
துக்க விநாசக மங்கள தாரண

- விஸ்

கைலாச நாதம் நீலகண்டம்
கேதார நிவாசம் பசுபதிம்
மீனாக்ஷி ப்ரியம் சுந்தரேசம்
உமாபதிம் மகாதேவம் சிவம்

- விஸ்

ஆதி குரும் லோக குரும் தக்ஷிணா மூர்த்திம்
மாயா நிரோதம் ஞான சாகரம்
மோக்ஷ மூலம் சிஷ்ய அனுகூலம்
முக்தி சாதனம் ஏகம் நித்யம்

- விஸ்



உத்தரகாசி
14.05.2002

**அருணாசலத்தான்**

ஓம் தத் சத்.

## ஸ்ரீ மத் மகாதேவ சுவாமிகள்

**அவர்களின் மாணவன்**

## ஸ்ரீ மத் அருணாசலம் சுவாமிகள்

**அவர்களின் மாணவன்**

**தத்துவ ஆசிரியர்**

## திரு. பரஞ்சோதி

அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க

யாழ்ப்பாணம்
கந்தர் மடம்

## ஸ்ரீ சிவ குருநாத குருபீடம்

அறக் கட்டளை சார்பாக
மறு பிரசுரம் செய்யப்பட்டது

**27-01-2008.**


**தேவைக்கு தொடர்பு:**

**Dr. க. கிருஷ்ணானந்தசிவம்**
115, மெஸன்ஜர் வீதி,
கொழும்பு - 12,
இலங்கை.

**க. மகாதேவசிவம்**
சிவன் மாளிகை
மாரி அம்மன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் தத் சத்.

## கருணாகர சுவாமிகள்

அருளிச்செய்த

# உபநிடதம்.

திருத்துருத்தி இந்திரபீடம்
ஸ்ரீ கரபாத்திர சுவாமிகள் ஆதீனம்

## ஈசூர் ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள்

**அருளிச்செய்த விருத்தி உரை.**

ஒற்றியூர் ஞானாசிரியர் ஸ்ரீ ஆறுமுக சுவாமிகள்
மாணவர் வேதாந்தப் பிரசங்க மாமேகம்

## ஸ்ரீ ரா. சுப்பிரமணிய ஆச்சாரியார்

அவர்கள் வேண்டுகோளின்படி
ஷ ஆதீனம் தண்டறை ஸ்ரீ சுப்பராய ஆச்சாரிய சுவாமிகள்
மாணவர்.


## மதுரை எஸ். கந்தசாமி பிள்ளையால்

தமது மதுரை ஸ்ரீ மினாம்பிகை பிரசில்
பதிப்பிக்கப்பெற்றது.

**3 — ம் பதிப்பு**

19951.

விலை) (அணா 12.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# ஆழ மூழ்கு

ஆழ மூழ்கு மனமே ஆழ மூழ்கு

ஆழ மூழ்கு

சொல்லறு நிலையில் சுகம் பெற

ஆனந்த ஆழியின் அனுபவம் சித்திக்க

ஆழ மூழ்கு

எங்கும் பிரமம் எதிலும் பிரமம்

உள்ளதும் பிரமம் இல்லதும் பிரமம்

உண்மையும் பிரமம் பொய்மையும் பிரமம்

இருப்பது ஒன்றே அதுவும் பிரமம் - அதனால்

ஆழ மூழ்கு

பேதம் அற்றது பிரமம் பேச்சற்றது பிரமம்

போதம் அற்றது பிரமம் புண்ணியமானது பிரமம்

தூயது பிரமம் துளங்குவது பிரமம்

மோனமும் பிரமம் முக்தியும் பிரமம் - அதனால்

ஆழ மூழ்கு

அருணாசலத்தான். 23.08.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சிவோகம்

சிவ சிவ சிவ சிவ சிவோகம்
சிவ சிவ சிவ சிவ சிவோகம்
- சிவ சிவ

மனம் அடக்க சிவோகம்
மனம் நசிக்க சிவோகம்
மயல் அறுக்க சிவோகம்
மூல மந்திர சிவோகம்
- சிவ சிவ

பவம் அறுப்பது சிவோகம்
பாவம் கெடுப்பது சிவோகம்
சித்த சுத்தி அனுபூதி சிவோகம்
சிவானந்தம் ஆவது சிவோகம்
- சிவ சிவ

மோன மூலம் சிவோகம்
மோன முடிவும் சிவோகம்
கௌரி சங்கர சிவோகம்
ஷிவங்கரி மனோகரம் சிவோகம்
- சிவ சிவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெகதா நாத சிவோகம்
ஜெகம் முழுமையும் சிவோகம்
தேவ தேவ சிவோகம்
பரமகம்சம் சிவோகம்

- சிவ சிவ

தேவ தேவ மகா தேவ சிவோகம்
தத்துவமசிப் பொருள் சிவோகம்
பரப் பிரம்மம் சிவோகம்
பரம சித் சொரூபம் சிவோகம்

- சிவ சிவ

ஆனந்த தாண்டவ சிவோகம்
அகண்ட அனுபவ சிவோகம்
தினம் தினம் ஓதுக சிவோகம்
சிவோகம் சிவோகம் சிவோகம்

- சிவ சிவ

Leeds - U.K
25.12.2007

அருணாசலத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# சமர்ப்பணம்

ஸ்ரீ சிவகுருநாத குருபீட
பிரம்ம சொரூபன்
சுவாமி குருபரன், மகாதேவன்
செழுங்கிளை தாங்கி, சுட்டிய வாழ்வில்
அவித்தை அழியும் மூலமும்
வழியும் அறிந்து, அதுவாய் வாழ்ந்தோன்

கலையும் பொருளும் நலமும்
அருளுடன் நற்சிந்தையும் உயர் நோக்கும்
வல்லோர் வாழ்த்தும் தூயோர் துணையும்
தன் வழியில் என்னைத் தந்தோன்

குருவைக் காட்டி,
மெய்யின் வழியும் காட்டி
இசைபட பயன் தர வாழ் என்ற
எந்தை கந்தையா ஐயன்
திருவடிக்கே சமர்ப்பணம்

18/10/2007



Dr. க. கிருஷ்ணானந்தசிவம்
க. மகாதேவசிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# முகவுரை

நமது ஆன்றோர்கள் முற்காலத்தில் கல்வி கற்றதின் நோக்கம் கடவுளை அறிந்து அவருடைய திருவடியை அடைவதற்கேயாம். அவர்கள். இளம் பிராயத்தில் ஒளவைப் பிராட்டியாரும் மற்றப் பெரியோர்களும் அருளிச் செய்த நீதிநூற்களை (ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், நன்னெறி, நல்வழி, வெற்றி வேற்கை, போன்ற நூற்களை) பாடசாலைகளில் ஆசிரியர்கள் மூலம் நன்கு படித்து மனப்பாடஞ் செய்தார்கள். கற்கும் பொழுது அந்நூற்களிற் சொல்லிய வாக்கியங்களின் பொருளை நன்கு அறியாதிருந்தாலும், உரிய காலத்தில் உணர்ந்து சீரிய வாழ்வு வாழ்ந்தார்கள். நீதிநூற்களை நாம் இளமையிலே கற்று மனப்பாடம் பண்ண வேண்டும். அப்போதுதான் உரிய காலத்திற் பயன் தரும். தொட்டிலிற் பூண்டகுணம் சுடுகாடுமட்டும் என்பது சான்றோர் வாக்கு. அதற்கமைய நமதான்றோர்கள் இளம் பிராயத்தில் வழுவாது படித்த படியாலன்றோ பிற்காலத்தில் அவர்கள் தங்களது வாழ்வைப் புனிதப்படுத்தியது மன்றிப் பிள்ளைகட்கும் அக்கல்வியையூட்டி நன்னெறியதனிற் செல்லும் பாங்கைக் காட்டினார்கள். சமய சாஸ்திரங்களைப் படித்து விளங்கி நடப்பதற்கு நீதிசாஸ்திரக்கல்வி இன்றியமையாதது. அதனாலன்றோ அக்காலத்திற் சமயத்தைப் படிக்கக்கூடிய தகுதி பிள்ளைகளுக்கு உண்டானது.

தற்காலத்தில் நம்முடைய கல்வி முறையும் பண்பாடும் வரவர மிகவும் மோசமாகிக்கொண்டே வருகின்றன. இதற்குக்காரணம் உத்தியோகமோகமும் வயிற்றை வளர்த்தாற் போதும் என்னும் எண்ணமுந்தான். சமயப் பண்பாட்டுக்கும் ஆத்மீக வளர்ச்சிக்கும் அஸ்திபாரம் போன்ற நீதி நூல்களை இளம் பிள்ளைகளுக்குப் படிப்பிப்பது இப்போது அவசியமில்லை யென்றும், தேவையென்றால் அவர்கள் பின்பு தாங்களாகவே படிப்பார்களென்றும் சிலர் மதிமயங்கிச் சொல்லிக் கொண்டே வருகிறார்கள். வயிற்று வளர்ப்புக்காகவே தற்காலத்துக் கல்வி பயன் படுத்தப்பட்டுவருகிறது.

நீதி நூல்களைப் படியாவிட்டால் குழந்தைகளுக்கு நீதி நியாயம் தாங்கள் நடப்பது சரியா பிழையா என்னும் பாகுபாடுகள் எங்ஙனம் விளங்கும்? சரியைப் பிழையெனவும், பிழையைச் சரியெனவும் நினைத்துச் செய்வார்கள். தற்காலத்தில் விளையுந் தீமைக்குக் காரணம் சமயப் பண்பாடு நீக்கப்பட்ட கல்வி முறையேயாம்.

சிறுவர் முதல் வயோதிபர் இறுதியாக மனிதகுலத்தின் பண்பாட்டுச் சிதைவுக்கு இன்னுமோர் காரணம் யாதெனில் சினிமாப் படக்காட்சியாகும். இது மாணவ மாணவிகளுடைய படிப்பைக் கெடுத்து இருபாலாருடைய காம உணர்ச்சியைத் தூண்டி வாழ்வைப் பாழாக்குகிறது. தாய் தகப்பனுக்குத் தெரியாத வண்ணம் மாணவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவிகள் சினிமாப் படங்களைப் போய்ப்பார்த்து, பார்த்தவண்ணமே அவர்களும் கொஞ்சிக்குலாவிச் சிறுவயதிலே சிற்றின்ப லீலையில் ஈடுபடுகிறார்கள். இவர்களைத் திருத்துவது மிகவும் கஷ்டமான காரியம்.

முற்காலத்தில் மாணவ மாணவிகளுடைய தினசரி வாழ்க்கையில் பயபக்தி தெய்வ வழிபாடு முதலிய நங்குணங்கள் அமைந்திருந்தன. அவர்கள் பாடுவது பக்திப்பாடல் முதலியன. தற்காலத்தில் இவையனைத்தும் அருகி அருகி வருகின்றன. பண்பில்லாச் சொற்களையும் செயல்களையுமே சமுதாயத்திற் பார்க்கிறோம். மாதா, பிதா, குரு தெய்வ வழிபாடு சிறிதுங்கிடையாது. நிந்தனைக்குரிய நோக்கற்ற / சினிமாப்பாடல்களை மனமகிழ்ந்து பாடும் படி சிறுவர்களைத் தற்காலத்தில் சிலர் தூண்டுகிறார்கள். நவ நாகரீகமென்றார்கள். பொய் கொலை களவு காமச் செயல்களைப் போற்றிப்பாடுவது எந்தரீதியில் நாகரீகமாகும்? நாமறியோம்.

இந்நிலைமையை நாங்கள் இப்படியே வீணாகப் பார்த்திருப்போமானால் சுபீட்ச நிலை எப்படி வந்தெய்தும்? நமதான்றோர் தேடி வைத்த சமயப் பண்பாடுகள் சிதையச் சிதைய நமது சமயமும் சமுதாயமும் வளராது சிதைவு பெறும்.

இப்போது மாணவ மாணவிகளுடைய புத்தியை நற்காரியஙகளினின்றும் திசை திருப்பிக் கிளர்ச்சி வயத்தில் அவர்கள் பயிற்றப்பட்டு வருகிறார்கள். பிறநாட்டு நாஸ்திகக் கொள்கைகளை நாகரீக வாழ்வெனவும், புதுமைக்கு வழிகாட்டும் பண்பாடெனவும் எடுத்துச்சொல்லிப் பாட நூல்களை எழுதுபவர்கள், சமுதாய நோக்கமின்ற, சமுதாய மேன்மை கருதாது சமூக அழிவினைப் புகுத்துகிறார்கள். இப்படியான போதனா முறை சிறுவர்களுக்கு நஞ்சூட்டுவது போல் வதாகும். இப்பொழுது நடக்கும் தற்கொலை முதலிய அகால மரணங்களுக்கும் சீரழிவுக்கும் இதுவுமோர் காரணமாகும்.

இப்படியான செயல்களை அவதானித்ததனால் பின்வருங்காரியங்களை வற்புறுத்தி வருகிறது. (1) கல்வி போதனா முறைகள் நீதிநூற்களுக்கமைய இருக்கவேண்டும். (2) சினிமாப்படம் தயாரிப்போர் நீதியையும் பண்பாட்டையும் வளர்க்கும் முறையில் படங்களைத் தயாரிக்க வேண்டும். (3) நாடகம், கூத்து முதலியவற்றை இயற்றுவோரும் நீதி ஒழுக்கதுக்கமையச் செயல்பட வேண்டும். (4) ஆலயங்களைப் பராபரிப் போரும் சமயக் கட்டுப் பாட்டுக்கு விரோதம் வராத வழியில் நடக்கவேண்டும் (5) சமயப்பொதுச் சபைகள் ஒழுக்கத்தைப் பேணிக்காத்துப் போதிப்பவைகளாக அமைய வேண்டும். அத்துடன் பொதுமக்களிடையே நீதியையும் பண்பாட்டையும் வளர்க்கும் முறையில் திருவிழாக்காலங்களில் பக்தர்களுடைய திவ்விய சீவிய சரித்திரங்களையும், நாயன்மார்களுடைய ஞானோபதேசங்களையும் பிரசாரஞ் செய்ய ஆவன செய்யவேண்டும். மேற்கூறிய கருத்துக் கிணங்க பிரசாரசபைகள் தம்மாலியன்ற கைங்கரியங்களை ஆக்கபூர்வமாகச் செய்து வரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூல் உபநிடதம் எக் காலத்தில் ஆக்கப்பட்டது என்பது தெரியவில்லை. இதன் தமிழ் நடை இலக்கண அமைப்புக் கொண்டது. இதன் மூலம் இலக்கணப் பரீட்சயம் உள்ளவர்கள தவிர மற்றவர்களால் பொருள், கருத்து விளங்கிக் கொள்வது கடினமாக உள்ளது. இக்கருவூலத்தினனை ஆத்மீக தாகம் உள்ளவர்கள் விளங்கிக் கொள்வதன் அவசியம் கருதி, பாக்களின் சந்தி பிரிக்கப்பட்டு விளக்கமும் பிரிக்கப்பட்டுள்ளது. பொருள் விளங்கிப் படிப்பது அவசியம். வேதாந்த மெய் இயல் சொற்களின் கருத்தினைப், பொருளினை, துறைசார், வாலறிவுடையோர், ஞானகுருவிடம் தக்க முறையில் விசாரம் செய்தல் அவசியம். அனுக்கிரம் சித்திக்க, உட்பொருள் அனுபவம் சித்திக்கும், அத்துவித அனுபவம் சித்திக்க, திருவருட் கடாட்சம் அனுக்கிரகிக்க, சாதனை செய்யவேண்டும்.

ஸ்ரீ சிவ குருநாத பீடம் இலங்கையின், அதி உன்னத, ஆன்மீக அறிவுப் பீடம் பிரம்ம வித்தை, மெஞ்ஞான ஆத்ம ஞான தாகம் உடையவர்களுக்கு ஞான கங்கை எனத் திகழ்ந்து, யாழ்ப்பாண ஞான பரம்பரையினை உருவாக்கியது. யாழ்ப்பாணத்தின் பெருமையின் ஊற்றுக்கண். நல்லோர்களை, வல்லோர்களை, ஒருங்கிணைத்து யாழ்ப்பாண அறிவு, கல்விப் பரிணாமத்திற்கு வழிசமைத்த ஆன்மீக ஞான மூலம்.

ஆன்மீக நெறியாளர் மூன்நிறுத்தப்படும் நிலை ஏற்பட, இலங்கைத் தமிழர்கள் வாழ்வு மீண்டும் சிறப்படையும். இது சத்தியம். எம்மைப் பீடித்த பீடைகள் ஒழிய பிரம்ம சொரூபன், குருபரன், ஸ்ரீ சிவ குருநாத குரு பீட, அருள் ஞான வள்ளல்கள் ஆசிவேண்டி பிரார்த்தனை செய்வோம். காலம் மாறும். மறுபடியும் குருபீடம், பீடைகள் ஒழிந்து நல் மாற்றத்திற்கான வழிசமைக்க, ஊற்றாக எல்லோரும் பிரார்த்திப்போம்.

ஆத்மீகப் பாதையில் முன்னேற விரும்பும் அன்பர்கள் இதனை அமைதியுடன் கற்று விளங்கிச், சாதனையை நல்ல முறையிற் செய்பவர்கள் உள்ளத்திற், சுயஞ்சோதி உதயமாகும். கருணாகர சுவாமிகள் அருளிச் செய்த உபநிடதம் என்னும் இந் நூலை, ஸ்ரீ சிவகுருநாதகுரு பீட அறக்கட்டளை வெளியிடுகிறது. இதனை மெய்யன்பர்கள் மன அமைதியுடன் கற்றுத் தெளிந்து முறையாகச் சாதனை செய்து நன்னிலையடைவார்களாக! சுபம்.

**ஸ்ரீ மத்-பரஞ்சோதி**
**தத்துவ ஆசிரியர்,**
**ஸ்ரீ சிவ குருநாத குருபீடம்**
**அறக் கட்டளை**

**18-01-2008**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சிவஞான விளக்கம்

## சற்குருவணக்கம்

**அழியா அவித்தை அழிந்தொழிய ஞான**
**விழியால் எரிக்கும் விமலன் - மொழியதனை**
**நெஞ்சே நினைந்துருக நீங்காக் குருபரன்றன்**
**கஞ்சமலர்த் தாளே கதி.**

**தூய குருவருளே தோன்றாத் திருவருளில்**
**தோய வழிகாட்டுந் துன்பகல - நேயமுடன்**
**பாராது பார்த்துப் பழகியது தானாகில்**
**வாராது வன்பிறவி வாழ்வு.**

## ஞானகுருபரன் மகிமை

ஞானசற்குருவினது கருணையினாயே பரிபக்குவம் வாய்ந்த சீடனது உள்ளத்தில் தோன்றாத திருவருள் தோன்றுகிறது. அங்ஙனம் தோன்றாவிடத்து சிவஞானமும் அதன் பெறுபேறும் உண்டாதல் அரிதினும் அரிது. இதைப்பற்றிப் பின்வருஞ் செய்யுள்கள் விரிவாக விளக்குகின்றன.

**குருவரு ளாலே கூடுவ தல்லால்**
**திருவருளுறா தெனத் தெரிந்திட உரைத்தோன்**
**குருவுரு அருளெனக் கொண்டபின் குறையாப்**
**பொருண் மயமாமெனப் புகன்றிடு போதன்**

**(அருள்வாக்கிய அகவல்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே

(திருமந்திரம்)

தன்னை யறிந்து தனிவெளியுந் தானாகி
இன்பநிலை தேக்கி யிருப்பவரே - மன்னுதவ
ஞானகுரு அன்னவரை நம்பியருள் பெற்றக்கால்
ஈனப் பிறவி யிறும்.

குறிப்பு:-

தனிவெளி - சிதாகாசம் (ஞானாகாசம்)
தேக்கி - நிறைந்து,
மன்னுதவ - நிலைபெற்றதவத்தையுடைய
பிறவி இறும் - பிறப்பு நீங்கும்.

தூய குருவருளே தோன்றாத் திருவருளில்
தோய வழிகாட்டுந் துன்பகல - நேயமுடன்
பாராது பார்த்துப் பழகியது தானாகில்
வாரது வன்பிறவி வாழ்வு.

ஞான சாஸ்திரங்களைப் படிப்பதனால் உண்டாகும் ஞானம் அபரஞானம், சிவஞானமல்ல. கர்த்தாபோக் தாத்தன்மை அபரஞானத்தினால் நீங்காது, அநுபூதி ஞானத்தினாலேயே நீங்கும்.

ஞானசாஸ்திரங்களால் உண்டான அபரஞானத்தையும் யுக்திக்குப் பொருந்துமாறு காட்டுதற்கு ஞான சற்குரு சகாயம் வேண்டும். சகாயமின்றேல் சீடன் பொருளல்லவற்றைப் பொருளெனக் கருதி மருளுறுவன். இதுகூடும். இது கூடாதெனத் தன்னறிவில் பொருத்த முறத்தோற்றுவது யுக்தி யெனப்படும். எத்தனையோ விஷயங்களை உபசாரமாகச் சாஸ்திரங்கள் கூறுகின்றன. அவற்றின் அந்தரங்கக் கருத்தை ஞானசற்குருவினது உதவியின்றி அறியமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானசற்குரு வாயிலாகத் தத்துவார்த் தங்களைக் கேட்டாலால் உண்டாவது பரோக்ஷ ஞான மெனப்படும், அ:.தாவது குரவன் வாக்கியத்தால் தன்னைத் தேகாதி தத்துவங்களுக்குச் சாட்சியாய் விளங்கும் ஆன்மசொரூப மெனவும், அது எத்தகைய தாயிருக்குமெனவும் நிச்சயிக்கும்ஞானம். இப்பரோக்ஷ ஞானத்தினால் வஸ்துநிச்சயம் விளங்கும்.

வஸ்துநிச்சயத்தைக் குருமுகமாய் அறிந்தபின்பு ஞானசாதனையின் முதிர்ச்சியால் உண்டாவது அபரோக்ஷ ஞானம். கேட்ட அளவாக நில்லாது தானே நேரிற் கண்டறிவது அபரோக்ஷ ஞானமெனப்படும் (அநுபூதி ஞானம்). ஞானவதிகாரி ஏகமெனலைச் சொல்லாற் கணியாது கண்ணாற்காணதி துணியின் அதுபயன்படும். கேட்டவண்ணம் பாவித்தல் பாவனையோகம், பாவித்த வண்ணம் நேரேகாண்டலைத்தான் ஞானகதப் பிரத்தியட்சமென்பர். பிரத்தியட்ச ஞானத்தால் அஞ்ஞானம் நாசமாம், அனைத்துஞ் சின்மாந்திரமாக விளங்கும். விளங்கவே அயலெனல் ஏது? இதுவே பரஞானம், பர ஞானத்தால் விளைவது சிவானந்தம். அபரோக்ஷ ஞானத்தைப் பற்றியும் அதனால் ஏற்படும் பயனைப்பற்றியும் பின்வருஞ் செய்யுள் விளக்குகிறது.

**தத்துவ விசாரஞ் செய்து சகல சந்தேகமும் போய்**
**அத்துவிதந் தானாதல் அபரோக்ஷ ஞானமாகுங்**
**கர்த்தனாஞ் சீவ பேதங் கழிவதே துக்கம் போதல்**
**முத்தனாய் எல்லாஞ் செய்து முடிந்தது ஆனந்தமாமே.**

**(கைவல்லிய நவநீதம்)**

மேற்கூறிய அநுபூதிநிலைகள் ஞான சற்குருவினது சகாயத்தால் உண்டாகின்றன. பரிபக்குவ முள்ள சீடன் காலக்கிரமத்தில் தன்னை மோனப்பொருளாகவே கண்டு திடங்கொண்டு சகல நிலையில் வாழ்கிறான். இதைப்பற்றிப் பின்வரும் நேரிசை வெண்பா கூறுகிறது:-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய அநுபூதிநிலைகள் ஞான சற்குருவினது சகாயத்தால் உண்டாகின்றன. பரிபக்குவ முள்ள சீடன் காலக்கிரமத்தில் தன்னை மோனப்பொருளாகவே கண்டு திடங்கொண்டு சகச நிலையில் வாழ்கிறான். இதைப்பற்றிப் பின்வரும் நேரிசை வெண்பா கூறுகிறது :-


**உள்ளுணர்வே உற்றுணரில் ஓயாச் சுயஞ்சோதி**
**உள்ளமதைக் கொள்ளைகொண் டோங்கிநிற்குந் - தெள்ளமுத**
**ஊறியெங்கு மூடிடுமே மோனசிவம் தானெனவே**
**தேறி இருத்தல் சிறப்பு.**

என்றும் எவ்விடத்தும் இன்புற்றிருக்கும் முறையைப் பாடல் இனிதாக எடுத்துக் கூறுகிறது. அன்பர்கள் ஞானசற்குருவினது கருணையால் அவ்வண்ணம் இருந்து பெறுதற்கரிய பேற்றைப் பெற்று வாழ்வார்களாக!

**எங்கு மிருப்ப திறையருள் பூரணம்**
**அங்கு தங்கிட வானது மங்களம்**
**பொங்கி விளைந்தது பூரண மங்களம்**
**எங்குந் தங்குக எய்து மங்களமே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அகண்டாகார நித்த / முக்த

# ஸ்ரீ மத் இராமலிங்க சுவாமிகள்

ஸ்ரீ சிவ குருநாத குருபீடாதிபதி

**1942 - 1968**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நித்த முக்த சுத்த அத்வைத
பிரம்ம ஸ்ரீமத்

# அருணாசல சுவாமிகள்

தாங்காமல் வையகத்தை அழிக்கும் வேந்தர்
தரணியில் பலருள்ளார் தருக்கி வீழ்வார்
ஓங்காமல் அஞ்சாமல் இடர் செய்யாமல்
என்றுமருள் ஞானியரே எமக்கு வேந்தர்.

– பாரதியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்.
பரபிரஹ்மணேநம:

# உபநிடதம்.

## மூலமும் உரையும்.

### பாயிரம்.

விநாயகவணக்கம்.

**அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.**

மெய்யுடைய வடியார்மேல் விருப்புடையான்
கருப்பூர விளக்குப் போலென்
பொய்யுடைய வருள்போதப் பொருளுடையா
னருளுடையான் பொறியைந் தாலு
மையுடைய மனத்தாலு மயக்குடையார்
மதங்களைத்தா மதங்க ளாக்குங்
கையுடைய முகமுடையா னகமுடையான்
றனைக்கருத்தி லிருந்தல் செய்வாம்.

**மெய் உடைய அடியார் மேல் விருப்புடையான்
கருப்பூர விளக்குப் போல் என்
பொய்யுடைய அருள் போதப் பொருளுடையான்
அருளுடையான் பொறி ஐந்தாலும்
மையுடைய மனத்தாலும் மயக்குடையார்
மதங்களைத் தாம் அதங்களாக்குங்
கையுடைய முகமுடையான் அகமுடையான்
தனைக் கருத்தில் இருந்தல் செய்வாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்)

**மெய்யுடைய அடியார் மேல் விருப்புடையான் கருப்பூர விளக்கு போல (என்), பொய்யுடைய வருள் போதப் பொருளுடையான் அருளுடையான். :-** — மெய்யெனப்படுவது யாதோ அதனையே இயல்பாக உடைய அடியார்கள் மேல் மாறாத விருப்பமுடையவன், கர்ப்பூரத் தீபம் போல எனது பொய்யாகிய பிராந்தி அனைத்தும் ஒருங்கே நசிக்க அநுக்கிரகிக்கத் தக்க மெய்ஞ்ஞானப் பொருள் உடையவன், யாவர் பாலுங் கருணையுடையவன்,

**பொறி ஐந்தாலும் மையுடைய மனத்தாலும் மயக்குடையார் மதங்களைத் தாம் அதங்களாக்குங், கையுடைய முக உடையான் அகம் உடையான் தனைக் கருத்தில் இருத்தல் செய்வாம் :-** — அந்தர் முக நோக்கிழந்த ஐம் பொறிகளாலும் மனத்தினாலும் அல்லவற்றை ஆமெனக் கொள்ளும் மயக்கமுடையோராகிய மதத்தரெனப்படுவர்கள் யாவர்களோ அவர்களது கொள்கைள் அனைத்தையும் அஞ்சாது நாசப்படுத்துந் துதிக்கை முக முடையவன், அவரவரது உள்ளங்களைத் தன்பாலுடையவன் யாவனொ, அவனை விடாது எமது அகத்தில் வைக்குதும்.

ஏனைய விளக்கென்னாதது, மருளைக் கரைக்கத் தக்கது **ஞான தீபமாதலினென்க** : புறக் கரணம் அகக் கரணம் போல்வதின், மையுடைய வெனலைப் பொறிக்குங் கொண்டாம். மதத்தரது கொள்கைகளை அதங்களாக்கல் - பூர்வபட்சமாதற் கியைந்த சித்தாந்தங்கள் எனக்காட்டலை. கையுடைய முகமுடையான் என்றது இந்நூலாசிரியர் சைவராதலினானும் வழிபடு கடவுளாகிய உபாசனா மூர்த்தமாதலினானு மென்க. அவரவர் உபாசனா மூர்த்தத்தாலன்றி அவரவர் கற்பனைகள் அறா அதலின், கருத்திலிருத்தல் செய்வாம் என்றார். வாளா மதங்களென்னாது மயக்குடையாரென அடைமொழி கொடுத்தது ஞானகதப் பிரத்தியட்சமின்மை பற்றி. **விருப்புடையான் போதப் பொருளுடையாள் அருளுடையாள் கையுடை முகமுடையான் அகமுடையானெனல்** ஒரு பொருளைக் குறித்தென்க. நூல் உரைக்குமிடத்து நூற்பெயரும், காரணமும், ஆக்கியோன் பெயரும், அளவும், பயனும்பட உரைக்கற்பாற்று. அற்றேல், இந்நூல் என்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்த்தோவெனின், ஆரியத்திலிட்டவாறு உபநிடத மென்னும் பெயர்த்து, யாது காரணத்தாற் போந்ததெனின், தானெனல் அயலாகாதிருத்தற்கு. இதனை ஆக்கியோன் யாவனெனின், ஆரியமென்னும் பாரிரும் பௌவத்தை உண்டு, தமிழ்ப்படுத்திய போதக்கண்ணகலாக் **கருணாகரனென்னும்** ஆசிரியனால் செய்யப்பட்டது. இந் நூல் எவ்வளவைத்தோ எனின், ஆரியத்தில் தொகுக்கப்பட்டவாறு முப்பத்திரண்டளவினது. இதனாற் பயன் யாதோவெனின், துக்க நிவிர்த்தி, தடையற்ற ஆனந்தம், இம்மையிற்றானே தப்பாது உறுதலே பயனெனப்பட்டது. இத் தலைச் செய்யுள் என் உதவிற்றோ எனின், தற்சிறப்புப்பாயிர முணர்த்துதனுதலிற்று, என்னை ''தெய்வ வணக்கமுஞ் செயப்படு பொருளு, எய்தவுரைப்பது தற்சிறப்பாகும்'' என்றாராகலின். கருப்பூரவிளக்குப் போலென் பொய்யுடைய அருள்போதப் பொருளுடையா னென்பது உபாசனா மூர்த்தமாதலின் இந் நயம் எமக்கு உறுமென்பது கருதி வணங்கிய தென்க.

குரு வணக்கம்.

நானிவன்றா னவனென்றே நவின்றறியா
தேயுழன்ற நாயி னேற்குத்
தானமரு நிலையிதுவே தாந்தவுப
சாந்தமிது தானே தானா
மோனமொழி யிதுவெனநான் மறையினுப
நிடதமொழி யிதுவென முடிவு காட்டு
ஞானகுரு தேசிகனை நாவகத்தும்
பாவகத்து நவிற்று வாமே.

**

**நான் இவன் தான் அவனென்றே நவின்று**
**அறியாதே உழன்ற நாயினேற்குத்**
**தான் அமரும் நிலையிது வேதாந்த**
**உப சாந்தம் இது தானே தானாம்**
**மோன மொழி இது வென நான் மறையின்**
**உப நிடத மொழியிது என முடிவு காட்டும்**
**ஞான குரு தேசிகனை நாவகத்தும்**
**பாவகத்து நவிற்று வாமே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்)

**நான் இவன்றா அவனென்றே நவின்றறியாதே உழன்ற நாயினேற்கு :-**

நான் தான், இவன் தான், அவன் தான், என்று விடாது சொல்லிக் கொண்டு மொழி தோறும் விடாது நின்றுள்ள தானென்னுஞ் சொற் பொருளைச் சற்றும் கவனியாமலே பிறவி தோறும் உழன்று திரியும் நாய் போல் பவனாகிய அடியேனுக்கு.

**தான் அமரும் நிலை இது வேதாந்த உப சாந்தம் இது. தானே தானாம் மோன மொழி இது வென :-**

தானென்னுஞ் சொற்பொருள் அந்த நிலை இதுவெனவும் வேதாந்தத்திற் கூறிய உபசாந்தநிலை இஃதெனவுந் தான் அயலாகாது தானே தானாக விளங்கும் மோன மொழி இஃதெனவும் விளங்குமாறு,

**நான் மறையின் உபநிடத மொழி முடிவு காட்டும் ஞான குரு தேசிகனை நாவகத்தும் பாவகத்து நவிற்று வாம். :-**

நான்கு வேதங்களிலும் உள்ள உபநிடத மொழிகளால் தீர்ந்த நிலை காட்டிய ஞானா சாரியனை நாக்களாலும் பாக்களாலும் விடாது துதிக்குதும்.

நான் தான், நீ தான், அவன் தான், இவன் தான், அவள் தான், இவள் தான், அது தான், இது தான் என்னுமிடத்துத் தானென்னுஞ் சொல் மொழிகடோறும் அகலாதகன்று நிற்குமாறு போன்று தானெனற்குப் பொருளாகிய அறிவானந்தம் பொருள்கடோறும் அகலாதகன்று நிற்குமாதலின், தான் அமரும் நிலை என்றார். எவ்வெவர்பாலுந் தானெனல் யாது கற்றும் அயலாதலின் நின்று அகறல் மிக்க அருமைத்தாதலின் முடிவு காட்டும் ஞான குரு தேசிகன் என்றார். வாக்கினாலும் நினைவினாலும் அன்றென்பார், தானே தானாம் மோன மொழி என்றார். நாவகத்தும் பாவகத்தும் நவிற்றல்-நிரதிசயானந்த மேலீட்டாலென்க. முடிவுகாட்டல் - எல்லாமா யல்லவுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டலை. இ∴தேனைய ஆசிரியராற் கூடாமையின், ஞானகுரு தேசிகனை என்றார். தானெனல் - ஞானா அஞ்ஞான ரகித நிலையை யென்க, ஈரிடத்துஞ் சாட்சியா நிற்றலின்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவையடக்கம்

ஓதுசுரு திகணான்கி னுபநிடத
மெண்ணான்கி னுரைக டோய்ந்து
போதுமொரு வேதாந்த சொரூபானந்
தப்பெயரைப் புனைந்த நூலி
னீதிபெரி யோருரைப்ப வதனையன்பொன்
றில்லாத நெஞ்சி னால்யா
னாதரவு கொடுபிதற்றி யெனதறியா
மையையும் வெளி யாக்கினேனே.

**ஓது சுருதிகள் நான்கின் உபநிடதம்**
**எண் நான்கின் உரைகள் ஆய்ந்து**
**போது மொரு வேதாந்த சொரூபானந்தப்**
**பெயரைப் புனைந்த நூலின்**
**நீதி பெரி யோருரைப்ப அதனை**
**அன்பொன்றில்லாத நெஞ்சினால் யான்**
**ஆதரவு கொடு பிதற்றி எனது**
**அறியாமையையும் வெளியாக்கினேனே.**

**(இதன் பொருள்)**

**ஓது சுருதிகள் நான்கின், உபநிடதம் எண் நான்கின் உரைகளோடு ஆய்ந்து :-** சான்றோர் அத்தியயனஞ் செய்தற்கியைந்த நான்கு வேதங்களிலும் முப்பத்திரண்டு உபநிடதங்களிலு முள்ள சொற் பொருளோடு அகலாது நின்று,

**போது மொரு வேதாந்த சொரூபானந்தப் பெயரைப் புனைந்த நூலின், நீதி பெரியோர் உரைப்ப அதனை அன்பொன்றில்லாத நெஞ்சினால் :-** மாறின்றி வருகின்ற ஒப்பற்ற வேதாந்த சொரூபானந்த மென்னும் பெயரைத் தரித்த ஞான நூலின் வாச்சியார்த்த லட்சியார்த்த நெறியை மகத்துக்கள் சொல்ல அந் நிலையை அந் நெறித்தாகச் செல்லும் அன்பு சற்றுமில்லாத மனதினால்,

**யான் ஆதரவு கொடு பிதற்றி யென் அறியாமையையும் வெளியாக்கினேனே :-** — மிக்க திறமையுடையோன் போல் யான் ஆசை கொண்டு பாடலாகப் பிதற்றி அதனோடு எனது அறியாமையையும் பிறர் அறியச் செய்தனன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பொழிப்பெனப் படுவது பொருந்திய பொருளைப், பிண்டமாகக் கொண்டுரைப்பதுவே'' என்பதனால் பொழிப்புரையாக்கினாம், இஃது உரையாசிரியர் தொல்லை மரபாதலின். வேதம் நான்காவன் :- இருக்கு, தைத்திரியம், (யசுர்) சாமம், அதர்வண மென்பன. உபநிடதம் எண்ணான்காவன:- சீருத்திரம், பிரகதாரண்ணியம் முதலியன. சொரூபாநந்தமாவது ஞெப்திப் பிரியத்தை. எனவே, அறிவானந்தமாயிற்று, ஆகவே, அறிவின்றி, ஆனந்தமும் ஆனந்தமன்றி அறிவுமின்றாம். உண்டெனின், உபாதி ரகிதத்தால் எங்ஙனம் இயையும்? சகிதத்தால் எனின், அறிவானந்தம் போல் உபாதித் திரயங்கள் சச்சிதானந்தமாதற்கு இயையாவென்க. ஆதலின் ஏகமெனக் கண்டாம். காணவே, எகமேவாத்வைதம் பிர்ஹமோகம் என்பதே துணிவெனப் பெற்றாம், பிதற்றலாவது எழுத்தாசை முதலிய எண்ணில் இலக்கணங்கட்கு முரணுதலாம். எனது அறியாமையாவது ஆதி மத்தி அந்த ரகிதத்திற்குச் சகிதமாகக் கூறுமிலக்கணம் முரணுதலாம். வெளியாக்கல் என்பது பாடுதற்கும் இந்த விஷயத்தை ஆளுதற்கும் பாத்திரனல்லன் என்பதைக் குறிப்பிக்கின்றது. எனவே, பாத்திரர் நீதி பெரியோரென்றாயிற்று. ஆதரவு கொடு என்றதனால் அஃதகங்காரத்தால் அன்றெனக் குறிக்கின்றது. அறியாமையையும் என்பதில் உம்மை இறந்தது தழீஇய இழிவு சிறப்பு. இந்நூல் அவன் அருளால் அமைந்ததெனக் குறிப்பிக்கின்றது அருத்தா பத்தி. (3)

## பாயிர முற்றிற்று....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்.

## ஞானசாதன நிலை.

### எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

பொன்போல விலங்குமனஞ் சஞ்சலத்தாற் குரங்காம்
புத்திவிசா ரித்தறியும் பொலிவதனா லரவாந்
தன்போல விலையெனலா லகங்கார மதமாத்
தனைநிகராஞ் சித்தமொரு தன்மையினா னாயா
மின்போலுஞ் சலனமன மசையாம னிறுத்தி
விசாரிக்கும்புத்தியினை மெய்ப்பொருட்பால் விடுத்து
வன்போடு வருமகஙடகா ரத்தினையுங் கடிந்தால்
வைத்தவிடத் திருத்துசித்த மகத்துவமுந் தருமே.

**பொன் போல விலங்கு மனஞ் சஞ்சலத்தாற் குரங்காம்**
**புத்தி விசாரித்து அறியும் பொலிவதனால் அரவாந்**
**தன் போல் இலை யெனலால் அகங்கார மதமாம்**
**தனை நிகராஞ் சித்தமொரு தன்மையினால் நாயாம்**
**மின் போலுஞ் சலன மன மசையாமல் நிறுத்தி**
**விசாரிக்கும் புத்தியினை மெய்ப் பொருட் பால் விடுத்து**
**வன் போடு வரும் அகங்காரத்தினையுங் கடிந்தால்**
**வைத்த விடத் திருத்து சித்த மகத்துவமுந் தருமே.**

**(இதன் பொருள்)**

**பொன்போல விலங்கு மனஞ் சஞ்சலத்தாற் குரங்காம் புத்தி விசாரித்தறியும் பொலிவதனால் அரவாம் :-** — மாற்றுயர்ந்த பொன் போல மலரகிதமாக விளங்கும் மனமெனப்படுதல் யாதோ அது பகிர் முகத்தாய வழி இயல்பாக வெய்துஞ் சஞ்சலத்தினால் குரங்கு போல்வதாகும், அதன் திரிபாகிய புத்தி எனப்படுவது காரியங்களை விசாரித்தறியும் மிகுதியினால் அரவு கட்செவி போல்வதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தன்போல இலையெனல் அகங்கார மதமாத் தனை நிகராஞ் சித்த மொரு தன்மையினால் நாயாம் :-** — ஏது அப்புத்தியின் திரிபாகிய அகங்காரமெனப் படுதல் தன்னைப்போல ஒருவருஞ் சமானமில்லை யெனக் கோடலால், மத யானை போல்வதாகும். அவ் அகங்காரத்தின் திரிபாகிய சித்த மெனப்படுதல் இழிவில் தனக்குத் தானே நிகரெனப்படும் ஓர் ஏதுவினால் நாய் போல்வதாகும்.

**மின்போலுஞ் சலன மனம் அசையாமல் நிறுத்தி விசாரிக்கும் புத்தியினை மெய்ப் பொருட்பால் விடுத்து :-** — மின்போலத் தோன்றி மறைத்து அலையுங் கணமேனு நில்லாது சலித்தலையு இயல்பாகவுடைய அந்த மனதை அந்தர் முகத்தாய வழிச் சற்றுஞ் சலியாமல் நிறுத்திப் பொய்ப் பொருளையே நிஜமென விசாரித் துழலும் புத்தியெனப் படுவதை மெய்ப் பொருளாகிய சைதன்யத்தின்கண் விசாரிக்க விடுத்து,

**வன்போடு வரும் அகங்காரத்தி னையுங் கடிந்தால், வைத்தவிடத் திருத்து சித்த மகத்துவமுந் தரும் :-** — விடய வலிமை கொண்டு பிறந்திறந்து வருதற்குரிய அகங்காரத்தையும் நாசப்படுத்தினால் சித்தமெனப்படுவது விசாரித்திலக்காக வைத்த அந்தச் சைதன் யத்திடத்தில் பிறழாதிருந்து நவ நவமாய மேலாய நிலைகளையும் ஏகமாக நிற்கு மகத்துவத்தையுந் தந்தே விடும்,

பொன் போல விலங்கு, மனமென்பது முதல் நாயா மென்பது காறும் விஸ்மரணையெனவும், மின்போலுஞ் சலன மனமென்பது முதல் சித்த மகத்துவமுந் தருமென்பது காறும், தஸ்மரணை யெனவுங் கொள நின்றது. ஓர் ஸ்மரணையே யெனக் குறிக்க, அத்தியாரோப, அபவாத புத்தியை இக்கவி காட்டிற்றென்க. சஞ்சல முதலிய புடைபெயர்ச்சிகளை உன்னுமிடத்துத், தொழில் சாதாரண தர்மமாகக் காண்டலில், இந் நான்குவமையும் பொருந்தும். இந் நான்கு புடைபெயர்ச்சியும், ஒவ்வொர் முதலினதாகக் காண்டலேயன்றி, விசாரிப்புழி யின்றாதலின், மனமுதலிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கும் அவ் அவ் அவசர நிலையாமென்க. கண்ணே செவியாகச் சகல மந்திரங்களையும் அறிதலால் **பாம்பையும்,** கஞ்சிவார்க்கிறவன் பின்னே திரிதலால் **நாயையும்,** உவமையாகக் கூறியவாறு காண்க. நிறுத்தி விடுத்து கடிந்தால் தருமெனக் கூட்டி முடிக்க. மகத்துவம் என்பதிலுள்ள உம்மை இறந்தது. தழீஇய வெச்சவும்மையாதலால் நவ நவமாய மேலாய நிலைகளென்றாம். ஞானம், மனம், புத்தி, சித்தம், அகங்காரமென்பவற்றுள், ஞானமயமாய வழிச் சஞ்சல முதலிய நான்கு புடை பெயர்ச்சியையும் ஏற்று அவ்வவற்றிற்கு வினைமுதலாக மன முதலிய நான்கையுங் கொண்ட வாறெங்ஙனமோ அது போலப் பொன் போல இலங்குதலாகிய புடை பெயர்ச்சியை யேற்று வினை முதலாக நிற்பது ஒன்றுளதாகக் கோடல் வேண்டுமாதலின் **ஞானமென்றும்,** அன்றேல், இலங்குதல், யாதின் புடை பெயர்ச்சி? பொன் போல வெனல் யாதிற்கு உவமானக் கோடற்கு முரணென்னை? பொன் போலிலங்கல் மனமெனற்கு விசேடமா நிற்பதெனின், அவ் அவசரஞ் சுத்த மனமெனலாயிற்று. ஆகவே, **ஞானமென்றும்,** மருளாய வழி மருண் மயமாதலுந், தெருளா வழித் தெருண் மயமாதலும் ஞான மாதலினொக்கும். தன் மருளை யன்றி அநிர்த சடதுக்கமும், தன் தெருளை யன்றிச், சத்துசித்தானந்தமும் இல்லையாதலின் **ஞானமெனற் ஐயமின்றென்க,** ஊர்த்த முகமாய வழி மன முதலிய நான்கு பேரு மத்தியாச மென இயைதலின் அத்தியாரேப மெனவும் இவை யனைத்தும் விசாரித்துத் தெளிந்துழித் தானாக்காண்டலின் அபவாத மெனவும் போந்தவாறு காண்க. மெய்ப் பொருள் என்றதனால் பொய்ப் பொருளென வருவித்தாம் பொய்ப் பொருளிலங்கு கொது கிலக்கையும், மெய்ப் பொருளிலக்கு மலையிலக்கையும் போல்வதாதலின், புத்திதனை **மெய்ப் பொருட்பால்,** விடுத்து எனப்பட்டது. அகங்காரத்தினைக் கடிதலாவது ஞானகதப் பிரத்தியட்சத்தில் சதோதயமாக விளங்குஞ் சைதன்யத்தை இடைவிடாது கண்டு, இது நானிது நானெனப் பழகுங்கால், முன்போல உடல் நானென வந்துழி அதனைக் கடித்து கோடலை, அறிவே வடிவாயிருக்க வேண்டுதலைப் பற்றி. மலை யிலக்குப் போல்வதினால் வைத்த விடத்திருந்து சித்தம் மகத்துவமுந் தருமெனற்கு முரணென்னை? இன்றாதலால் எவர்க்கு முடன்பாடாமென நோக்கி இங்ஙனங் கூறினாரென்க. வாளா புத்தி யென்னாது, விசாரிக்கும் புத்தி என்றதனால் நம்பிக்கையால் இது மெய்ப்பொருளெனக் கோடற்க. கொள்ளின், பூர்வபட்சத்திந்கியையும், இயையின், முன்போல அநிர்த சட துக்கத்தைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சச்சிதானந்தமாகக் கொண்டலைய வேண்டி வருமென்க. விசாரித்தற்கு இயைந்த கருவி சிரவண முதலியவை.

இவ் உப நிடதத்தின் ஒவ்வொரு கவியும் அணுவைத் துளைத் ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்து போலு மாதலின் இந்நூலை உணரப்புகுவார் கல்வி கேள்விகளில் எத்துணையராய் இருக்க வேண்டும்? ஆதலின் இறுமாக்காது அடங்க வேண்டும்.

## இதனை இஃதறியும் எனல்.

**அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.**

சத்தம் முதல் ஐந்தனையும் பொறிகளறியும்
பொறிகள் தம்மைத் தானா
யொத் தகரனம் அதறியுங் கரணத்தை
யறியும் உயி ருயிரைத்தானு
நித்தியமாய் இருந்தறியுஞ் சாட்சி அகண்
டாகார நீங்கி மேலா
இத்தனையும் பகுத்தறியு மறிவு வடி
வாயிருப்ப தியல்ப தாமே.

**சத்தம் முதல் ஐந்தனையும் பொறிகள் அறியும்**
**பொறிகள் தம்மைத் தானாய்**
**ஒத்த கரணம் அதறியுங் கரணத்தை**
**அறியும் உயிருயிர் உரைத்தானும்**
**நித்தியமாய் இருந்தறியுஞ் சாட்சி**
**அகண்டாகார நீங்கி மேலாம்**
**இத்தனையும் பகுத்தறியும் அறிவு**
**வடிவாயிருப்பது இயல்ப தாமே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்)

**சத்தம் முதல் ஐந்தனையும் பொறிகளறியும் பொறிகள் தம்மைத் தானாய ஒத்த கரணம் அறியும் :-** — சத்த பரிச முதலிய ஐந்து விடயங்களையும் நேரா நின்று அதற்குரிய பொறிகளறியும், அங்ஙனம் அறியும் அப் பொறிகளை அவை தானாக ஒத்து நின்ற அந்தக் கரணமாகிய மனம் அறியும்,

**கரணத்தை அறியும் உயிருயிரைத் தானும் நித்தியமாய் இருந்தறியுஞ் சாட்சி:-** — அந்த மனதை உயிரறியும், அந்த உயிரையுஞ் சீவசாட்சி சதோதயமாக நின்றறியும்.

**அகண்டாகாரம் நீங்கி மேலா இத்தனையும் பகுத்தறியும் அறிவு வடிவாய் இருப்பது இயல்பதாம். :-** — அந்த சீவசாட்சியை அகண்டாகாரமாய் நின்றுள்ள ஈசுர சாட்சியாகிய பிரமம் அறியும், அந்த ஈசுர சாட்சியாகிய பிரம நிலையுங் கழன்று அததற்கு மேல் மேலாக நின்று இத்தனை நிலைகளையும் ஒவ்வொன்றாகப் பகுத்தறிய நின்றது எந்த அறிவோ, அந்த அறிவே வடிவாக இருப்பது நமது சுபாவ நிலையாம்.

இந்திரியம், கரணம், சீவன், கூடஸ்தன், ஈசன், பிரமம், அறிவு என்பவற்றுள், அறிவொழிய ஏனையவற்றுள், ஒவ்வொன்றும் ஒன்றுக்குத் திருக்காயும் மற்றொன்றுக்குத் திருசியமாயும் இருத்தற்கு இயையுமாறு போன்று அறிவு இயையாதிருத்தலின், இத்தனையும் பகுத்தறியும் அறிவு வடிவாயிருப்பது இயல்பதாம் என்றார். எனவே, அறிவையன்றி இத்தனை பகுப்பும் இன்றென்பதாயிற்று. ஆகவே, இத்தனை பகுப்புகளுள் ஒவ்வொன்றையும் அவரவர்க்கெட்டிய அளவாகச்சென்று தீர்ந்த நிலையென இறுமாந்திருத்தலைத் தவிர்ந்து இருத்தற்கெனக் கண்டாம். அறிவின் பிரதிபலனமேயன்றி அறிவுத் திருக்கு திருசிய மெனற்கு இயையாதது பற்றி, இங்ஙனங் கூறினாரென்க. சத்த முதலிய ஐந்து விடயங்களுள் ஒவ்வொன்றுக்கும் அதற்குரிய இந்திரியங்களிருக்குமாறு போன்று அப் பொறிகளை அறிதற்கு, மனம் ஐந்தலை நாகம் போல் அவை தானாயிருத்தலினானுந், தன்னையன்றி அப்புலன்களிருந்துந் தத்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களை அறிதற்கேலாததானும் பொறிகள் தம்மைத் தானாயொத்த கரணமது என ஒருமையிற் கூறினார். இங்ஙனம் எவ்வெவர்பாலும் அனுபவம் நிகழ்தலாலென்க. பொறிகள் தம்மையெனப் பன்மையிற் கூறிக் கரணத்தையென ஒருமையிற் கூறியது தக்க உதாரணமெனக் கண்டாம். உபாதி பற்றி ஏக தேசாகாரம் உயிரெனவும் அகண்டாகார ஈசன் எனவும், சாட்சி எனல் பற்றிக் கூடஸ்தன் எனவும், உரைகொண்டாம். அகண்டாகாரம் என்றதனால் ஏக தேசாகார மெனற்கு முரணென்னை? சாட்சி யெனலால் இருவகைச் சாட்சி யெனக் கோடற்கு மாறென்னை? இந் நிலைகள் அனைத்தும் பூர்வ பட்சமாதற்கு யோக்கியதையா நிற்றலின், நீக்கி என்றார். எவரெவர் எந்தெந்த மேலாய நிலைகள் சொல்லினும் இவற்றுள் அடங்குமாதலினானும் அங்ஙனம் அந்தந்த நிலையாய் அந்தந்த அவரசத்தில் இருப்பது தானாதலினானும் நீக்கி யெனப் பிற வினையாக் கூறாது நீங்கி என்றார். இதனால் அண்டாகாரம் ஐந்தாம் வேற்றுமை நீங்கற் பொருள் தர நின்றதெனப் பெற்றாம். நித்தியமாய் இருந்தறிதல் சாட்சிக்கு இயல்பாதலின் இருவகைச் சாட்சியென்றாம். (2)

## தம்மாலறியப்படுபவை தாமாகாவெனல்.
## (தம்மால் அறியப்படுபவை தாமாக எனல்)

**எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.**

விடையம் அறிந் திடும் பொறிகள் விடய மாமோ
மிக்க பொறி யறி கரணம் பொறிக ளாமோ
வடையவறி சீவனந்தக் கரண மாமோ
வதனை யறிந் திடுஞ்சாட்சி சீவனாமோ
தடையற வொன் றனை யறிவு மொன்று மேலாஞ்
சாட்சியை யொன்றால் அறியத் தகுமோ தானா
யிடையற வொன் றிலகு மெனி லதனைக் காண்டற்
கேது ண்டா மதுவாகி யிருந்து காணே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடையம் அறிந்திடும் பொறிகள் விடயம் ஆமோ
மிக்க பொறி அறி கரணம் பொறிகள் ஆமோ
அடைய அறி சீவன் அந்தக் கரணம் ஆமோ
அதனை அறிந்திடுஞ் சாட்சி சீவனாமோ
தடையற ஒன்றனை அறிவு ஒன்று மேலாஞ்
சாட்சியை ஒன்றால் அறியத் தகுமோ தானாய்
இடையற ஒன்றிலகும் எனில் அதனைக் காண்டற்கு
ஏதுண்டாம் அதுவாகி இருந்து காணே.

(இதன் பொருள்)

**விடையம் அறிந்திடும் பொறிகள் விடய மாமோ மிக்க பொறி அறி கரணம் பொறிகளாமோ :-** — விடயங்களை அறிதற்கியைந்த இந்திரியங்கள் விடயமாதற்கு இயையுமா, அங்ஙனம் மேலா நின்ற புலன்களை அறிதற்கு இயைந்த மனம் இந்திரியங்களாகுமா.

**அடைய, அறி சீவன் அந்தக் கரண மாமோ அதனை அறிந்திடுஞ் சாட்சி சீவனாமோ :-** — ஒருங்கறிதற்கியைந்த சீவனென்பது மனமாதற் இயையுமா, அந்தச் சீவனை யறிதற்கு இயைந்த சீவ சாட்சியாகிய கூடஸ்தன் சீவனாதற் இயையுமா.

**தடையற ஒன்றனை அறிவு ஒன்று மேலாஞ் சாட்சியை ஒன்றால் அறியத் தகுமோ :-** — தடையின்றி ஒவ்வொன்றனையும் அறிதற் கியைந்த ஒவ்வொன்றும் மேலாகச் செல்லு மாயின் எவற்றிற்கு மேலா நின்ற சாட்சியை வேறொன்றால் அறிதற்குத் தக்க தாமோ.

**தானாய் இடையற ஒன்றிலகு மெனில், அதனைக் காண்டற் ஏதுண்டாம், அதுவாகி இருந்து காண். :-** — தானே தானாய் இடைவிடாமல் ஒப்பற்ற சைதன்யஞ் சதோதயமாக விளங்கிக் கொண்டிருக்குமெனச் சுருதி யுத்தி அனுபவம் ஏற்குமெனில் அதனைத் தரிசித்தற்கு ஏது ஓர் முதலாக உள்ளது, இன்றாதலின் அதுவே தானாகி இருந்து காணுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஃதறிவுக் அறிவென்னு ஆகமத்தை மறுத்தது, அநவத்தாதோடம் உறுதற்கியைதலின், அறிதற் தன்மையனவாகிய புலன்கள் அறியப் படுந் தன்மையனவாகிய சத்த முதலிய விடயங்களாகுமாயின், காரணங்கள் புலன்களாகவும் ஜிவன் அந்தக்கரணமாகவுங், கூடஸ்தன் ஜீவனாகவுமாகலாம். ஆதலின் சுவானுபவம் இல்லாதார் ஜீவன் சாட்சியாகிய கூடஸ்த நிலை ஒன்றுளதாக உற்று விசாரித்தறியாது அதனை ஜீவனெனக் கோடல் தவிர்தற்கும், இவ்வாறாக மேல் மேலொன்றை ஒன்றறியுமாறு போன்று ஜீவ சாட்சியாகிய கூடஸ்தனையும் அறிதற்கு வேறொன்றிருக்க வேண்டுமே யென்று சங்கை வராததற் இயைந்த நிலை கூறி அதை மறுக்காது ஏற்றற்கு இங்ஙனங் கூறினார் என்க. சாட்சி என்றானால் அதனினும் மேலாய நிலையின் என்பதாயிற்று. ஒன்றை ஒன்றறிவதால் மேல் மேல் சேரல் புத்தி பூர்வகமும், அங்ஙனஞ் செல்ல வொட்டாது தானே அமையச் செய்வது ஞானகதப் பிரத்தியட்சா அனுபவமுமாம். அறியத் தகுமெனக் கோடல் யுத்தி பூர்வகமெனவும் அறியத் தகுமோ என மறுத்தல் அனுபவ பூர்வகமெனவுங் கோடற்கு இயையுமாறு காண்க. ஆகாயத்துக்கு, மேல் வேறாக ஆகாயமில்லாவாறு போன்றிருத்தலின், சாட்சியானது, தான் இடையற நின்றிலகுமெனில் அதனைக் காண்டற் ஏதுண்டா, அதுவாகி இருந்து காண் எனப்பட்டது. அந்தப் பிரத்தியட்சாநுபூதி இழப்பே இவ்வாறாய பேதமெனக் காட்டற்கு இக் கவி கூறப்பட்ட தென்க. எனவே அனுபூதி இல்லாவிடத்து ஐயந் திரிபறா வெனக்கண்டாம். இக் கவியிலுள்ள ஐந்தோகாரமும் எதிர் மறை. (3)

# விருத்திஞானத்திரய வியல்பு.

## விருத்தி ஞானத்தின் இயல்பு

மேயமனோ விருத்தியகண் டாகார விருத்திவிவே
கவிருத் தியொடிவையே விருத்திகண் மூன்றாகு
மாயமனோ விருத்திவிட யாஞ்ஞானம் போக்கி
யவ்விடயந் தோற்றுவிக்கு மகண்டமெனும் விருத்தி
தூயசிதஞ் ஞானத்தைப் போக்கியச் சாட்சியையே
தோற்றுவிக்கும் விவேகவிருத் தியுமகண்டாஞ் ஞானம்
போயிடச்சீ வன்சாட்சி பூரணமே தானாம்
போதநிலை பொருந்துமெனப் புகன்றிடுநான் மறையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேய மனோ விருத்தி அகண் டாகார விருத்தி விவே
விருத்தியொடு இவையே விருத்தி கண் மூன்றாகும்
ஆய மனோ விருத்தி, விடய, அஞ்ஞானம் போக்கி
அவ் விடயந் தோற்றுவிக்கும் அகண்டமெனும் விருத்தி
தூய சிதஞ் ஞானத்தைப் போக்கி அச் சாட்சியையே
தோற்றுவிக்கும், விவேக விருத்தியும் அகண்டாஞ்
ஞானம் போயிடச் சீவன் சாட்சி பூரணமே தானாம்
போத நிலை பொருந்தும் எனப் புகன்றிடு நான் மறையே.

(இதன் பொருள்)

**மேய மனோ விருத்தி, அகண்டா கார விருத்தி விவேக விருத்தியொடு இவையே, விருத்திகள் மூன்றாகும் :-** — என்றும் இயல்பாயுள்ள மனோ விருத்தி அகண்டாகார விருத்தி விவேக விருத்தி யெனக் கூறப்படும் இவைகளே விருத்தி ஞானம் மூன்றெனப்படுவனவாம்.

**ஆய மனோ விருத்தி விடயாஞ் ஞானம் போக்கி, அவ் விடயந் தோற்று விக்கும் :-** — அங்ஙனமாய மனோ விருத்தி ஞானம் எனப்படுவது கடாதி விடயங்களை மறைத்திருந்த அஞ்ஞான மிஃதெனக் காட்டி, அதனைப் போக்கி, அவ் விடயங்களின் எதார்த்த நிலைமை யிஃதென விளக்கி விடுதற்பாலதாம்.

**அகண்டமெனும் விருத்தி, தூய சிதஞ் ஞானத்தைப் போக்கி, அச் சாட்சியையே தோற்றுவிக்கும் :-** — அகண்டாகார விருத்தி ஞானம் எனப்படுவது நிர்மலமான சைதன்யத்தை மறைத்திருந்த அஞ்ஞானமாகிய அவித்தை கெடச் செய்து ஜீவனுக்குச் சாட்சியா நின்றுள்ள கூடஸ் தனை மாத்திரம் விளக்கிவிடுதற் பாலதாம்.

**விவேக விருத்தியும் மாண்டு அஞ் ஞானம் போயிடச், சீவன் சாட்சி பூரணமே தானாம், போத நிலை பொருந்தும், எனப் புகன்றிடும் நான் மறை. :-** — விவேக விருத்தி ஞானமெனப்படுவது, அகண்டாஞ் ஞானமாகிய மாயையென, இன்ன திசை எனக் காணாமற் போகச் செய்யும், செய்வது மன்றி அதனால் அம் மாயை போகவே சீவ சாட்சியாகிய கூட ஸ்தனும், ஈசுர சாட்சியாய்ப் பரிபூரணமாக விளங்கும். பிரமமுந் துவிதமுறாது ஏகமாதற் கியைந்த போத நிலையையும் வரச் செயற்பாலதாமென, நான்கு வேதங்களும் புகன்றிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடய அஞ்ஞானத்தைப் போக்கலாவது தத் தமக்கெனச் சுயம் பாயோர் பொருளின்மையைக் காட்டலை. தூய சிதஞ்ஞானத்தைப் போக்கலாவது வியட்டி உபாதி சகிதமா நின்றுணருஞ் சைதன்யம் இஃதெனக் காண ஒட்டாமல் மறைக்கும், மறைப்பு தனது ஏக தேச மருளை அன்றி வேறொன்று இன்றெனக் காட்டலை. அகண்ட அஞ் ஞானத்தைப் போக்கலாவது சமட்டி யுபாதி சகிதமா நின்றுணருஞ் சைதன்யம் இஃதெனக் காண வொட்டாமல் மறைக்கும், மறைப்பு தனது அகண்ட மருளை யன்றி வேறின்மை யெனக் காண்டலை யெனக் கொள்க. விடயாஞ்ஞானம் உள்ளவளவும், அவித்தையும் மாயையும் எங்ஙனம் அகலும்? விடயமாவது கருத்துப் பொருள், காட்சிப் பொருளாகிய திணை பாலிடங்களை. இங்ஙனம் விசாரித்துத் தெளிந்துழி, அறிவை யன்றி, விருத்தி ஞானத் திரயமும் இங்ஙனங் கோடற்கியைந்த மருளும், வரற்கிடமின்றாம். இன்றாகவே, சாட்சித் துவித பேத மெங்ஙனம் உண்டாம்? இதுபற்றிச் **சீவன் சாட்சி பூரணமே தானாம் போத** நிலை என்றார். பூரணமே யென்ற தேற்றத்தால் சீவ சாட்சியே பூரண மெனவும், **பூரணமே சீவசாட்சி** யெனவும் ஆதற்பாலதால் **தானாம் போத** நிலை எனப்பட்டது. தோற்றுவிக்குமென்பன விரண்டும் பிறவினையாதலால் பொருத்தும் எனக் கூறினார். இஃது எனது அனுபவமாத்திரமன்று, சுருதிக்கும் உடன்பாடு எனக் காட்டப் **புகன்றிடு நான்மறை** எனப் பட்டது. தூய சித் அஞ்ஞானம் **அவித்தை** யெனவுங் கோடலை மறுப்பாரும் உளர். அஃதனுபவத்தில் முரணுதற் கென்செய்வர். அது பொருந்தாதென்க. (4)

# ஞானி அஞ்ஞானி விருத்தி பேத நிலைமை.

**அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.**

மிக்க பரா தீனர்களே யுலகமெலா
மதில்விருப்பு வெறுப்பற் றோர்க
டொக்கமனோ விருத்தியணு மாத்திரமா
வறிவனண்ட சொரூப மாகு
மக்கதிக டேராதா ரறிவணுவா
மனோவிருத்தி யகண்ட மாகத்
தக்கபிரா ரத்தவசத் தவராகிப்
பிறந்திறந்து தளர்கின் றாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்க பரா தீனர்களே உலக மெலாம்
அதில் விருப்பு வெறுப்பற்றோர்கள்
தொக்க மனோ விருத்தி யணு மாத்திரமாம்
அறிவு அகண்ட சொரூபமாகும்
அக் கதிகள் தேராதார் அறிவு அணுவாம்
மனோ விருத்தி அகண்டமாகத்
தக்க பிராரத்த வசத்தவராகிப்
பிறந்து இறந்து தளர்கின்றாரே.

(இதன் பொருள்)

**மிக்க பராதீனர்களே உலகமெலாம் :-** — மேலாய பரத்துக்கு விலக்கா நிற்பவர்களே உலகெங்கும் உள்ளவராவர்.

**அதில் விருப்பு வெறுப்பற்றோர்கள் ஒக்க மனோவிருத்தி யணு மாத்திரமாய் அறிவு அகண்ட சொரூபமாகும் :-** — ஆயினும் அவ் உலகத்தின் கண் இயல்பா நின்றுள்ள விருப்பு வெறுப்பு அகன்றோர்களது முன்னர்ச் சுருங்கக் கூறிய மனோ விருத்தி என்பது சுவானுபவ நிலையில் அணு மாத்திர மாகவும். விவேக விருத்தி அகண்ட சொரூபமாகவும் விளங்கா நிற்கும்.

**அக் கதிகள் தேராதார் அறிவு அனுவாம் மனோ விருத்தி அகண்டமாகத் தக்க பிராரத்த வசத் தவராகிப் பிறந்திறந்து தளர்கின்றார். :-** — அங்ஙனமாய அநுபூதி நிலைகளைத் தீர விசாரித்துத் தெளியாதவர்களது விவேக விருத்தி யென்பது, அணு மாத்திரமாகவும் மனோ விருத்தி யென்பது அகண்டா காரமாகவும் நிலையா நிற்கும், இக் காரணத்தால் இவர்கள் தத் தமக்கியைந்த பிராரத்வ கன்ம வயப்பட்ட வர்களாகி ஓயாது பிறந்திறந்து சுக துக்கத்தில் மொத்துண்டு எய்ப்புறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமெலாமெனல் இடவாகு பெயராய் உயிர்களைப் பொதுமையிற் காட்டலின், மிக்கவெனலைப் பரத்துக்கு அடைமொழியாக் காது, முழுதும் மூடர்களே யெனப் பயனிலை யாக்கின், சிறக்கிற்றாரெனக் கொள்ளினும் அமையும். ஆதலின், உலகமெலா மிக்க பராதீனர்களே யென முடிக்க. உலகம் உண்மையாயின் வெறுப்புறுதற் கேது என்னை? இருமைக்கும் இடமா நிற்றலின், உலகம், மித்தை எனற்கு இடம் பெறாதோ? அதனால் எய்தற் கியைந்த விருப்பு வெறுப்புறுதலும், அதனை மெய்யென நுகர வெழுந்த மனோவிருத்தி அணு மாத்திரமாதலும் அறிவு அகண்ட சொரூபமாதலும் எய்தற்கிடம் பெறாதோ? இங்ஙனமாய நிலைகளைச் சற்றும் அறியாதார் அறிவு அணுவாகவும், மனோ விருத்தி அகண்டமாகவும், அதனால் தக்க பிராரத்த வசத்தவராகிப் பிறந்திறந்து தளர்கின்றதாகவும் கூறியதை ஏற்றற்கிடம் பெறாதோ? இங்ஙனமிருக்க இதனை மறுப்பதென்ன மதி. ஓரறிவே மருளா நின்றுழி, மனோ விருத்தி யெனவும் அகண்டாகாரமெனவும், அவ் அறிவே செருபா நின்றுழி விவேக விருத்தி யெனவும், அகண்டாகார மெனவும் போந்தது, காரணமாக அவ் வவ் அவசரத்தில் இவ் விரண்டு விருத்தியும் அணு வெனற்கு முடன் படுமாதல் பற்றி இங்ஙனம் கூறினாரென்க. இதனைக் காண வேண்டின் நாமே தக்க உதாரணமாயிருக்கின்றனம். ஒவ்வொரு விருத்தியும் அணு மகத்தாய அவசரத்தைக் காட்டக் கூறியதென்க. மருளெனல் அக இருட்டு உபாதானமாகவும், தெருளெனல் அக வொளிக்கு உபாதானமாகவும் நிற்றலை. நிற்கவே, அங்ஙனமாய இருட்கு ஒளிக்கும் முபாதேயம், அனுர்த சடதுக்கமும், சத்துசித்தானந்தமு மெனக் கண்டாம். (5)

# உபரதி வைராக்கிய ஞானத்தால் உறு பயன்.

தோற்றுமுப ரதிவைராக் கியஞான
மூன்றிவைக டொழிற்பட் டாரு
ளேற்றுமுப ரதியுடையார் பிரமாதி
பதமமைவ ரிகலோ கத்திற்
போற்றும்வை ராக்கியர்க்கு மப்பதமுண்
டாஞானம் பொருந்தி னோர்க்குச்
சாற்றரிய தனிமுத்தி சரீராந்தத்
தெனவுரைப்பர் தகைமை யோரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்று முபரதி வைராக்கிய ஞானம் மூன்று
இவைகள் தொழிற் பட்டாருள்
ஏற்றும் உபரதி உடையார் பிரமாதி
பதம் அமைவர், இக லோகத்திற்
போற்றும் வைராக்கியர்க்கும் அப் பதம் முண்டாம்
ஞானம் பொருந்தினோர்க்கு
சாற்றரிய தனி முத்தி சரீர
அந்தத்தென உரைப்பர் தகைமையோரே.

(இதன் பொருள்)

**தோற்று உபரதி வைராக்கிய ஞான மூன்று இவைகள் தொழிற் பட்டாருள் :-** — தன்னை தான் அடைவோர்க்கு முறையே யுண்டாதற் கியைந்தவை உபரதி, வைராக்கியம், ஞானம் என மூன்றாம். இம் மூன்றற்கு இயைந்த முயற்சிக் கண் அதனதன் வயப்பட்டவர்களுக்குள்.

**ஏற்று உபரதியுடையார் பிரமாதி பதமடைவர் :-** — எவராலு மதிக்கத் தக்க உபரதி எனப்படுவது பொருளல்லவற்றை யானெனதாக் கொள்ளும் மயக்கத்தில் வெறுப்பு உறுதலாம், அதனை மறவாது காப்பாற்றுபவர் அவ் உபரதியை உடையராவர், அவருக்குப் பயன் தூல சரீர அந்தத்தில் பிரம லோகாதி பதங்களாம்,

**இக லோகத்திற் போற்றும் வைராக்கியர்க்கு அப் பதம் உண்டாம் :-** — புகழத் தக்க வைராக்கிய மெனப்படுவது உபரதியால் எய்திய, வெறுப்புறுதலை, இடையிற் கலங்காது மரணபரியந்தம் இகலோகத்தில் காத்தலாம், அங்ஙனம் காத்தலையுடையார் அவ் வைராக்கியத்தை யுடையராவர். அவர்க்குப் பயன் அந்தப் பிரமாதி பதங்கள் அனைத்தும் வெறுப்பாகக் காண்டலாம்.

**ஞானம் பொருந்தி னோர்க்குச் சாற்றரிய தனி முத்தி சரீர அந்தத் தென உரைப்பர் தகைமையோர். :-** — ஞானமெனப் படுவது பொருளைப் பொருளாகக் காண்டல் காரணமாகத் தன்னைத் தானாகக் கண்டு நிற்றலாம், அதனை யுடையோர் அயலனைத்தையுந் தனது பிரதி பலனமாகக் காணும் நிலைமை யுடையவராவர், அவர்க்கு பயன் காரண சரீர அந்தத்தில் சொல்லற் கரிய கூடஸ்தப் பிரம ஐக்கியமே முத்தியென நிற்பதாம் என்று சத்துக்கள் கூறா நிற்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரீராந்தத் தெனலைக் கடை நிலைத் தீபமாக்கித் தனித் தனி உபரதியுடையார்க்குத் தூல சரீராந்தத் தெனவும், வைராக்கிய முடையார்க்குச் சூக்கும சரீராந்தத் தெனவும், மெய்ஞ்ஞானம் உடையார்க்குக் காரண சரீராந்தத் தெனவும் பொருள் கொள்க. அன்றேல், முரணும், சரீரமெனப் பொதுப் படக் கூறினமையின். உரையிற்கோடலென்னு முத்தியால், உபரதி யுடையார்க்கு, வெறுப்புறற் கியைந்தது இகலோகம் போல, வைராக்கிய முடையவர்க்கு வெறுப்புறற் இயைந்தது அப் பத மெனப் பொருள் தரற்கு, இக லோகத்திலென்பதில் இல் உருபை ஐந்தாம் வேற்றுமை உருபாக்கி உவமைப் பொருளாக்கில் முரணின்மையால் ஏற்கற்பாற்று. இக லோகத்தில் என்பதில் இகரம் அண்மைச் சுட்டாகவும், அப்பத மென்பதில் அகரம் சேய்மைச் சுட்டாகவுங் கொள நிற்றலின். உபரதியுடையார்க்கு வெறுப்பாயது. இக லோகம் போல வைராக்கிய முடையவர்க்கு வெறுப்பாயது அப்பத மெனக் கொண்டால் முரணென்னை? சுருக்கம் சொல்லலென்னு அழகால் என்க. பிரமபத மென்னாது ஆதி யென்ற மிகையால் உபரதி வைராக்கிய ஞானமென்பவற்றை உபரதியில், உபரதி வைராக்கிய ஞான மெனவும், வைராக்கியத்தில், உபரதி வைராக்கிய ஞானமெனவும், ஞானத்தில் உபரதி வைராக்கிய ஞான மெனவும் மும் மூன்றாக்கவும், அவ் அவற்றிற்குரிய முயற்சிகளும் அவ் அவற்றிற்குரியவரும் அதஅதற்கியைந்த பலனும் பெறு மென மாட்டுதலால் மாட்டெறிந் தொழுகலென்னு முத்தியாக்கவும் பெற்றாம், பெறவே, சிற் சிலருக்குத் தனித் தனி ஒவ்வொன்றேனும் உபரதி வைராக்கியமேனும், உபரதி ஞானமேனும், உபரதி வைராக்கிய ஞானமேனும் வாய்ப்பதினானும் அவ் வவ் வசரத்திற் இயைந்த சேட்டையும் பலனும் முரணா தெய்தற் பாலவாதலானும் இங்ஙன மனுபவமாக ஆங்காங்குக் காணப் பெறு மாதலானும் மறுக்காது ஏற்றனம். இங்ஙனமாய விரிவனைத்தையும் வேதாந்தப் பெருங்கடலில் ஆரியத்தில் தோன்ற விரித்துரைத்து இருப்பதால் அந் நூல்களிற் காண்க. இந்த முப்பத்திரண்டுள் ஒவ்வோர் கவியுஞ் செல்லச் செல்ல ஆழ முடைத்தாதலினால், ஆழமுடைத்தாதல் என்னு மோரழகுமாம். எனவே, உபரதி வைராக்கிய ஞானமெனக் கூறியது, அறிவின் அவசர நிலை எனக் காட்டற்காதலின் இம் மூன்றும் ஒவ்வோர் முதலன்றென்க. இவையெனச் சுட்டாக்கலால் மூன்றெனலை வினை முற்றாக்குக. இம் மூன்றிலக்கணமும் வேதாந்த விலக்கியத்தின் அமைதியாம். அவ் இலக்கிய மின்றேல் அவ் இலக்கணம் யாது பயன் பெறும். இவை போன்றனவாகிய இலக்கணங்கட்கு அறிவு இலக்கியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரிபுடி நிலையாமாறு.

மெய்வாய்கண் ணொடுமூக்குச் செவியாலுண்
பதுவிடயம் விடயம் யாவு
மைவாயி லரவெனவுற் றுணர்தன்மனோ
விருத்தியவை யறிவ தாகிப்
பொய்வாயின் செயல்களெலாந் தனதாநின்
றிடல்சீவ போதம் வேறாத்
தைவாய்வெண் பிறைபோலத் திரிபுடிக்குஞ்
சமசாட்சி தானே தானாம்.

**மெய் வாய் கண்ணொடு மூக்குச் செவியால்**
**உண்பது விடயம், விடயம் யாவும்**
**ஐவாயில் அரவென உற்றுணர்தல் மனோ**
**விருத்தி, அவை அறிவதாகிப்**
**பொய் வாயின் செயல்களெலாந் தனதா நின்றிடல்**
**சீவ போதம், வேறாத் தை வாய்**
**வெண் பிறை போலத் திரிபுடிக்குஞ்**
**சம சாட்சி தானே தானாம்.**

**(இதன் பொருள்)**

**மெய் வாய் கண் ணொடு மூக்குச் செவி யால் உண்பது விடயம் :-** — தொக்குமுதலிய பஞ்சேந்திரியங்களால் அனுபவிக்கப்படுவது சத்த முதலிய விடயமாம்.

**விடயம் யாவும் ஐவாயில் அரவு என உற்றுணர்தல் மனோ விருத்தி :-** — அங்ஙனமாய விடயம் அனைத்தையும் ஐந்தலை நாகம்போல் அவ்விந்திரியங்கள் காரணமாக ஊன்றி உணர்தல் மனோ விருத்தி ஞானமாம்

**அவை அறிவதாகிப் பொய் வாயின் செயல்களெலாந் தனதாநின்றிடல் சீவபோதம் :-** — சத்தியம் போல மித்தையா நின்றுள்ள அகக் கரணம் புறக் கரணம் காரணமாக இயங்குஞ் செயல்களனைத்தையுந் தனதாகப் பாவித்து நிற்றல் சிதாபாசனாகிய சீவனாம்.

**வேறாத் தை வாய் வெண் பிறை போலத் திரிபுடிக்குஞ் சமசாட்சி தானே தானாம். :-** — இவற்றிற்கு விலக்காகித் தை மாதத்தில் உதித்த வெண் பிறை போலத் திரிபுடிக்குஞ் சமத்துவமாகச் சாட்சியா நின்று விளங்குவது யாதோ அது கூடஸ்தனாம், அதனை யன்றித் தானே தானாதற் கியைந்த நிலை வேறின்றாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலனும், கரணமும் சீவனும் தானே தானாதற் கியைந்த நிலை அன்றெனக் காட்டத் திரிபுடிக்குஞ் சம சாட்சி என்றார். தை வாய் வெண் பிறை போல வென்று உவமித்தது. அங்கே மாசும், இங்கே திரிபுடியுமாய் தடை சற்று மின்மை பற்றியாதலால், இது தொழிற் சாதாரண தர்மமென்க. தானே தானா நிற்கு நிலை பஞ்சேந்தியங்களில் ஒன்றி எனவுங் கரணங்களில் மனமெனவும் அப்பாலாய நிலை ஜீவனெனவுங் குறிகொண்டு அவலமாவாரை மறுத்தற்கு இங்ஙனங் கூறியதென்க. இந்திரியக் குறி ஷண்முகி முதலிய முத்திரைகளும், கரணக்குறி, மூலாதார முதலியவையும், ஜீவக்குறி ஒன்றுந் தோன்றாது நிற்றலுமென்க. புலனின்றியக் கண் விடயமும், கரணமின்றியக் கண் புலனும், சீவனின்றியக்கண் கரணமும், கூடஸ்தனின்றியக் கண் சிதாபாசனும் எங்ஙனம் உணரப்படும்? இதனால், காண்பான் காட்சி காணும் பொருளாகிய இவை மூன்றையும் சீவபோதமெனுங்காறு ஏற்குமெனவும், சீவசாட்சியாகிய கூடஸ்தன் ஏற்காதெனவும் இக்கவியிற் குறிப்பிக்கப் பெற்றாம். சீவசாட்சி தானே தானாய நிலையா நிற்றலின் என்க. தன்னையும் மயலையையும் அறிவற்ற வகையாது. சாட்சிக்கன்றி வேறொன்றுக் இன்மையின் சாட்சி திரிபுடி யற்ற தென்றாம். தன்னை யன்றி அயலின்மையின் தானே தானா மென்னும் யோக்கியதை பெறப்பட்டது. இக் கவியினாலும் அறிவே முக்கியம் எனவும், ஏனையவை அமுக்கியங்களாவன. விடயம் ஐந்தாவன. பரிச, ரச, ரூப, கந்த, சத்த மென்பன. ஜீவிக்குந் தன்மையதாதலின், சாட்சி போத மென்னாது. சீவபோத மெனப்பட்டது. போதம் அறிவு, சிவமே தானெனல் துவிதம், தானே தானெனல், அத்துவிதம், ஏக மேவாத்துவித மெனற்கியைதலின்.

## அஞ்ஞானாதிகளின் இயல்பு நிலை.

ஓதரிய வஞ்ஞானந் தனையறியா
வுணர்விதற்கோ ருறுதி மூல
மாதன்மனோ விருத்தியவை யகற்றியொளி
தலைகளைய பறித லகண்டா காரங்
காதலினா லருளியசற் குருவருளாற்
பெறுமகண்டா கார மாகுஞ்
சாதகமே தானாகி யிருப்பதே
ததுசொருப சாட்சி யாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதரிய அஞ்ஞானந் தனை அயறியாத
உணர்விதற்கோர் உறுதி மூலமாதன்
மனோ விருத்தி, அவை அகற்றி, ஒளி
தனை அறிதல் அகண்டாகாரம்,
காதலினால் அருளிய சற் குரு அருளாற்
பெறும் அண்டா கார மாகுஞ்
சாதகமே தானாகி இருப்பதே
சொருப சாட்சி யாமே.

(இதன் பொருள்)

**ஓதரிய அஞ்ஞானந் தனை யறியா உணர்வு இதற்கோர் உறுதி மூல மாதன் மனோ விருத்தி :-** — கணித்தற் கரிய அஞ்ஞான மெனப்படுவது தன்னைத் தானென அறிதற் தகை அற்றது யாதோ, அந்த உணர்வேயாம். இதனைத் தெளிய வொட்டாது மருளின் கண் ஆழ்த்தற்குறுதி மூலமா நிற்பது மனோ விருத்தி யெனப்படுவதாம்.

**அவை அகற்றி ஒளி தனை அறிதல் அகண்டா காரம் :-** — அங்ஙனமாய மூட நிலைகளை யொருங்கு அகலப் பண்ணி, பண்ணின விடத்துச் சதோதயமா நின்றொளிர்வது சுயஞ் சைதன்யமாதலால் அதனை அதுவாக நின்றறிதல் அகண்டாகார ஞானமெனப் படுவதாம்,

**காதலினால் அருளிய சற் குருவருளாற் பெறும் அகண்டா காரமாகுஞ் சாதகமே தானாகி இருப்பதே அது சொருப சாட்சியாமே. :-** — இம் மூன்றனுள் அன்போடருளிய சற்குருவின் அநுக்கிரகத்தால் அடையத் தகுவது அகண்டகார ஞானமெனப்படுவ தேயாம், வேறன்மையின், அவ்வெளி தானாகப் பல்லூழி காலம் பழக வேண்டியது சாதகம் எனப்படுவதால் அந்தச் சாதகமே தனக் குரிய முயற்சியாகி என்றும் இருப்பது யாதோ அது தானே தானாதற்கு இயைந்து நிற்பது சொருப சாட்சி யெனப்படுவதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக் கெனச் சொரூபம் ஒன்று இன்மையின், ஓதிய அஞ்ஞானம் எனப்பட்டது. அஞ்ஞானம், மனோ விருத்தி, அகண்டாகாரம் என்பவற்றுள், முன்னைய இவ் இரண்டும் பகிர் முகத்திற்கும், பின்னைய தொன்றும் அந்தர் முகத்திற்கு இயைந்தன வென்றாயிற்று. யாது கற்கினும், எத் தவம் முயலினும் ஞானப்பிரகாசங் காண்டல் அரிது. அதனை வழுவாது காத்தல் அரிது. அதனை யன்றி அனைத்து இன்றென அறிதல் அரிது. அவ் வொளியே தானென அறிதலரிது. அவ் வொளியைச் சத்துச் சித்தானந் தமாகவும் அந்தச் சத்துச் சித்தானந்தத்தை அநிர்த சட துக்கமாகவும் பகுத்துணர்தல் மிகவும் அரிது. இத்தனையும் அவ் வொளியாகக் காண்டல் அரிது. இடையிடையே ஊழிற்கு இயைந்தவாறு பற்பல விகற்ப தூல தேகங்கள் வந்து, வந்தகலும், அகலினும், ஆங்காங்குச் செய்து நின்ற நிலை பாகங்கள் சாத்தியமாதல் காறுந் தொடர்ந்தே வரும், அங்ஙனந் தொடர்ந்து வருதலை மறவாது கண்டு சாதித்தலைச் சாதகம் என்றார். சாதகமே தானாகி இருப்ப தென்பது விடா முயற்சியைக் குறித்தற் கென்க. இக் கவியுந் **தானே தானாதற் கேற்ற** நிலையைக் கூறியது. (8)

# விருத்தியுஞ் சீவனும் விபுவாகு நிலைமை.

**எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.**

விருத்தியுஞ்சீவனும்விடயத் தினைப்பார்க்கிற்பெரிதாம்
விருத்தியின்ஞா னம்விடயாஞ் ஞானத்தையகற்றின்
விருத்தியுஞ்சீ வனும்விடயா காரமதா மதுபோல்
விருத்தியுஞ்சீ வனுஞ்சத்தாகாரமாதா யமைந்தால்
விருத்தியைச்சீ வனைவிடயத் தினையறியுஞ் சாட்சி
வேந்தனசையாதிருந்துமேன்மைபெறுந்திறம்போல்
விருத்திவிட யஞ்சீவன் சாட்சியிவை தோன்றா
விபுவாவன் ஞானியென விளம்புமுப நிடதம்.

**விருத்தியுஞ் சீவனும் விடயத்தினைப் பார்க்கிற் பெரிதாம்**
**விருத்தியின் ஞானம் விடய அஞ்ஞானத்தை அகற்றின்**
**விருத்தியுஞ் சீவனும் விடயாகாரமதாம், அதுபோல்**
**விருத்தியுஞ் சீவனுஞ் சத்தாகாரமாதாய் அமைந்தால்**
**விருத்தியைச் சீவனை விடயத்தினை அறியுஞ் சாட்சி**
**வேந்தன் அசையாதிருந்து மேன்மை பெறுந் திறம் போல்**
**விருத்தி விடயஞ் சீவன் சாட்சி இவை தோன்றா**
**விபுவாவன் ஞானி யென விளம்பும் உபநிடதம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்)

**விருத்தியுஞ் சீவனும் விடயத்தினைப் பார்க்கிற் பெரிதாம் :-** — அதோ முகத்தில் விருத்தி ஞானமுஞ் சிதாபாசனுந் தத் தமக்கு உரிய விடயங்களைப் பார்க்கிலும் விபுவாகும்.

**விருத்தியின் ஞானம் விடயாஞ் ஞானத்தை அகற்றின் விருத்தியுஞ் சீவனும் விடயாகாரமதாம் அது போல் :-** — கல்வி காரணமாக ஏழும் விருத்தி ஞானத்தைக் கொண்டு அவ் அவ் விடயங் களை மறைத்திருக்கும் அஞ்ஞானத்தை அகலச் செய்யின் அவ் விருத்தி ஞானத் தோடே சிதாபாசனும் வேறு மயமாகாது விடயாகார மயமாவன் அது போல,

**விருத்தியுஞ் சீவனுஞ் சத்தாகாரமா தாய் அமைந்தால் :-** — ஊர்த்த முகத்தில் விருத்தி ஞானத்தோடு சிதாபாசனும் ஐயந்திரிபகன்று ஞானாகார மயமா விளங்கின்.

**விருத்தியைச் சீவனை விடயத்தினை அறியுஞ் சாட்சி :-** — விருத்தி ஞானத்தையுஞ் சிதாபாசனையும் விஷயத்தையும் விலக்கா நின்று அறிதற் குரிய இருவகைச் சாட்சியுந் தானாகி.

**வேந்தன் அசையா திருந்து மேன்மை பெறுந் திறம் போல் :-** — திரி லோகத்தையும் ஒருங்கு வென்ற அரசன் தமது இடத்தை விட்டசையாதிருந்து எல்லாச் சிறப்பையும் அடையுந் திற மெங்ஙனமோ அது போல்,

**விருத்தி விடயஞ் சீவன் சாட்சி இவை தோன்றா விபுவாவன் ஞானி யென விளம்பும் உப நிடதம். :-** — விருத்தி ஞானத்தையும் விஷயங்களையுஞ் சீவனையும் இருவகைச் சாட்சியையும் இங்ஙனமாய நிலையினயவெனத் தோன்ற வொட்டாத விபுவாக விளங்குவன். இங்ஙனமாயினோனை முப்பத்திரண்டு உபநிடதங்களும் ஞானி யெனக் கூறா நிற்கும்,

ஓர் பிரக்ஞையே பகிர் முகத்தில் அஞ்ஞானி எனவும், ஏக தேசி எனவுஞ் சிதாபாசன் எனவும் நின்றாற் போல அந்தர் முகத்தில் ஞானி யெனவும், விபு வெனவும், சாட்சி எனவும் நின்ற தென அறிக. அதோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்தில் விடயாஞ்ஞானத்தை அகற்றலாவது, அதிஷ்டான நாட்டம் இன்னமையால் தத்துவ சோதனை செய்து, தெளிந்தது போற் காண்டலை. விடயாகாரம் அதாதல் தனது பிராந்தி யெனத் தேராமையை. ஊர்த்த முகத்தில் விடய அஞ்ஞானத்தை அகற்றலாவது, அதிஷ்டான நாட்டஞ் சற்றுண்மையால், தத்துவ சோதனை செய்து, தெளிந்து நிற்றலை. சத்தாகாரமதாதல் தனது பிராந்தியெனத் தேர்ந்ததை. பகிர் முகத்தின் கண்ணும் அந்தர் முகத்தின் கண்ணும், பகுத்துணர்வு இருத்தலினாலும் அதனால், அவற்றாலாய பயன் அனுபவிப்பான் இருத்தலினாலும் விருத்தி எனவும், சீவன் எனவும் சாட்சி எனவும் பெயர் தந்தவாறு காண்க. விருத்தியுஞ் சீவனும் விடயத்தினைப் பார்க்கில் பெரிதாம் என்ற விதப்பால், விருத்தியுஞ் சீவனும் ஞானத்தினைப் பார்க்கில் பெரிதா மெனக்கொண்டாம். அங்கே விருத்தியுஞ் சீவனும் விடய மயமாதல் போல், இங்கே ஞான மயமாதற் இயைதலின் முரணென்னை. இன்றாதலிற் பொருந்தும். நூலாசிரியர் அங்ஙனங் கூறாதிருக்கில் யாம் இங்ஙனம் உரை கொள்ளாதிருக்குது மென்க.

## விஷய முதல் சாட்சி வரையில் ஒன்றற்கு ஒன்று விசேடமாமாறு.

போற்றியவிந் திரியமின்றி விடயமெலாந் தோன்றா பொறிகளைந்துங் கரணமின்றிப் பொலிவொடு தோன்றாவால், சாற்றுகர ணமுஞ்சீவ னின்றியக்காற் றோன்றா சாட்சியன்றிச் சீவனிலை தானுணர்வு தோன்றா, தாற்றலினா லிந்தியங்கள் விடயமட்டு மறியுமவ்விரண்டுங் கரணமறிந் திடுமவைமூன்றினையுந், தேற்றமொடுசீவனறி வுறுமவைநான் கினையுந் தெளிந்தறியுஞ் சாட்சியதீ தப்பொருளா மிதுவே.

**போற்றிய இந்திரியம் இன்றி விடயம் எலாந் தோன்றா**
**பொறிகள் ஐந்துங் கரணமின்றிப் பொலி வொடு தோன்றாவால்,**
**சாற்று கரணமுஞ் சீவனின்றியக்காற் தோன்றா,**
**சாட்சியன்றிச் சீவனிலை, தானுணர்வு தோன்றா,**
**ஆற்றலினால் இந்தியங்கள் விடய மட்டும் அறியும்.**
**அவ் இரண்டுங் கரணம் அறிந்திடும்.**
**அவை மூன்றினையுந், தேற்ற மொடு சீவன் அறிவுறும்**
**அவை நான் கினையுந் தெளிந்து அறியுஞ்**
**சாட்சி அதீதப் பொருளாம் இதுவே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்)

**போற்றிய விந்திரிய மின்றி விடய மெலாந் தோன்றா, பொறிகள் ஐந்துங் கரண மின்றிப் பொலிவொடு தோன்றா :-** — யாவரானுந் துதித்தற் கியைந்த ஞானேந் திரியங்கள் ஐந்து மின்றிச் சத்த முதலிய சகல விடயங்களுந் தோன்றாவாம். அந்த ஞானேந்திரியங்கள் ஐந்தும் அகக் கரணமாகிய மனமென்பதில்லாமல் விளக்கமாகத் தோன்றாவாம்.

**சாற்று கரணமுஞ் சீவனின்றி யக்காற் தோன்றா சாட்சியன்றிச் சீவனிலை தானுணர்வு தோன்றாது :-** — சொல்லப்பட்ட மன முதலிய கரணங்களுஞ் சீவனில்லாவிடத்துத் தோன்றாவாம் அந்தச் சீவனிலையாகிய உணர்வுஞ் சீவ சாட்சி இல்லா விடத்துத் தோன்றாவாம்.

**ஆற்றலினால் இந்தியங்கள் விடய மட்டு அறியும், அவ் விரண்டுங் கரணம் அறிந்திடும், அவை மூன்றினையுந், தேற்றமொடு சீவனறிவுறும், அவை நான் கினையுந் தெளிந்தறியுஞ் சாட்சி அதீதப் பொருளாமிது. :-** — அவ்வவற்றின் வலிமைத் திறம் இங்ஙனம் மிருப்பதால் ஞானேந்திரியங்கள் ஐந்தும் விடய மாத்திரம் உணரும். விடயம், இந்திரியமாகிய இவ் விரண்டை மாத்திரம் அந்தக் கரணம் அறியும், விடயம், புறக் கரணம், அகக் கரணமாகிய மூன்றை மாத்திரம் தெளிவோடு சீவனறியும். விடயம் புறக் கரணம், அகக் கரணம் சீவன். ஆகிய நான்கை மாத்திரம் சீவ சாட்சியாகிய சுயஞ் சைதன்யம் மிக்க தெளிவோடு அறியும். இதனின் மேலாய நிலை வேறின்மையின் இதுவே அதீதப் பொருள் எனப்படுவதாம்.

இதுவே என்பதில் ஏகாரம் தேற்றம், எவ் எவ் உயிரும் போகம் நுகர்தற் இயைந்த நேராய கருவி ஞானேந்திரியமாதலின் போற்றிய இந்திரியம் என்றார். அந்தந்தப் பகுத்துணர்வின் வலி இனையவெனக் கூறவே, சீவசாட்சி ஒன்றாலறியப் படுவதல்ல வென்பதாயிற்று, ஆகவே தானே தானாய நிலையெனக்கண்டாம். தான் ஒன்றாலறியப் படுவதின்மையின் தனக்குத் தானே விசேடமா மென்றுணர்க. இதுவே தீர்ந்த நிலையாதலின் இங்ஙனங் கூறினர் என்க. தானே தானாய நிலையாதற்கு இதுவும் ஓர் தந்திர யுத்தி, தோன்றா வென்னும் நான் கெதிர் மறை வினை முற்றும், இருக்கினும் என்பதைக் குறிப்பிக்கின்றன, அறியு மென்னும் நான்குடன் பாட்டு வினை முற்றாலென்க. இதனால் தோற்றுதல் திருசியத்திற்கும் அறிதல் திருக்குவிற்கும், புடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்ச்சியேனுஞ் சாட்சியாகிய, கூடஸ்த விளக்கத்தில் சற்றும் இன்றென்பதாயிற்று, திருக்குத் திருசியந் தானாயிருத்தலால்.

## அவஸ்தாத்திரய சாட்சியின் இயல்பு நிலைமை.

கற்பனைசெய் யவத்தைகண்மூன் றினுக்குஞ் சாட்சி
கலந்தொருதன் மையினிலகுங் காட்சி கூறிற்
சிற்பரவுஞ் சாக்கிரத்திற் சாட்சி தானே
செகசாட்சி யாயிருக்குந் தியக்க மான
சொற்பனத்தின் மனோவிருத்தி தனக்கே சாட்சி
சூனியமாஞ் சுழுத்தியிலஞ் ஞான மான
வற்பநெறி யானாந்த மதற்கே சாட்சி
யனைத்தினுமிவ் வாறிருந்தோர்ந் தறியுங் காணே.

**கற்பனை செய் அவத்தை கண் மூன்றினுக்குஞ் சாட்சி**
**கலந்து ஒரு தன்மையினில் இலகுங் காட்சி கூறிற்**
**சிற்பரவுஞ் சாக்கிரத்திற் சாட்சி தானே**
**செக சாட்சியாய் இருக்குந், இயக்க மான**
**சொற்பனத்தின் மனோ விருத்தி தனக்கே சாட்சி**
**சூனியமாஞ் சுழுத்தியில் அஞ்ஞான மான**
**அற்ப நெறியானாந்தம் அதற்கே சாட்சி**
**அனைத்தினும் இவ்வாறிருநது ஓர்ந்தறியுங் காணே.**

**(இதன் பொருள்)**

**கற்பனை செய் அவத்தைகள் மூன்றினுக்குஞ் சாட்சி கலந்தொரு தன்மையினில் இலகுங் காட்சி கூறில் :-** — கற்பனைகளை விளைவிக்கத் தக்க சாக்கிர முதலிய மூன்றவஸ்தைகட்குஞ் சாட்சியாகிய கூடஸ்த சைதன்யம் இம் மூன்றினும் உபாதானமாகக் கலந்து ஒரு படித்தாச் சதோதயமா நின்று விளங்குஞ் சுவானுபூதிக் காட்சியைக் கூறுமிடத்தில்.

**சிற் பரவுஞ் சாக்கிரத்திற் சாட்சி தானே செக சாட்சியாய் இருக்கும் :-** — அறிவு வியாபித்திருக்குஞ் சாக்கிர அவஸ்தையின் கண் அந்தக் கூடஸ்த சாட்சியே அங்கே தோற்றுஞ் சகத்திற்கு சாட்சியா யிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தியக்கமான சொற்பனத்தின் மனோ விருத்தி தனக்கே சாட்சி :-** — கலக்கமா நின்றுள்ள சொப்பனத்தின் கண் அங்கே தோற்றும் மனோ விருத்திக்குஞ் சாட்சியாய் இருக்கும்.

**சூனியமாஞ் சுழுத்தியில் அஞ்ஞான மான அற்ப நெறியானாந்தம் அதற்கே சாட்சி :-** — சூனியமா நின்றுள்ள சுழுத்தியின் கண் அங்கே தோற்றம் முழுதும், மூட மயமான அற்ப நெறியால் எய்திய, ஆனானந்தத்திற் குஞ் சாட்சியா யிருக்கும்.

யான் எனது அல்லவற்றை யான் எனதாகக் கோடலைக் கற்பனை செய் என்றார். சாக்கிர முதலிய மூன்றாவத்தைக் கண்ணுஞ் சாட்சி கலந்தொரு தன்மையில் இலகுங் காட்சியாவது, அலை திவலை முதலியவைகள் தோன்றி மறைதற்கும், அது அதுவாதற்கு ஆதாரமாயும் உபாதனமாயும் நிற்பது, சமுத்திரம் எங்ஙனமோ, அங்ஙனமே சாக்கிர முதலிய அவஸ்தைகளும், தூலம், சூக்குமங், காரணமென்னு, முபாதிகளும், விசுவ, தைசத, பிராக்ஞன், என்னும் அபிமானங்களும், விடாது தோன்றித் தோன்றி மறைதற்கு, ஆதரமாயும் உபாதானமாயும் நிற்றற்கு ஒன்றிருக்க வேண்டுமே. இதன்றறியும் அறிவெனவும், சாட்சியெனவும், கூடஸ்தனெனவும், பிரமமெனவும் சான்றோரால், பரியாய நாமம் பெற்றிருப்பது யாதோ, அதனையெனல். நனவு, நினைவு, முதலிய எழுச்சியே, சாக்கிரம் எனப்படுமாதலின், அந்தச் சாக்கிர சங்கிர சங்கற்பந் தோன்றி மறைதற்கும், அந்தச் சங்கற்பத்தையன்றிச் சகத்தெனப் படுவதற்கும் ஓர் முதலும் ஆதாரமும் அறிவையன்றி வேறின்மையின் சிற்பரவுஞ், சாக்கிரத்திற், சாட்சிதானே செக சாட்சியாயிருக்கும் எனவும், அந்த நனவு அயர்ந்து சோர்ந்துழிச் சகத்து சாயா வடிவமாகத் தோற்றும். அங்ஙனந் தோன்றி மறைதலைச் சாட்சியா நின்றுணர்தல் அறிவாதலால், தியக்கமான சொற்பனத்தின், மனோ விருத்தி தனக்கே சாட்சி எனவும், அந்த ஸ்புரிப்பின், சோர்வே, சுழுத்தி யெனப்படுதலால் சூனியம் எனப்படும். இந்த அவஸ்தையும், சூனியமாகிற சாட்சியுந் தோன்றி மறைதற்கும் அதன் பலனான மக்னானந்த ஆனந்தத்திற்கும், ஆதாரமும் உபாதானமும் அறிவை யன்றி வேறின்மையின், சூனியமாஞ் சுழுத்தியில் அஞ்ஞானமான அற்ப நெறி ஆனந்தமதற்கே சாட்சி எனவும் கூறியவாறாயிற்று. துரியம் துரியாதீதம் மூர்ச்சை மரணம் இருப்பதால், அனைத்தினும் என்றார். முத்துச்சரம் ஓர் சரட்டில் நிற்பதுபோலச், சாக்கிர முதலிய ஏழு அவஸ்தைகளும், அததற்குரிய சாட்சிகளும் தோற்றங்களும் அபிமானங்களும், பிரவிர்த்தி, நிவிர்த்திகளும் ஓர் அறிவில் நிற்குமெனக் கொள்க. இதனை மறுப்பார், எடுக்குந் துறையும், முடிக்குந் துறையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியார் போல்வர். அவர்கள், யாது கற்றும், யாது பயன். இங்ஙனம் ஐயந்திரிபற ஒன்றேயென உணர்ந்தோரே ஏகமேவாத்துவைதம் பிரஹ் மோகமெனற்கு அதிகாரிகள். ஏனையர் துவிதம் எனற்கும் அதிகாரி அல்லரெனற்கு, யாமே உத்தரவாதி. சாட்சி தானே என்னுந் தேற்றேகாரத்தை ஏனைய விடங்களிலுமொட்டுக. இக்கவியின் கருத்து சாக்கிர முதலிய மூன்றிலுஞ் சாட்சியாகிய கூடஸ்த சைதன்யத்தை மறவாமலும் பராக்காகாமலும் ஒருவன் கண்டிருக்கில் ஏனைய அவஸ்தைகளிலும் அப் பழக்கம் காணச் செய்விக்குமென்பது. (11)

# விருத்தி ஞானத்திரயத்தால் அஞ்ஞானத் திரய நிவிர்த்தியின் நிலை.

**அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.**

அரியவிருத் திகண்மூன்றா லகலுமஞ்ஞா
நங்களினு மாய்ந்து கூறிற்
றெரியுமனோ விருத்தியினால் விடயாஞ்ஞா
னங்களெலாஞ் சிதையு மேலாய்ப்
பிரிவிலகண் டாகார விருத்தியிற்சாட்
சியையறியாப் பெத்த நீங்கு
முரியவிவே கவிருத்தி யகண்டாகா
ரமுங்கடந்தங் கொன்றா மன்றே.

**அரிய விருத்தி கண் மூன்றால் அகலும்,
அஞ்ஞானங்களினும் ஆய்ந்து கூறிற்,
தெரியும் மனோ விருத்தியினால் விடய
அஞ்ஞானங்கள் எல்லாஞ் சிதையும்,
மேலாய்ப் பிரிவில், அகண் டாகார விருத்தியிற்,
சாட்சியை அறியாப் பெத்த நீங்கும்,
உரிய விவேக விருத்தி, அகண்டாகாரமுங்
கடந்து அங் ஒன்றாம் அன்றே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்)

**அரிய விருத்தி கண் மூன்றால் அகலும் அஞ்ஞானங்களினும், ஆய்ந்து கூறில்:-** — முற் கூறிய அருமையாய மனோ விருத்தி முதலிய மூன்றினாலும் அஞ்ஞானம் அகலுமென்றதைக் குறித்து இன்னும் ஆராய்ந்து கூறுமிடத்து.

**தெரியு மனோ விருத்தியினால் விடய அஞ்ஞானங்களெலாஞ் சிதையும்:-** — அக முகமாகவும் பகுத்துணரத் தக்க மனோ விருத்தி ஞானத்தால் அவ் விடயங்களின் நிலையின என்றறிய ஒட்டாமல் மறைத்து நிற்கு அஞ்ஞானம் எனப்படுபவைகள் எவைகளோ, அவைகளனைத்தையும் ஒருங்கு மாய்க்க, அதனால் அவை மாயும்.

**மேலாய்ப் பிரிவில் அகண் டாகார விருத்தியிற் சாட்சியை அறியாப் பெத்த நீங்கும்:-** — மனோ விருத்தி ஞானத்திலும் மேலாகப் பிரிவற்று விளங்கும் அகண்டகார விருத்தி ஞானத்தினால் கூடஸ்த சைதன்யத்தை உணர வொட்டாமல் மறைத்து நிற்கும் பெத்தமாகிய அவித்தையை நீக்க அது நீங்கும்.

**உரிய விவேக விருத்தி அகண்டா காரமுங் கடந்து அங் ஒன்றாம் :-** — அப்பாலெய்தற்குரிய விவேக விருத்தி ஞானத்தினால் ஈசுர சாட்சியாகிய பிரம சைதன்யத்தை உணரவொட்டாமல் மறைத்து நின்ற மாயையைக் கடக்க அதனாலது கடக்கப்படும். இங்ஙனங் கடந்த விடத்து அங்கே சாட்சித் துவித பேதமின்றி ஒன்றாக விளங்கும்.

விடயாஞ்ஞானமாவது, விடயம் அனைத்துந் தனது பிரதிபலன வடிவமெனக் காணவொட்டாமல் மறைத்தலை. மாயையை அகண்டாகார மென்பது தனக்கெனச் சொரூபம் ஒன்றின்றி உண்மை போற் காணப்படுந் தன்மையைச் சமஸ்தமும் ஏற்றலின் பிராந்தி ரூபமாதலைப் பற்றி என்க. மூன்று விருத்தி ஞானமும் மேவாதல்பற்றி, சிதைக்க, நீக்க கடக்க வென்றாம். பிறவினை யாக்கா விடத்து, சிதையும், நீங்கும் கடக்குமெனத்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்வினையேலாவாம். மேய மனோ விருத்தி என்னுங் கவியில் கூறிய விருத்தி ஞானத் திரயத்திற்கும் இக் கவிக்கும் பேதமென்னை உள? கூறியது கூறலென்னுங் குற்றமெய்து மெனின், 'கூறியது கூறினுங் குற்றமில்லை, வேறொரு பொருளை விளைக்குமாயின்,' என்னும் விதியால் அக் கவியில் சிதையும், நீங்கும், கடக்கு மென்னும் தன் வினை நயமும் இருத்தலினானு, இவ்விரண்டு நயமும், விடா முயற்சிக் கண்ணதாதலானு மென்க. இதுவும் ஏகமேவாத்துவைதம், பிர்ஹமோக மென்னுங் கருத்தை விளக்கிற் றென்க. ஒன்றாம் எனலால் சுசாதியாதி பேதம் இன்றெனப் பெற்றாம். (12)

# தத்துவோற்பத்தி லயக்கிரமம்.

**எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.**

பேசரிய பரத்தினிலா ரோபமதா மூலப்
பிரகிருதி தோன்றுமிதிற் சாத்திகமாமாயை
யீசனிதிற் றோன்றுமிரா சதமவித்தை சீவ
னிதின்றோன்றுந்தாமதத்தாவணம்விட்சேபமதாஞ்
சூசகவிட் சேபமதிற் சூக்குமபூ தமதாஞ்
சூக்கவுட லிருகுணத்தாற் றோன்றிடுந்தா மதத்தின்
மாசில்பஞ்சி கரணமதா யைம்பூத வடிவா
மதிற்றூல சடந்தோன்றுமனைத்து மிவ்வாறடங்கும்.

**பேசரிய பரத்தினில் ஆரோபமதாம் மூலப் பிரகிருதி தோன்றும்**
**இதிற் சாத்திகமாம் மாயை ஈசன் இதிற் தோன்றும்**
**இராசதம் அவித்தை சீவன் இதிற் தோன்றுந்**
**தாமதத்தான் ஆவரணம் விட்சேபம்தாஞ்**
**சூசக விட்சேபமதிற் சூக்கும பூதமதாஞ்**
**சூக்க உடலிரு குணத்தாற் தோன்றிடுந் தாமதத்தின்**
**மாசில் பஞ்சிகரணமதாம் ஐம்பூத வடிவாம்**
**அதிற் தூல சடந் தோன்றும், அனைத்தும் இவ்வாறு அடங்கும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்)

**பேசரிய பரத்தினில் ஆரோபமதாம் மூலப் பிர கிருதி தோன்றும் இதிற் சாத்திகமாம் மாயை, ஈசன் இதற் தோன்றும் :-** — இங்ஙனமாய நிலை இனையதென யாதொன்றானுங் கணித்தற் கரிய பர வஸ்துவில் ரச்சுவிற் சர்ப்பம் போல விவர்த்த மாயுள்ள மூலப் பிரகிருதி யென்னு மொரு சத்தி அவாந்தரமாகத் தோற்றும். இந்த மூலப் பிரகிருதியின் கண் இயல்பா நின்றுள்ள சத்துவம், ரஜசு, தமசு என்னும் முக் குணங்களில் சத்துவத்திற்கு மாயை யெனவும், அம் மாவையில் ஈசன் பிரதி பலித்தன் எனவும்,

**இராசதம் அவித்தை ஜீவனிதற் றோன்றும் :-** — ரஜசுக்கு அவித்தை யெனவும், அந்த அவித் தையில் ஜீவன் பிரதி பலித்தனனெனவும்.

**தாமதந் தான், ஆவரணம் விட்சேபமதாம்:-** — தமசு, ஆவரணம், விட்சேபமென இரு பாகு பாடதா நிற்கும்,

**சூசக விட்சேப மதிற் சூக்கும பூதமதாம், சூக்க உடலில் இணைத் தாற் தோன்றிடும்:-** — அதி சூக்குமமாய அந்த விட்சேபத்தியில் சூக்கும பூதமாகிய சத்த பரிசாதிகள் தோன்றும், சூக்கும சரீரம் சத்துவம் இரஜசு என்னும் இரு குணத்தால் உதிக்கும்.

**தாமதத்தின் மாசில் பஞ்சிகரணமதா ஐம் பூத வடிவாம், அதிற் தூல சடந் தோன்றும்:-** — ஏனைய தாமத குணத்தால் குற்ற மற்ற பஞ்சீகரணமாயும், இதனால் தூல ஐம் பூத வடிவாயும் பேதிக்கப்பட்டு அந்த ஐம் பூத வடிவினின்றுந் தூல சரீரந் தோன்றும்.

**அனைத்தும் இவ்வாறடங்கும் :-** — இங்ஙனம் ஆரோபத்தால் விரிந்தவாறு போலச் சமஸ்த தத்துவங்களும் அபவாதத்தினால் இம் முறையே அடங்க வேண்டிய முறைப்படி அடங்கும்.

பேசரிய பரத்தினில் ஆரோபமதா மூலப்பிரகிருதி தோன்றலாவது பழுதையிற் பாம்பு தோற்றினாற் போலு மெனற்கு இயைவதை. ஆரோபமெனல், ஓரோர் வஸ்து, ஓரோர் வஸ்துவாக, உணரப்படுதலுந் தோற்றப்படுதலும் எனப் பொருள் தருதலை. அனாதியெனலை மூலப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகிருதி என்றார். இதனாற் பழுதையிற் பாம்பென்றும். பாம்பாகத் தோற்றலும் உணர்தலும் அதனதன் இயல்பா? நமது பிராந்தியா! அதனதன் இயல்பு எனின் ஆராய்ச்சியின் கண் திரி காலத்தினும் இருக்க வேண்டும். பிராந்தி எனின் நடுக்கம் உறாதிருக்க வேண்டும். பாம்பாகத் தோற்றுதலுக்கும் அதனை மெய்யென யுணர்தற்கும் வினை முதலுஞ் செயப்படு பொருளும் இருக்க வேண்டும். இன்மையால் பரவஸ்துவில், அனாதியில் ஜகம் முதலிய திரி பதார்த்தமும் இல்லவே இல்லை என ஸ்திரமாகக் குறிக்க ஆரோபமதா மூலப் பிரகிருதி தோன்றும் என்றார். இதனை மறுக்கில் அல்ல இல்லை யெனற் கியையாது, ஆம், உண்டு, எனற்கே இயைய, யாதானு ஓர் பொருளைத் தெரிவிக்கவேண்டும். சீவனும், பரமும் அப்பிரத்தியட்சம். உலகம் பிரத்தியட்சம். சோதனை ஞாயத்தாற் கணிக்கும் இடத்துப், போகம் நுகர வேண்டிய விவகாரத்தால் விவகாரிக, சத்தாகவும், உண்மை காண வேண்டி விசாரிக்கும் நுண்ணிய விசாரத்தால், பாரமார்திக சத்தாகவும், உலகங் காண்டற்கு ஏது என்னை? இங்ஙன மாய உலகங் காரணமாக உண்டென அனுமானித்தற் கியைந்த சீவேசுரர்கள், ஆம் உண்டெனற் கென்ன உறுதி? இன்மையால், கருத்துப் பொருள், காட்சிப் பொருளாகிய இயங்கு திணை நிலைத் திணை எனப்படுவன அனைத்துஞ் சொன் மாத்திரமுந் தோற்றன் மாத்திரமும் விகிர்தியென நிற்றலால், மூலப் பிரகிருதியை, ஆரோப மதாமெனற்கு முரண் என்னை? இன்றாதலால், அனைத்தும் மித்தையே. இக் கவி ஜக ஜீவ பரம், அனாதி நித்தியம் என்பாரை மறுத்ததென்க. பிரமத்தில் மூலப் பிரகிருதி மாயை முக்குணம் ஜக ஜீவ பர உண்டகிய விரிவனைத்தையுந் தத்துவக் கட்டளைகளிற் காண்க. பொருளாற்றலை மாத்திரந் தெரிவித்தாம். சொல்லாற்றலைத் தெரிவிக்கின், இடமின்றி விரியுமாதலால் சுருக்கி உரைத்தனம். பொருளல்லவற்றைப் பொருளென்பார் மதஸ்தர். பொருளைப் பொருளென்பார், அத்துவிதிகள். கட்சி வாதத்திற் நில்லாது, பதார்த்த சம்மத வாதத்தில் நிற்கின், முரணுதற் கிடமின்றிச் சும்மாவிருத்தல் வாய்க்குமென்க. பழுதை உண்மை. பாம்பு பொய். இந்தப் பொய், சந்தேக விபரீதத்தால் அகலாது கேட்டல் சிந்தித்தல் தெளிதலால் அகலுமாறு போன்று, மூலப் பிரகிருதியும் எனக் கொள்க. பாம்பாகிய பொய், அடங்குதல், பழுதையாகிய மெய்யில் என்றாற் போல, மூலப் பிரகிருதியாகிய பொய் அடங்குதல் பிரமமாகிய மெய்யிலெனக் கோடற்கு. அனைத்தும் இவ்வாறடங்கும் என்றார். இக்கவி, தன்பால் சுருங்கச் சொல்லல் ஆழ முடைத்தாதல் முறையின் வைப்பு விழுமியது பயத்தலென்னும் அழகுகளை அமைத்து நிற்கக் கண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிர் முகத்ததாகும் இடத்துப், பூர்வ பட்ச மாதற்கு இயைவன அனைத்தும். சித்தாந்த பட்சமாதற் கியைவனவாகவும் அந்தர் முகத்தாகுமிடத்துச், சித்தாந்த பட்சமாதற் இயைவன அனைத்தும் பூர்வ பட்சமாதற் இயைவனவாகவுந் தோற்றற் ஏதென்னை கொலோ? அனைத்தும் அறிவின் பிரதிபலனமெனக் கோடற்கு இயைதலின் சத்தியமன்று. மித்தையே, அறிவொன்றே சத்தியமென்றேற்றது அருத்தாபத்தி. (13)

# பிரகிருதி முதலியவற்றின் நிவீர்த்தி.

பகர்வரிய முதற்பொருளின் விவர்த்தமதா மூலப் பகுதி இந்த உலகை மெய்யாப் பார்த்திடுதல் மாயை, அகம் உடல் என் இருப்பதுவே அவித்தை தத்துவங்கள் அனைத்தையுந் தானென மறைப்பது ஆவரணம் விடய, சுக விருத்தி விட்சேபம் இவை களைந்து அடைவே தொலைய பரி பூரணத்தாற் சோதனை தற்பதத்தாற், மிக உணருந் தொம் பதத்தாற் தத்துவ ஞானத்தால், விதேக முத்தி, அதனாலும் விடப் படுதல் வீடாம்.

**பகர் வரிய முதற் பொருளின் விவர்த்தம் அதாம் மூலப் பகுதி இந்த உலகை மெய்யாப் பார்த்திடுதல் மாயை, அகம் உடல் என்று இருப்பதுவே அவித்தை. தத்துவங்கள் அனைத்தையுந் தானென மறைப்பது ஆவரணம். விடய, சுக விருத்தி விட்சேபம். இவை களைந்து அடைவே தொலைய பரிபூரணத்தாற், சோதனை, தற்பதத்தான், மிக உணருந் தொம்பதத்தாற், தத்துவ ஞானத்தால், விதேக முத்தியதனாலும், விடப்படுதல் வீடாம்.**

**(இதன் பொருள்)**

**பகர் வரிய முதற் பொருளின் விவர்த்தம் அதாம் மூலப் பகுதி :-** — யாவரானு இங்ஙனமாய நிலைய தென ஓதற் கரிய முதற் பொருளாகிய பரவத்துவின் கண் அர்த்த ரூபமாக அன்றி அநர்த்த ரூபமாகத் தோற்றுவது மூலப் பிரகிருதி யெனப்படுவதாம்.

**இந்த உலகை மெய்யாப் பார்த்திடுதல் மாயை :-** — தனக்கெனச் சொரூப இன்றிய உலகைச் சத்தியமாகக் கண்டு உழலுதல் மாயை யெனப்படுவதாம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அகம் உடல் என்றிருப்பதுவே அவித்தை :-** — தேகமே நானென்று அகங்கரித்து உழல்வதுவே அவித்தை எனப் படுவதாம்.

**தத்துவங்கள் அனைத்தையுந் தானென மறைப்பது ஆவரணம் :-** — தத்தவங்கள் எனப்படுவன அனைத்தையுந் தானே எனக் கொள்ளுமாறு மறைக்கத் தகுவது ஆவரணம் எனப்படுவதாம்.

**விடய சுக விருத்தி விட்சேபம் :-** — விடய சுகம் வேண்டி விவகரிக்கும் விருத்திகளனைத்தும் விட்சேபம் எனப் படுவதாம்.

**இவை களைந்து அடைவே தொலைய பரி பூரணத்தாற் சோதனை கற் பதத்தான், மிக உணருந் தொம்பதத்தாற் தத்துவ ஞானத்தால் விதேக முத்தி அதனாலும் விடப்படுதல் வீடாம். :-** — இங்கே கூறிவந்த இப்பேதங் களைந்து மொருங்கே தொலைய வேண்டிப் பரிபூரண ஞானத்தினாலும், தற்பத சோதனையினாலும், மிகவும் விசாரித்துணரத் தக்க தொம்பத சோதனையினாலும், தத்துவ சோதனை ஞானத்தினாலும், விதேக கைவல்ய ஞானத்தினாலும் விடப் படுவது வீடெனப் படுவதாம்.

மூலப் பகுதி, மாயை, அவித்தை, ஆவரணம், விட்சேபம் என்னும் ஐந்தையும் நிரலே தொலைக்க வேண்டிப் பரிபூரண ஞானம், தற்பத சோதனை, தொம்பத சோதனை, தத்துவ சோதனை, விதேக முத்தி என ஐந்தாகக் கூறுதலால், நிரனிறையணி பரிபூரண ஞானத்தால் மூலப் பகுதி தொலையும் வகை: ஜனன மரணமும், அவஸ்தாத்திரயங்களும், சாட்சிகளும், ஸ்தூல முதலிய தோற்றங்களும், அவ் அவற்றிற்குரிய இன்ப துன்பங்களுந் தோன்றி மறைதற்காதாரம் அறிவாதலால் அந்தந்த மயமாகாது, அறிவாக விளங்கி நின்ற விடத்து ஞானமெனவும், அந்நிலையை மறந்த விடத்து அஞ்ஞானமெனவும் பொருள்படுமாதலின், இவ் விரண்டு பாரிசமுஞ் சாயாது, நடு நிலை தானாய விடத்துச், சற்றுஞ் சலன முறாமையும், தற்பத சோதனை ஞானத்தால், மாயை தொலையும் வகை: அந் நடு நிலை நழுவிய விடத்து அஞ்ஞானம் ஞானம் போற் காண்டலின் சகத்துப் பிரதிபலிக்கும். அதனை மெய்யாகக் காணவரும். அங்ஙனங் காணுதலாகிய மயக்கம், சமஷ்டி விகாரத்திலாதலால், அந்தச் சமஷ்டி விகாரமும், தற்பத சோதனையில் நில்லாதழியும். அங்ஙனம் அழிந்தவுடன், சிவப் பாழாதலால், அது தானாய விடத்துச், சற்றுஞ் சலன முறாமையும், தொம்பத சோதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானத்தால், அவித்தை தொலையும் வகை: ஒருகால், தற்பத சோதனை ஞானம் நழுவிய விடத்து, மீண்டுஞ் சகத்துத் தோற்றும். அங்ஙனந் தோற்றிய வழி, அதனது காரியமாகிய வியட்டி, தூல தேகந் தோற்றம். அதைத் தானெனத் திடமாகக் கொண்டது, அவித்தை யெனப்படுமாதலால், அது நாசமுறுவதும் எங்ஙனம்? உறாத விடத்து அல்லலே பெரும் பயனாக முடியும். அதனை ஒழிக்கத் துணிந்த விடத்துத், தொம்பத சோதனை தூலவுடல் ஆதேயமாகவும், உபாதேயமாகவும், விகாரமாகவும், ஆரோபமாகவும் ஏற்றற்கியையும். அங்ஙனம் ஏற்றற்கு இயைந்த விடம், பாழாதலால், சீவப் பாழெனப்படும். அங்ஙனமாய சீவப் பாழ், தானாய விடத்துச் சற்றுஞ் சலன முறாமையும், தத்துவ ஞானத்தால் ஆவரணம் தொலையும் வகை: தொம்பத சோதனை ஞானம் ஒருகால், நழுவிய விடத்து மீண்டுந் தூலவுடல் தோற்றும். அங்ஙனந் தோற்றிய வழி அதனது காரியமாகிய அக மமதையும், அயலும், உறவும், தாய் தந்தை என்னும் முறையும், ஆண் பெண் அலி என்னும் வகையும், ராகத் துவேஷாதிகளும் இவை போல்வன பிறவும் எய்தற்கிடம் பெறுமாதலின் இவை அகலாக்காறும் இம் மயக்கம் ஆவரண சத்தியெனப் பெயர் பெறும். இந்தச் சத்தி உபாதான உபாதேய வகைக் கியைந்த தத்துவங்களைத்தையும் அங்ஙனமாக ஆராய்ந்த விடத்துக் கணமேனு நில்லாதகலும். அங்ஙனம் அகன்றவிடம் வியாபக வியாப்பிய ரகிதமாதலின் அந் நிலை தானாய விடத்துச் சற்றுஞ் சலியாமையும், விதேக முத்தியதனால் விட்சேப சத்தி தொலையும் வகை: விதேக முத்தியெனல் ஞானாஞ்ஞான சத்தியெனல் பந்தமாய வழி பந்த நெறியாகவும், விடுதியாய வழி விடுதி நெறியாகவும் நிற்றற்கியைந்த உணர்வு. இவ்வுணர்வு நிற்குமளவும் ஓர்துணிவின்றி அலையும். இவ் அலைவு கற்பனா சகிதம் ரகிதம் அற்ற விடந் தானாய விடத்துச் சற்றுஞ் சலியாமையுமாமென்க. இவை முரணின்றி விளங்கல் தனக்குச் சுபானுபவம் வாய்ந்த விடத்தன்றி ஏனைய விடத்தாகாதென்க. பொருளல்லவற்றைப் பொருளாகக் கொண்ட பாதகர்க்கு இது யாது பயன் தரும். ஆதலின், திரிவித உலகத் அரிதொரு ஞானி எனப்பட்டதென்க. (14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரஹ்ம சப்தாவத்தை.

**அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.**

சோதிதா னாயிருந்தாற் பிரமமதா
மாயையிலே தோய்ந்தா லீசன்
காதலவித் தையிற்கூடிற் சீவனாம்
பிரமாதா கரணந் தோய்ந்தான்
மேதகுமிந் தியஞ்சேர்ந்தாற் பிரமாண
மறியாத விடயத் தெய்தல்
யாததுவே பிரமேய மறிவதிற்போந்
தாற்பல மேழவத்தை கூடும்.

**சோதி தானா யிருந்தாற் பிரமமதாம்
மாயையிலே தோய்ந்தால் ஈசன்
காதல் அவித்தையிற் கூடிற் சீவனாம்
பிரமாதாம் கரணந் தோய்ந்தால்
மேதகு இந்தியஞ் சேர்ந்தாற் பிரமாணம்
அறியாத விடயத் எய்தல்
யாததுவே பிரமேயம் அறிவதிற்
போந்தாற் பலம் ஏழவத்தை கூடும்.**

**(இதன் பொருள்)**

**சோதி தானாயிருந்தாற் பிரமமதாம் மாயையிலே தோய்ந்தால் ஈசன் காதல் அவித்தையிற் கூடிற் சீவனாம் :-** — யாதோ ரூபாதி யோடுங் கலப் பற்றுச் சைதன்யம் சுயம் பிரகாசமாகத் தானே தானா யிருத்தால் பிரமமெனப் பேர் பெறுவதாம். அது மாயையில் பிரதி பலித்தா ஈசன் எனப் பேர் பெறுவதாம். இச்சா மயமாகிய அவித்தையிற் பிரதிபலித்தால் சீவன் எனப் பேர் பெறுவதாம்.

**பிரமாதாம் கரணந் தோய்ந்தால், மேதகு இந்தியஞ் சேர்ந்தாற் பிரமாணம் :-** — அந்தக் கரணத்தில் பிரதி பலித்தால் பிரமாதா வெனப் பேர் பெறுவதாம். சிறப் புற்ற ஞானேந்திரியங்களில் பிரதி பலித்தால் பிரமாண மெனப் பேர் பெறுவதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறியாத விடயத் எய்தல், யாததுவே பிரமேயம், அறிவதிற் போந்தாற் பலம், ஏழவத்தை கூடும்.:-** — தன்னைத் தானறியாத விடயத்தின் கண் பிரதி பலித்தல் யாதோ அதுவே பிரமேய மெனப் படுவதாம். இங்ஙனமாய விடத்துச் சர்வ மூடமா நின்றுள்ள உணர்வில் பிரதி பலித்தால் பலமெனப் படுவதாம். ஆதலினிவ் ஏழிடங் களும் ஏழ வஸ்தையெனச் சொல்லக் கூடும்.

இங்கே சோதி யெனல் சைதன்யத்தை. தனது சோதியே தானேக விளங்குமிடத்து மேல் கீழொப்பின்மையின் அவ் வவ் அவசரத்தேற்கு நிலை பிரம மெனவும், அந் நிலை மறந்த அவசரம் பெரும் பாழாதலால் அந்தப் பாழ் மய மாய விடத்து அந்தச் சைதன்யஞ் சமஷ்டி ரூபமாக நின்று நிமித்த காரணம் எனப்படுதலின் அவ் வவ் அவசரத்தேற்கு நிலை ஈசனெனவும், அந் நிலை இழந்த அவசரம் ஒன்றும் தோன்றா நிலையாதலால், அந்நிலை மயமாக அந்தச் சைதன்யம் நிற்புழி வியட்டிரூபமாகிக் கிஞ்சிக்கின் எனப்பட்டு, வியட்டி உடல் நானென்று மயங்கி நிற்கும். அம்மயக்கத்திற்குப் பேர் அவித்தை யெனலால், அவ் அவசரத்தேற்கு நிலை சீவனெனவும், அந் நிலை மெல்ல விழந்த விடத் தேற்குநிலை, சமுசய, நிச்சய, சாஞ்சல்ய மாதலால், கரணம் எனப்படும். அக்கரணமே, தானாய், அச் சைதன்யம், மயக்குற்று நின்ற அவசரம் பிர மாதா வெனவும், அதுவும் மெல்ல நழுவியக் கண், இடந் தரற்பாலது இந்திரியமாதலால், அவ் விந்திரிய மயமாய் அந்தச் சைதன்யம் நிற்கும் அவசர நிலை, பிரமாணமெனவும், அதுவுந் தவறிய விடத்திடமாக நிற்றற்பாலது விடயமாதலால் அச் சைதன்யம் விடய மயமாய விடத்தேற்கு அவசர நிலை பிரமேயமெனவும். அங்ஙனமும் நில்லாது அதோ முகத்ததாய வழிச் சுகப்பேறதா நிற்றலின், அந்தச் சைதன்யம், நிற்கும் அவசர நிலை, பலமெனவும் பேர் பெறுதற் கியைந்து நிற்றலின் காரணக் குறி யென்றாம். ஓர் சைதன்யமே, அவ்வவ் அவசர நிலையாதல் போற் காண்டலின் அவ் வவ் அவசர நிலைப் பெயர் தந்தனர். இவ் அவசர நிலைகளும், அவ் அவற்றிற் கியைந்த பேர்களும் அறிவே வடிவாயவிடத் தெங்ஙனம் நிலையுறும்? ஆதலில் இவையனைத்துங் கற்பிதமெனக் கண்டு, தானே தானாக நிற்பது, கௌணமன்று, முக்கிய மென்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஷ்டப்பிரமாணம்.

உற்றெதிரே காண்டல்பிரத் தியட்சமனு மான
மோங்குபுகைகண்டுநெருப் புண்டெனவேயுணர்தன்
மற்றுவமைமரைபசுப்போலெனல் சத்தம்பெரியோர்
வாய்ச்சொல்லருத் தாபத்தி மதத்தவுட லதனா
லற்றவுப வாசியொளித் துண்பானென் றுணர்த
லாபாவமுன்பி னிடைபொருகா லத்துமிலையென்னல்
நற்றியவிம் மரத்தினிற்பே யுண்டெனலை தீக
நாட்டுதலே சம்பவம்ப்ர மாணமெட்டா நவிலும்.

**உற்று எதிரே காண்டல் பிரத்தியட்சம், அனுமானம்**
**மோங்கு புகை கண்டு நெருப்பு உண்டெனவே உணர்தல்**
**மற்று உவமை மரை பசுப்போலெனல், சத்தம் பெரியோர்**
**வாய்ச் சொல் அருத்தாபத்தி, மதத்த உடலதனால்**
**அற்ற உபவாசி ஒளித் துண்பான் என்றுணர்தல்**
**அபாவ முன் பின் இடை யொரு காலத்தும் இலை யென்னல்**
**நற்றிய விம் மரத்தினிற் பேய் உண்டெனல் ஐதீகம்**
**நாட்டுதலே சம்பவம் பிரமாணம் எட்டாக நவிலும்.**

**(இதன் பொருள்)**

**உற்றெதிரே காண்டல் பிரத்தியட்ச அனுமானம் ஓங்கு புகை கண்டு நெருப் புண்டெனவே யுணர்தல் :-** — நேரே ஒன்றினை யுற்றுக் காண்டல் பிரத்தியட்சப் பிரமாணமாம் மேலே ஓங்கி யெழுகின்ற புகையைக் கண்டு அங்கே நெருப்புண்டெனக் கோடல் அனுமானப் பிரமானமாம்,

**மற்று உவமை மரை பசுப் போலெனல் சத்தம் பெரியோர் வாய்ச் சொல் அருத்தாபத்தி :-** — அப்பிரத்தியட்சமா நின்றுள்ள மரை யென்னு மோர் மிருகத்தைக் காண விரும்பினோனுக்கு அஃது, அலை தாடி இன்றிய பசுவை யொக்கு மெனக் கூறுதல் உவமானப் பிரமாணமாம். சுருதி யுத்தி யனுபவ ஒத்துணர்ந்த மகான்களது வாக்கியமே சத்தப் பிரமாணமாம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அருத்தா பத்தி, மதத்த உடலதனா லற்ற உபவாசி யொளித் துண்பான் என்றுணர்தல், அபாவம், முன் பின் இடை ஒருகாலத்தும் இலை யென்னல் :-** — மதத்துக் கொழுத்திருக்கின்ற உடல் காரணமாக அன்ன பானம் அருந்துவதே இல்லை. நான் நித்திய உபவாசி என்பானது சொல்லை நம்பாமல் இவன் கரவில் உண்கின்றான் என்று உணர்தல் அருத்தா பத்திப் பிரமாணமாம். இக் கபடம், மண்ணையும் நூலையு மன்றி முன்னும் பின்னும் இடையிலும் எப்போது இல்லை யெனச் சாதித்தல் அபாவப் பிரமாணமாம்.

**நற்றிய இம் மரத்தினிற் பேயுண்டெனல் ஐதீகம் :-** — யாவராலும் விரும்பத்தக்க இந்த விருட்சத்தில் பேய் உண்டெனக் கோடல் ஐதீகப் பிரமாணமாம்,

**நாட்டுதலே சம்பவம் பிரமாணம் எட்டா நவிலும். :-** — நூறென்னுந் தொகையன்றி ஆயிரமென்னுந் தொகை வருதற்கிடமே இல்லையெனச் சாதித்தல் சம்பவப் பிரமாணமாம். இங்ஙனமாதற் கியைந்த பிரமாணங்கள் எட்டென வேதங்கள் கூறா நிற்கும்.

நவிலும் என்னும் வினை முற்றுக்கு எழுவாய் வேண்டுதலின் வேதமென்றாம். பிரத்தியட்சப் பிரமாணம் இரு வகைத்து, விடய கதப் பிரத்தியட்சம் ஞான கதப் பிரத்தியட்சமென இரண்டுள், விடய கதப் பிரத்தியட்சம் தன்னை அயலாகவும் ஞான கதப் பிரத்தியட்சந் தன்னைத் தானாகவுங் காண்டலை. அனுமானப் பிரமாணம் மூன்று உறுப்புகளை யுடைத்து, அவை: பிரத்திஞ்ஞை, ஏது, திருட்டாந்தம் என்பன. இம் மலை அக்கினியுடைத்தெனல், பிரதிஞ்ஞை. புகையால் எனல் ஏது. மடைப்பள்ளி போலெனல் திருட்டாந்தம். இன்னும் இவ்வாறு விரிந்து வருவனவற்றையும் ஏனைய பிரமாணங்களின் மிக்க விரிவனைத்தையும் விரிக்கப் பெருகுமாதலால் இந்நூலாசிரியர் சுருக்கி உரைத்தனர், சுருங்கச் சொல்லி விளங்க வைத்தற்கு. **ஞான கதப் பிரத்தியட்சம் இரு வகைத்து, போலி ஞானம், எதார்த்த ஞானமென.** போலி ஞான கதப் பிரத்தியட்சமாவது, பிறவிக் குருடனுக்குத் தெய்வ கதியால், பூத சூரியன் காணப்பட்டாற்போல, அகக் குருடனுக்குப் பூர்வ தவ சம்ஸ்காரத்தால் ஞான சூரியோதயம் காணப்படும். அவனுக்குச் சில கால வரையுங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படாத உலகம் பின்னர்க் காணப்பட்டு வர அதனை அனாதி நித்திய மென்பன். இதனால் ஏகத்துவம் வாய்ப்ப தெங்ஙனம்? கூடாமையின் முடிவறியாது உழல்வது. இனி, எதார்த்த ஞான கதப் பிரத்தியட்சமாவது அங்ஙனங் காணப்பட்ட ஞான சூரியோதய விளக்கத்தில் விடாத நாட்டம் பல்லூழி காலம் பயிலப் பயில அங்ஙனம் பயிலலே ஞான சூரியனுக்கு உலகம், உபாதேயம் - ஆதேயம் - ஆரோபம் - விகாரம் - அத்தியாசம் - கற்பனை - சாயை - எனப் பொருடரலே அதன் இயல்பாகும். இங்ஙனமாய வியல்பு ஏகமே வாத்துவைதமாக்கி நிலைக்கச் செய்வது, போலிஞானத்தை எதார்த்த ஞானமெனக்கொண்டு அங்கிகரித்தலை மறுத்தது முரணேனும். எதார்த்த ஞானமடைதற்கு, அடுத்த நெறியாய் இருத்தலின், ஏற்கும் தகுதியுடையது. இந்தப் போலி ஞான முண்டெனக் கோடற்கு அனுமானப் பிரமாணமும் வேண்டும். எங்ஙனமெனின், ஓரறிவு முதல் ஆறறிவு வரையினும் உள்ள விகற்ப பேத நிலை உயிர்கள் மாட்டு இயங்கலின் இவ் வுயிர்கள் பிரஞ்ஞை யுடைத்தெனல், பிரதிஞ்ஞை, உணர்தலாகிய இயக்கத்தினாலெனல், ஏது, இதனைக் காண்டல் தன்னிடத்தி லெனல், திருஷ்டாந்தம், இங்ஙனமாய அங்க முடைத்தாதல் என்க. இந்த அனுமானப் பிரமாண முண்டெனக்கு கோடற் உவமானப் பிரமாணமும் வேண்டும். எங்ஙன மெனின். எவ் உயிரிடத்துமுள்ள பிரக்ஞை துக்க நிவிர்த்தி தருவதெனின் யாது போல்வது? யாதிடத்தது? எங்ஙனங் காண்டற்கு உரியது என்ற சங்கை எழாதமைதற்குரிய நிலை யாது? வியாபக விளக்கமாயும் தன்னைத் தானுணர்தற் பாலதாயும், சுத்தத் தெளிவாயும், நிற்கும் வெளி போல்வது, தன்னையே இடமாகவுடையது, தன்னை யன்றிச் சங்கற்ப மின்றாய தாதலினென்க. இவ் உவமானப் பிரமாண முண்டெனக் கோடற்குச் சத்தப் பிரமாணமும் வேண்டும், எங்ஙனமெனின், இங்ஙனமாய உபமானத்தா லேற்பதாகிய நிலை சிறுபான்மை யாராலோ பெரும்பான்மை யாராலோ வென்ற ஐயந் தவிர்தற்கும், சோதனை, ஞாயம் பொருத்தம் முற்றும் முரணாது இயைதற்கும் இன்றியமையாயின், சத்தம் சுருதி ஆகமம் வேதம் இவை போல்வன வொரு பொருட் கிளவி. இச் சத்தம் அனைத்தையுங் கற்றது யாதோ அதனைக் கற்கக் கருவியாயும் அயலைக் கற்கக் கற்றது யாதோ அதனைக் கற்கக் கருவியாயும் அயலைக் கற்கக் கருவியாயும் நிற்றலைப் பற்றிப் பிரபல சுருதி, அற்ப சுருதி யென்றிரு வகைப்படும். இவ் உபநிடதம் அயலை யுணர்த்தாமையானும் சோதனையாதி மூன்றிற்கு முரணாது நிற்றற் கியைதலானும் பெரும்பான்மையோரால் ஏற்றற்பால தெனவும் பிரபல சுருதி அற்ப சுருதி யென்றிரு வகைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் உபநிடதம் அயலை யுணர்த்தாமையானும் சோதனையாதி மூன்றிற்கு முரணாது நிற்றற் இயைதலானும் பெரும் பான்மையோரால் ஏற்றற் பாலதெனவும் பிரபல சுருதியெனற் கியைதற்பாலதெனவும் இடந்தருதலின் சத்தப் பிரமாணமும் வேண்டிற்றென்க. அறிவிற் சிறந்த எம் மதத்திணர்க்கும் மதாபிமானங் கழன்ற விடத்து உண்மை விளங்குமெனக் கண்டிருப்பதால் இ∴தெவர்க்கு முடன்பாடாம். எவர் மதமுங் கொள்கைக்கு உடன் படுமாறு போன்று இ∴ததீதத்திற் உடன் படலினென்க. வஸ்து பரிசோதனையி லென்ன கற்றும் ஆங்காங்குள்ள உள அறியாவிடத்து என்ன முடிபு தரும், இன்மையால் தள்ளற்காற்றே. இங்ஙனமாய தீர்ந்த நிலையில்லாவிடத்து ஈசுவர வாக்கிய மெனினும் அடியார் வாக்கியம் எனினு என் சிறப்பு. இந் நெறியா லேற்கப் பெற்ற சத்தப் பிரமாண முண்டெனக் கோடற்கு அருத்தா பத்திப் பிரமாணமும் வேண்டும். எங்ஙனமெனின், அறிவை அறிவு நுகரு மென்னும் சுருதிப் பிரமாணத்தை ஏலா ஒருவனது மொழி, தநுவாதிய சமஸ்த உலகமும் பாரித்திருக்கப் பெறுதலினானும் இங்ஙனம் பாரித்திருத்தல் தனது சமதிருஷ்டி விசேஷ திருஷ்டியின் பிரதி பலனமாக் காணப்படுதலினானு மறுக்கப்பாற்று, தனது இரு பார்வையின் விகற்பமன்றி இல்லாமையின். யாதானுமோர் தூல தேகத்தைக் காண்புழி யாது, பதார்த்தமென உன்னில் அங்ஙனமாகச் சமஸ்த தேகமும் மாமிச வடிவாகக் காணுமன்றோ? அப்போது ஏகத்துவமுஞ் சமத்துசமுமாய நிலை வரும். அங்ஙனம் உன்னாது கண்டமாக உன்னில் அங்ஙனமாய சமஸ்த வடிவங்களுள் கண்டமாகக் காணுமன்றோ, அப்போது விசேடத்துவமும் அநேகத்து வமுமாய நிலைவரும். இங்ஙனமாயது தனது திருஷ்டி பேதத்தை யன்றி வேறாய் இராமையின் அவனது மொழியின் அருத்தத்திற் ஆபத்து நேரிட்டது. அருத்தா பத்தி யெனல் சொற் பொருளுக்கு நஷ்டம் நேரிடல். ஆதலின், ஏற்கப் பாற்று, பல காலுற்று நின்றுணரும் இடத்தென்க. இந் நெறியா லேற்கப் பெற்ற அருத்தாபத்திப் பிரமாண முண்டெனக் கோடற்கு அபாவப் பிரமாணமும் வேண்டும். எங்ஙனமெனின், 'எங்கே நான் போற்றுவது மென்னையே' என்ற கவிபோல்வனவே பிரபல சுருதி அனைத்துமாதலாலும், இக் கருத்தை யன்றி, அற்ப சுருதி எனற்குப் பொருள் வேறின்மையாலும், உளதெனில், விட்ட லக்கணை ஆதிய மூன்றும் போந்தது வேறு பயன் கருதி அன்றாதலானும் மறுக்கற் பாற்றே. தன்னைத் தான் மறந்த மறப்பே ஜக ஜீவ பர மெனற்குப் பொருளாதலின் சோதனையில் அநர்த்த ரூபம் எனற்கு உடன்படுகின்றன. இவை அனைத்துந் தனது பிரதி பலனமாதலின் இவை மெய்ப் பொருள் அன்றென மறுக்க, அபாவம் நான்கு எனப் போந்த தென்க. தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்மரனை யன்றிக் கட பட பாவம் வேறுளவாகத் தோற்றற்கு இடம் பெறாது போதற்கு ஏதென்னையோ? இன்மையின் அபாவப் பிரமாணம் ஏற்றற்பாற்றே. இதோ ஜகத்துளதெனின் உனது ஞெப்திப் பிரியத்தை யன்றி வேறு பொருளாகக் காட்டற் இடந்தராததென்? ஆதலின், இன்றியமையாமை பற்றி அபாவப் பிரமாணமும் வேண்டும். இ∴தன்றியும் சச்சிதானந்தம் அநிர்த ஜடதுக்கம் என்னுங் குணத்தையன்றிப் பிரமத்துக்கும், ஜகத் தெனற்குங், குணி வேறிலாததற்கும் சச்சிதானந்தத்தை யன்றி யநிர்த ஜட துக்கம் வேறிலதாதற்கு ஏதென்னை கொலோ? இவை யனைத்தும் உய்த்துணரா விடத் தெய்தற்பாலதாகிய மயக்கம் போக்கற் கேதுவாகிய அபாவப் பிரமாண முண்டெனக் கோடற் ஐதிகப் பிரமாணமும் வேண்டும். எங்ஙனமெனின் ஜகத் உண்டென்பதில் ஓர் கர்த்தா விருக்க வேண்டும். உளனெனக் கொள்ளில் கண்டவரிருக்க வேண்டும். இன்றெனின், தனு கரணாதிகள் வந்து போதற்கும், உயிர்கள் இயற்றுதற்கும், சேதனத்துவமும் கர்த்தத்துவமும் இயல்பாயிருக்கவேண்டும். இன்மையால் ஒருவனுளனாகக் கோடற்பாற்று. நாஸ்தி நபாதிக் உடன் படுவதென்னெனின், ஆஸ்திகமா நிற்பதும், நாஸ்திகமா நிற்பதும், ஒன்றிலொன்று இல்லாமற் போவதும் அபாவமன்றோ, இந்த அபாவமும் அறிவன்றியிருக்க வேண்டும், இன்மையாற் தள்ளற் பாற்றே. தானாகிய அறிவை யன்றி யெம் மயக்கமும் இன்மையின் அறிவு கோடற்பாலதாதல் ஐதிகப் பிரமாணமும் வேண்டற்பாற்று. இங்ஙனமாய ஐதீகப் பிரமாண முண்டெனற்குச் சம்பவப் பிரமாணமும் வேண்டும். எங்ஙனமெனின் ஞெப்தி அயலாக அணுவணுவாக ஸ்புரிக்காவிடத்து மகத்தாக ஜகத்து காணப்படுதற்கு ஏதின்மையானும் பிண்டித்த பொருளை யன்றிப் பிண்டப் பொருள் வேறிலதாக உதாரணங் காட்டற்கு இயைதலானும் அது தாஷ்டாந்திரத்திற்குத் திருஷ்டாந்தமாதலானு மெங்ஙனம் முரணும். ஞெப்தி சலியாவிடத்து இக் கற்பனைகள் அனைத்தும் எங்ஙனம் வருதற் கிடம் பெறும், பெறாதாதாலின் சம்பவப் பிரமாணமும் வேண்டும். எனவே, இவ் வஷ்ட விதப் பிரமாணமுந் தன்பால் இலனெனக் காட்ட இங்ஙனங் கூறிய தென்க. இவ் உளவறியாதார் தாஷ்டாந்தத்திற் செல்ல வகை யறியாது வாளா கற்று அவலமாயின ரென்பதைக் குறிக்க இவ் உபநிடதம் நிற்றலின் இதனை ஆழ்ந்துணர்க வென்பது கருத்து.

(16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீவ சப்தா வஸ்தை.

மன்னியதோ அஞ்ஞானந் தனையறியா
ததுமறைப்பா வரண மாகும்
பன்னியவிட் சேபமென தெனலாப்த
வாக்கியமே பரோட்ச ஞானந்
தன்னிலைதா னானதுவே யபரோட்சங்
கண்டதொரு சந்தோ டத்தி
னந்நிலையே துக்கமும்போ யானந்த
மடைவதுமே ழுவத்தைப் பேறாம்.

**மன்னிய தோர் அஞ்ஞானந்**
**தனை அறியாதது மறைப்பது ஆவரணமாகும்**
**பன்னிய விட்சேபம் என தெனல் ஆப்த**
**வாக்கியமே பரோட்ச ஞானம்**
**தன்னிலை தான் அதுவே அபரோட்சங்**
**கண்டதொரு சந்தோடத்தின்**
**அந் நிலையே துக்கமும் போய் ஆனந்தம்**
**அடைவது ஏழவத்தைப் பேறாம்.**

**(இதன் பொருள்)**

**மன்னிய தோர் அஞ்ஞானந்தனை அறியாதது மறைப்பது ஆவரண மாகும் :-** — தன்னைத் தானறியாத அவசரம், நிலை பெற்ற அஞ்ஞானம் எனப்படுவதாம். அங்ஙனம் அறிய வொட்டாமல் மறைத்த மறைப்பாக நின்ற அவசரம், ஆவரண மெனப்படுவதாம்.

**பன்னிய விட்சேபம், எனதெனல் ஆப்த வாக்கியமே, பரோட்ச ஞானம் :-** — அங்ஙனம் மறைத்த மறைப்பால் எனதென வந்த அசரம், விட்சேபம் எனப் படுவதாம் இங்ஙனம் மருண்டு கலங்கித் தவிக்குங்கால் ஒருறுதி மொழி தந்தாள வேண்டி, ஒருவர் அங்கே வந்து கூறிய அவசரமொழி, ஆப்த வசனமாதலால், பரோட்ச ஞானமெனப் படுவதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தன்னிலை தானானதுவே அபரோட்சங் கண்டது, ஒரு சந்தோடத்தின் அந்நிலையே, துக்கமும் போய் ஆனந்தம் அடைவது, ஏழவத்தைப் பேறாம்.** :- அங்ஙனங் கூறிய ஆப்த மொழியால் தன்னிலையில், தானாகத் தெளிந்து, கலங்காது, நின்ற அவசரம், அபரோட்ச ஞானம் எனப்படுவதாம். அங்ஙனந் தன்னைத் தான் தரிசித்த அவசரத்திலெழுவது, ஆனந்தப் பெருக்காதலால், அதனாலுண்டாய அவசரம், துக்க நிவிர்த்தி யெனப்படுவதாம். அத் துக்க நிவிர்த்தி எய்திய அவசரம், தடை யற்ற ஆனந்தம் எனப்படுவதாம். இந் நெறித்தாகப் போந்த இவை அனைத்தும் ஏழ் அவஸ்தையின் பயனெனப்படும்.

அஞ்ஞானம் - காரண தனு. ஆவரணம் - சூக்கும தனு. விட்சேபம் - தூல தனு. இது காறுங் கீழாயிறங்கு நெறி. இதனைப் பகிர் முகத்த தெனவும், பரோட்சம் - தூல தனு கழற்றி. அபரோட்சம் - சூக்கும தனு கழற்றி. துக்க நிவிர்த்தி - காரண தனு கழற்றி. தடையற்ற ஆனந்தம் - மகா காரண தனு கழற்றி. இது காறும் மேலாகச் செல்லு நெறி. இதனை அந்தர் முகத்த தெனவுங் கூறற்கு இயையுமாதலின், அத்தியாரோபம் அபவாத எனக் கண்டாம். இ்.்து இரு வினை யொப்பு மலபரிபாகர்க்கு அன்றி, ஏனையோர் எத்திரத்தாராயினும் அவர்க்கு விளங்காது, தன்னிழப்பும் அகலாது. ஆதலின், 'தன்னிழப்பை என்ன கற்றுச் சாதிப்பான்' என்றார் பிறரும். நுண்ணுணர்வோராயினும் ஞானா ஆசானின்றி அமையாது. ஆங்காங்குப் புடைபெயர்ச்சி விகற்ப பேதமே வினை முதல் விகற்ப பேதமாகவும், குண விகற்ப பேதமே, குணி விகற்ப பேதமாகவுந் தோன்றும், இவற்றை ஆசான் அனுக்கிரக விளக்கத்தால் கண்டு கற்றல், செய்பவன் கருவி முதலியவாறும் பொருள் இடங் காலம் முதலியவாறு இன்றித் தானோ தானாக விளங்கும். இதனைக் காட்டற்கு இங்ஙனங் கூறியதென்க. பரோட்ச நிலை யெய்தும் அளவும் எத்தனையோ தூல தேகம் வந்து வந்து அகலும். அதுகாறும் அகலாது. நின்றுள்ள சூக்கும தனு அபரோட்ச நிலை எய்தும் அளவும் எத்தனையோ வந்து வந்து அகலும். அதுகாறும் அகலாது நின்றுள்ள சூக்கும தனு அபரோட்ச நிலை யெய்தும் அளவும் எத்தனையோ வந்து வந்து அகலும், அதுகாறும் அகலாது. நின்றுள்ள காரண தனு துக்க நிவிர்த்தி நிலையெய்தும் அளவும், எத்தனையோ வந்து வந்தகலும். அது காறும் அகலாது, நின்றுள்ள மகா காரண தனு தடை யற்ற வானந்த நிலை யெய்துமளவு அகன்றே விடும். மகா காரண தனுவாவது தானே தானாய நிலை. அதுவுங் கற்பனை கழன்ற நிலை யெனப்படுதனானும் அசுத்தங்கட்கு சுத்த மெனப்படுதலினாலும். ஆதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணங்கட்கு அநாதி காரண மெனப்படுதலினாலும் அதுவுந் தவிர வேண்டியதே யென்க. இதனை யனுபவத்தாலன்றிச் சுருதி யுத்தி பூர்வகத்தால் முடிவு காட்டற் கொண்ணாததால் மதஸ்தரென வேறு நின்றனர். மத மெனல் - தத் தமக்குரிய கொள்கை. கொள்கை கடந்த தாதலின், அத்துவிதம் மதாதீதம் எனப்படும். ஐயமுளதேல் சோதனை யாதிய மூன்றால் இப்போதே காணலாமென்க.

# தூல சரீர முதல் பிரமம் வரைக்கும் திருஷ்டாந்தம்.

**எண்சீர்க்கழி நெடிலடியாசிரியவிருத்தம்.**

கடவடிவு தூலவுடல், கடசலமே கரணங் கடசலத்திலழுக் கவித்தை கடசலவான் சீவன், கடவெளி மேல்வெளிசாட்சி சத்தாதிவ் விரண்டுங் கடசலம்போற்றனு கரணங் கலங்கினுமே கலங்கா, கடசலம்வற்றாநிழல்போ லாசையினா லவித்தை கலந்துநிற்கு மிரவியெதிர் போலிரண்டு நில்லா, கடவெளிமேல் வெளிபோல் சற்குருவருளா னான்குங் கரந்துதிர சாட்சிசத்தாக் காண்பதத்து விதமே.

**கட வடிவு தூல உடல். கட சலமே கரணம். கட சலத்தின் அழுக்கு அவித்தை. கட சலவான் சீவன், கட வெளி மேல் வெளி. சாட்சி சத்தா இவ் இரண்டுங், கட சலம் போற் தனு கரணங் கலங்கினுமே கலங்கா, கட சலம் வற்றா நிழல் போல் ஆசையினால், வித்தை கலந்து நிற்கும், இரவி எதிர் போல் இரண்டும் நில்லா, கட வெளி, மேல் வெளி போல், சற் குருவருளால் நான்குங் கரந்து உதிர சாட்சி சத்தாக் காண்பது அத்துவிதமே.**

**(இதன் பொருள்)**

**கடவடிவு தூல வுடல், கடசலமே கரணங், கடசலத்தில் அழுக்கு அவித்தை, கடசலவான் சீவன் :-** — கடவடிவைப் போல்வது தூல சரீரம். கட சலம் போல்வது அந்தக்கரணம். கட சலத்தாலமைந்த அழுக்குப் போல்வது அவித்தை. கட சலப் பிரதி பிம்ப ஆகாயம் போல்வது சீவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கட வெளி மேல் வெளி சாட்சி சத்தாம் இவ் விரண்டும் :-** — கடத்துக்குள் நிறைய நின்ற வெளி போல்வது கூடஸ்தன். மேலே மேகத்துக்குள் நிறைய நின்ற வெளி போல்வது பிரமம். இவை இரண்டுஞ் சத்தா மாத்திரமா நிற்றலின் சாட்சி எனப்படும். இவ்விரு சாட்சியும்.

**கட சலம் போற் தனு, கரணங் கலங்கினுமே கலங்கா :-** — கலங்கிய கடம் போலவும் அதனுள் நின்ற சலம் போலவுந், தூல தேகமும் அந்தக் கரணமுங் கலக்க முற்றாலுங், கலங்குவன அல்ல.

**கட சலம் வற்றா நிழல் போல் ஆசையினால் அவித்தை கலந்து நிற்கும் :-** — நீங்கா நிழலினால் கட சலமுஞ் அழுக்கும் வற்றாது நிற்குமாறு போன்று, நீங்காவாம் அவையினால் அந்தக் கரணத்தோடு அவித்தையும் நீங்காது கூடி நிற்கும்.

**இரவி யெதிர் போல் இரண்டு நில்லா :-** — பூத சூரிய சந்நிதியில் வைத்து கட சலமும் அழுக்கும் எங்ஙனம் நில்லாவோ அது போன்று, ஞான சூரியன் எதிரில் வைத்த அந்தக் காரணமும் அவித்தையும் நிலையுறாது அழியும்.

**கட வெளி மேல் வெளி போல் சற்குரு வருளால நான்குங் கரந்துதிர சாட்சி சத்தாக் காண்பது அத்துவிதம் :-** — அங்ஙனம் அழியவே கடா காயம், மேலே மகா காயம், கட சலப் பிரதி பிம்பா ஆகாயம், மேக சலப் பிரதி பிம்பாகாயம், ஆகிய நான்கும் அழியும். அது போலச் சாட்சி யாகிய கூடஸ்த பிரமமும் அவற்றின் கற்பனை யாகிய சீவேசுரரும் சற் குருவின் மிக்க அனுக்கிரகத்தால் அழியும். அழிந்தவுடன் நான்கு ஆகாயத்திற்கும் விலட்சணமாகவும், ஸ்திரமாகவும், சாட்சியாகவும், உண்மையாகவும் காணப்படும். ஏகாகாயம் போல அப் போதே நான்கு சைதன்னியத்திற்கும் விலட்சண மாகவும் ஸ்திரமாகவும் சாட்சியாகவும் உண்மையாகவும் விளங்கும் ஏக சைதன் யமே அத்து வித மெனப்படுவதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட வெளி, மேல் வெளி, சாட்சி, சத்தா, இவ் இரண்டும், என்றதனானும், நான்கு என்றதனானும், ஏக வடிவு, தூல உடல், மேக சலம் கரணம். மேக சலத்தில், அழுக்கு மாயை. மேக சலப் பிரதி பிம்பாகாயம் - ஈசன், கட வெளி சாட்சிகூடஸ்தன். மேக வெளி சாட்சிபிரமம், எனக்கொள்ள வேண்டியதாயிற்று. மற்றவைகளையும் இது போல் நேர் நிரனிறையாக்கும், திர சாட்சி யெனற்கு மாறாகச், சட சாட்சி யென்பாரும் உளர். இரவி யெனப், பொதுப் படக் கூறினாரேனும் உவமேயத்தில் கொள்ள வேண்டுவது பற்றி, ஞான சூரியனென்றாம். ஏனைய குருவால் அவித்தை தொலையாத போது, மாயை யெங்ஙனந் தொலையும்? தொலையா விடத்து முன்போல நான்கு சைதன்யமாக விரியுமாதலின், சற்குருவருளால் என்றார். ஏகாகாயமே, நான்காகாயமாகக் காணப்படுமாறு போன்று ஏக சைதன்யமே நான்கு சைதன்யமாகக் காணப்படுதலை விசாரித்துத் தெளிதலே, அத்துவித மெனப் பட்டதென்க. (18)

## துவம் பதம் தத்ப தான் அனுபவம்.

தொம் பதத்தில் உபாதி கெடச் சொரூபமதாம் அதுபோற் தொன்மையதாந் தற்பதம் சோதனை செயவும் வேண்டுந், தம்பதவுடன் மூன்றினுக்குஞ் சீவனுக்கு முதலாஞ் சாற்று தன் மாத்திரைப் பகுதி தானு மிருப்பதனால், நம் பரிபூரணமறைந்து ஞானமின்றி முனம்போ நாடும் உயிராதலினால் நாதனருட்படியே, இம்பர் உபாதியும் போய் நிருபாதிகமா மதுபோ லெப்பொருளப் பொருளாகி யிருப்பதுதன் னியல்பே.

**தொம் பதத்தில் உபாதி கெடச் சொரூபமதாம். அதுபோற் தொன்மையதாந் தற்பதம். சோதனை செயவும் வேண்டும், தம்பதவுடன் மூன்றினுக்குஞ் சீவனுக்கு, முதலாஞ் சாற்று தன் மாத்திரைப் பகுதி தானும் இருப்பதனால், நம் பரிபூரணம் மறைந்து, ஞானம் இன்றி முனம் போல் நாடும் உயிராதலினால், நாதன் அருட்படியே, இம்பருபாதியும் போய் நிருபாதிகமாம் அதுபோல் எப்பொருள் அப் பொருளாகி இருப்பது தன் இயல்பே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்)

**தொம் பதத்தில் உபாதி கெடச் சொரூபமதாம் அது போல் தொன்மையதாந் தற்பதம் சோதனை செயவும் வேண்டும் :-** — தொம் பத சோதனை செய்யும் இடத்து வியட்டி யுபாதித் திரயங் கெடும். கெடவே சீவ சாட்சியாகிய கூடஸ்த சைதன்யம் தனது சொரூபமாக விளங்கும். அங்ஙனம் விசாரித்துத் தெளிந்தது போல இதற்கு முதற் காரணமாகத் தொன்று தொட்டுள்ள சமஷ்டி உபாதித் திரயங் கெட்டு ஈசுர சாட்சியாகிய பிரம சைதன்யம் விளங்குமாறு தற் பத சோதனையுஞ் செய்ய வேண்டும். செய்யா விடத்து,

**தம்பதவுடன் மூன்றினுக்குஞ் சீவனுக்கு முதலாஞ் சாற்று தன் மாத் திரைப் பகுதி தானு மிருப்பதனால் :-** — வியட்டி யுபாதித் திரயத்திற்கும் அவற்றிற் அபிமானியா நின்ற சீவனுக்கும் அவனுக் ஆதாரமா நின்றுள்ள அவித்தைக்கும் முதற் காரணமா நின்றுள்ள சமஷ்டி உபாதித் திரயம் அவற்றிற்கு அபிமானியாகிய ஈசன் அவனுக் ஆதாரமா நின்றுள்ள மூலப் பிரகிருதி ஆகிய இவை நசியாதிருப்பதினால்.

**நம் பரிபூரணம் மறைந்து ஞானமின்றி முனம் போல் நாடும் உயிராதலினால் :-** — நமது பரிபூரண சுவானுபூதி நிலை மறைந்து ஞானப் பிரகாசம் இன்றி முன்னர் அஞ்ஞான தசை போல விடயங்களை உயிர் நாடுதற்கு இயையும் ஆதலால்.

**நாதன் அருட்படியே இம்பரு பாதியும் போய் நிரூபாதிகமாம் அதுபோ எப்பொருள் அப் பொருளாகி இருப்பது தன்னியல்பு :-** — அங்ஙனம் நாடாதிருக்கு வண்ணம், சற் குருநாதனை யடுத்து, அவன் அருள் வழிச் சென்று, அவன் விளக்கிய விளக்கப் படி நின்றால், சமஷ்டி உபாதித் திரயத் தோடே, வியஷ்டி உபாதிகமின்றி, நிரூபாதிகமாக விளங்கும். அங்ஙனம் விளங்கியவாறு போல, பிறழாது நிற்பின், சகிதமும், ரகிதமுங் கழன்று நிற்ப, எப்பொருளோ, அந்தப் பொருள், தானாகியிருப்பது, தனதியல்பு நிலையாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூலவுடலை யன்றி, நானெனற்குப் பொருள், சுருதிப் பிரமாணத்தாலும், யுத்திப் பிரமாணத்தானு முயிரெனக் கோடலே யன்றி அனுபவத்தால் சற்றுமின்மையின், முமூட்சுவானவன் நானார்? உடல் வந்த வகை ஏது? என்று விசாரிக்க வேண்டி வரும். அப்போது தொம் பத சோதனைத் தெளிவால் ஐயந்திரிபற விளங்கும். அது மட்டும் தீரத் தெளிந்தன மென்று இறுமாந்திருக்கில், நிஷ்டையினின்று விழிக்குந்தோறும், உலகந்தோன்றும். தோன்றிய விடத்து அதுவாக வேண்டி வரும் வரின், ஆதார நோக்கு இழக்கும். இழக்கின் சமத்துவ நிலைகெட்டு, விசேட நிலை மேலிட்டு, ஆரோபமே மெய்ப் பொருளாக விளங்கும். விளங்கின், பிறப்பிறப்பு இன்ப துன்பங்களாகிய சூழலில் கலங்கச் செய்யும். ஆதலால் தற்பத சோதனை செய்யவும் வேண்டும் என்றார். தத்துவமசி சாம வேத, மகா வாக்கியம். தத் தெனல் ஈசன். துவம் மெனல் சீவன். அசி யெனல் பிரமம். இது வாச்சியார்த்தம். இ∴தன்றியும் தத் தெனல் ஈசுர சாட்சியாகிய பிரமம். துவம் மெனல் சீவ சாட்சியாகிய கூடஸ்தன். அசி யெனல் ஐக்கியம். இது இலக்கியார்த்தம். சீவனுக்கு, வியஷ்டி தூல வடிவு போல ஈசனுக்கு, சமஷ்டி பூத பௌதிகந் தூல வடிவாதலினானும், அந்தச் சமஷ்டி தூல வடிவுக்கு வியட்டி, தூல வடிவு, ஆதேயம் - உபாதேயம் - ஆரோபம் - விகாரம் இன்னுமிவை போல்வன பிறவு மென முரணா தேற்றற் பாலதாதலினானும் தடுக்கற் பாற்றன்று. இங்ஙனஞ் செய்யா விடத்து நம் பரி பூரணம் மறைந்து ஞானம் மின்றி, முனம் போல் நாடும் உயிர் என்னு அனுபவம் வாய்க்காதோ? ஆதலின், அதையும் விசாரித்துத் தெளிய வேண்டியதென்க. பௌதிகங்களாகிய அண்ட பிண்டங்கள் பூதத்துக்குச் செயற்கையாயும், காரியமாயும், தனக்கெனச் சொரூப மொன்றின்மையாயும் நிற்றல் போல அப் பஞ்ச பூதமும் மாயைக்குச் செயற்கையாயும், காரியமாயும், தனக்கெனச் சொரூப மொன்றின்மையாயும் நிற்குமாதலின், இம்மாயை நசிப்பது தற்பத சோதனையால் அன்றிக் கூடாமையின் ஏற்றற் பாலதென்க.

## பஞ்சைக்யம்.

ஈசனுக்குத் தூலவுடல் பூதபௌ தீகமே யீசனுக் சூக்கவுட லிருவகைச்சூக் குமமே, யீசனுக்குக் காரணமா முடன்மாயை யவனே யீசனவன் சாட்சியே பிரமமிவை யைந்தா, மீசனுக்குஞ் சீவனுக்கு மைக்க மெவ்வாறென்னி லீசனுடன் மூன்றனைப் பார்த்திடில்வனுக்கு டலேது தீசனெனி லிவனிலை யீசுரசாட்சி யென்றாலிவன்சாட்சி வேறாமற் றிதுவேபஞ் சைக்யம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஈசனுக்குத் தூல உடல் பூத பௌதீகமே. ஈசனுக் சூக்க உடல் இரு வகைச் சூக்குமமே, ஈசனுக்குக் காரணமாம் உடன் மாயை, அவனே ஈசனவன் சாட்சியே. பிரமம் இவை, ஐந்தாம், ஈசனுக்குஞ் சீவனுக்கு ஐக்கியம் எவ்வாறென்னின் ஈசனுடன் மூன்றனைப் பார்த்திடில், இவனுக்கு உடலேது, ஈசனெனில் இவனிலை. ஈசுர சாட்சி யென்றால், இவன் சாட்சி வேறாம் மற் இதுவே பஞ்சைக்யம்.**

**(இதன் பொருள்)**

**ஈசனுக்குத் தூல உடல் பூத பௌதீகமே ஈசனுக் சூக்க உடல் இரு வகைச் சூக்குமமே, ஈசனுக் குக் காரண உடல் மாயை :-** — சீவனுக்குத் தூல உடல் போல, ஈசனுக்குத் தூல உடலாவது ஐம் பெரும் பூதமும் அவற்றின் காரியமாகிய அண்ட பிண்ட பௌதிகங்களுமாம். சீவனுக்குச் சூக்கும உடல் போல ஈசனுக்குச் சூக்கும உடலாவது காரண காரிய வகையா நின்றுள்ள இரு வகைச் சூக்கும உடலுமாம்.

**அவனே ஈசனவன் சாட்சியே பிரமம் இவை ஐந்தாம் :-** — அவித்தியாப் பிரதி பலனன் சீவனுக்கு, அவனுக்குச் சாட்சி. கூடஸ்தனு மென்றாற் போல, மாயாப் பிரதி பலனன் ஈசனும் அவனுக்குச் சாட்சி. பிரமமும் என்றாதலின், இவையே பஞ்சைக்யம் எனப் படுவதாம்.

**ஈசனுக்கும் சீவனுக்கும் ஐக்கியம் எவ்வாறென்னில் :-** — இங்ஙன மிருக்க இருவருக்கும் ஐக்கியம் வாய்க்கு மென்ற தெங்ஙனமெனின்.

**ஈசனுடன் மூன்றனைப் பார்த்திடில் இவனுக்கு உடலேது, ஈசனெனின் இவனிலை ஈசுர சாட்சி யென்றால், இவன் சாட்சி வேறாம் மற்று இதுவே பஞ்சைக்யம் :-** — ஈசனது மூன்றுடலையும், ஆராய்ந்து உணருமிடத்து, இந்தச் சீவனுக்கென்று மூன்று உடலென்பதே? எவற்றிற்கு மாதாரமா விருப்பன் ஈசனெனில், சீவனென்பது ஏது? ஈசுர சாட்சி பிரமமெனில், சீவ சாட்சியாகிய கூடஸ்தன் என்பது வேறோ? இல்லையே. ஆதலால் இங்ஙனமாகக் கொள்ள நிற்பதுவே பஞ்சைக்யம் எனப்படுவதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கவி சீவர்களது அக மமதையைக் கெடுக்க உணர்த்திய தென்பது. எங்ஙனமெனின், அகமெனல் நான். மமதையெனல் எனது என்பது. அகமெனல், தூல தேக முதல் கூடஸ்த சாட்சிகாறு மெனின், அவ் அவற்றிற்கு ஆதாரம் உபாதானம், அதிஷ்டானம், நிர் விகாரம் என்பன இல்லாதிருக்க வேண்டும். அங்ஙனமில்லையே, இங்ஙனமிருக்க, மமகார மெனல் எங்ஙனம் தலைகாட்டற் இடம் பெறும். இஃதெவர்க்கும் உடன்பாடாதலால் மறுக்கற் பாற்றன்று. மறுப்பார் உய்த்துணராதார். இவ்வாறு தெளியப் புகின் ராகத் துவேஷாதிகள். தலை காட்டுமோ? ஆதலால், 'இந்தச் சீவனால் வருமாறு, பகை யெலாம், இவன் செயல் அல்லாமல் அந்தத் தேவனால் வருமென்ற மூடர்கள் அதோ கதி யடைவார்' என்றது, ஏற்றற்பாற்றோ? தள்ளற்பாற்றோ? தள்ளற்பாற்றெனின், மாயா காரணத்தை அன்றிக், காரியமிருக்க வேண்டும். ஏற்றற்பாற்றெனின், அகம் பிரமமெனக் கொண்டு அழிவரன்றோ? ஆதலின், ஆராய்ந்து தெளிதற்கு முன்னர் யாதுங் கூறற்க என்பது கருத்து. அவனெனலும், நானெனலுஞ் சுயஞ்சோதி யன்றி யின்மையாற் கற்பிதமே. இவ் விரு நாமமும் எடுத்தாளுதல் பயனின்றென்க. உண்டெனின், உபாதி சகிதத்தில் காணும் திரிபுடியாம் என்க.

## அத்துவைத நிலை

தேகமே தானெனல் சீவத்தொய்த மதுபோய்த் தெளிவுவரி லாகாயத் தின்வடிவே தானாய்ப், போகமார் தனுகரணம் வாயுவைப்போ லியங்கப் பொருந்துமவனேயீச னெனப்பொலிவு தன்னி, லேகமா யண்டமெலாங் கடுகளவாய்த் தோன்று மவையகண்டாகாரமதுவே யீசத்தொய்த, மாகமா மகண்டாகா ரமுநீங்கிக் கடுகா வண்டமுந்தோன் றாதவிடத் தத்துவித நிலையே.

**தேகமே தானெனல் சீவத்தொய்தம் அதுபோய்த் தெளிவு வரின் ஆகாயத்தின் வடிவே தானாய்ப், போகமார் தனு கரணம் வாயுவைப் போல் இயங்கப் பொருந்து மவனே யீசன் எனப் பொலிவு தன்னில், ஏகமாய் அண்டமெலாங் கடுகளவாய்த் தோன்றும், அவை அகண்டாகாரம், அதுவே ஈசத்தொய்தம், ஆகமாம் அகண்டாகாரமும் நீங்கிக், கடுகா அண்டமுந் தோன்றாதவிடத்து அத்துவித நிலையே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்)

**தேகமே தானெனல் சீவத் தொய்தம் :-** — அறிவு, வியட்டி, தூல தேகமே தானெனத் திடங் கொண்டு நிற்பது, சீவத்தொய்த மெனப்படும்.

**அது போய்த் தெளிவு வரில் ஆகாயத்தின் வடிவே தானாய்ப், போகமார் தனு கரணம் வாயுவைப் போல் இயங்கப் பொருந்தும் அவனே ஈசன் :-** — அப்போது சிறிது விசாரணைத் தெளிவு வரில் அந் நிலை மெல்ல நழுவி ஆகாய வடிவே தானாக வெய்தப் பெறும். பெறின், போக நுகர்தற் கருவியாய் தனு கரணங்கள், ஆகாயத்தில், வியாப்பியமாகிய வாயுவைப் போல் இயங்க வாய்க்கும். அங்ஙனம் வாய்ந்த அவசரம், அவ் வறிவு ஈசனெனப்படும்.

**அப் பொலிவு தன்னில், ஏகமாய் அண்டமெலாங் கடுகளவாய்த் தோன்றும் அவை அகண்டாகாரம் அதுவே ஈசத்தொய்தம் :-** — அங்ஙனமாய் நின்ற பரி பூரண நிலையில் ஏகத்துவம் வாய்க்கும், வாய்க்கில் சகல அண்டங்களும், கடுகளவாத் தோன்றில், அஃதகண்டாகார நிலையெனப்படும், அந் நிலையே ஈசத் தொய்த மெனப்படும்.

**ஆகமாம் அகண்டாகாரமும் நீங்கிக் கடுகா அவ் அண்டமுந் தோன்றாதது விடத் அத்துவித நிலை :-** — அந்த ஈசத் தொய்தமே தனக்கு உடலாய் அமையும், மேல் மேல் செல்வு நெறியால் அவ் அகண்டாகார நிலையும் நழுவும். நழுவில், மெல்ல மெல்ல முன்னர்க் கடுகளவாத் தோன்றிய சகல அண்டங்களும். இந் நிலையில் தொன்றாது அழியும். இங்ஙனந் தோன்றாது, அழிந்த நிலை யாதோ, அந் நிலையே சுத்த அத்துவிதம் என, இயைந்த நிலை எனப்படும்.

அது போய்த் தெளிவு வரலாவது, அண்ட பிண்டங்கள் அனைத்தும் நான்கு பூத சையோகத்தை யன்றி, இல்லையெனவும், அந் நான்கு பூதங்களில் நீரை யன்றி மண்ணும், அனலை யன்றி நீரும், வாயுவை யன்றி அனலும், ஆகாயமன்றி வாயுவும் இல்லை யெனவும், இவற்றிற்கு நுண்ணிய பூதமாகிய அபஞ்சீகிருத பஞ்ச பூதத்தை யன்றி ஆதாரஞ் சற்று மில்லை யெனவும், தக்க கருவிகளாலும் மிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுண்ணிய உணர்வினாலும், இனி ஐயமுறாது தெளிதலை. இங்ஙனமாய நிலையில் ஆகாயத்தின் வடிவே தானெனவும், அதில் தனது தனு கரணங்கள், வாயுவைப் போலியங்குமெனவுங் கூறிய உவமைக்கு முரணென்னை? அங்ஙனமாய அகண்ட பரிபூரண நிலையில், சமஸ்த அண்டங்களும் கடுகளவாத் தோற்றற் இயைதலின், அந் நிலை ஈசத் தொய்த மெனப்பட்டது. சீவத் தொய்தமும் ஈசத்தொய்தமுங் கற்பனையெனக் காட்ட அகண்டாகாரமும் நீங்கிச் கடுகா அண்டமுந் தோன்றாவிடத்து, அத்துவித நிலையென, யாம் அடை கொடுத்து உரை செய்தற்கு முரணென்னை? ஆதலின் ஏற்கப் பாற்றென்க. அனைத்தும் ஒருங்கு ஏகமாகா விடத்து அத்துவித மெனல் பொருந்துமா? பொருந்தா தாதலின் இங்ஙனங் கூறினாரென்க.

# சீவன் எதைத் தியானித்தாலும் அந்தய மயமாவன் எனல்

ஐயமின்றித் தெய்வவுருத் தியானித்தா லதுவா மருவுருவைத் தியானித்தா லட்டமூர்த்தியுமாம், பொய்யவிரண் டையுந்தவிர்த்து தானாகி யிருந்தாற் பூரணமாஞ் சீவனெதிற் பொருந்துமது வாமான், மையலுறு மனம்விடயத் தாசையுற்றே யதுவாய் மரணசன னமும் விளைந்த வாற தென்றே யுணர்ந்து, மெய்யறிவே தானாகப் பாவித்த லதுவா விளங்குவர்யா வருஞ்செனியா வீட்டையுமெய் துவரே.

**ஐயமின்றித் தெய்வ உருத் தியானித்தால் அதுவாம் அருவுருவைத் தியானித்தால் அட்ட மூர்த்தியுமாம், பொய்ய இரண்டையுந் தவிர்த்து, தானாகி யிருந்தாற் பூரணமாஞ் சீவன் எதிற் பொருந்தும் அதுவாவான், மையலுறு மனம் விடயத்தாசை உற்றே அதுவாய் மரண சனனமும் விளைந்தவாறு அது என்றே உணர்ந்து, மெய் அறிவே தானாகப் பாவித்தல் அதுவா விளங்குவர், யாவருஞ் செனியா வீட்டையும் எய்துவரே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்)

**ஐயமின்றித் தெய்வ உருத் தியானித்தால் அதுவாம். அரு உருவைத் தியானித்தால் அட்ட மூர்த்தியுமாம் :-** — யாதானும் ஒரு உயிராகிய அறிவு, ஊர்த்த முகத்தில் தத் தமக் குரிய உபாசனா மூர்த்தங்களில் ஒன்றை, உயிர் விடு காலையில் ஐயமின்றித் தியானிக்குமாயின் அதுவாகச் சனிக்கும். அங்ஙனமின்றி ரூபா ரூப நிலையினதாகிய வடிவைத் தியானிக்கில் அஷ்ட மூர்த்த சொரூபியாகிய பரம சிவனாகவுஞ் சனிக்கலாம்,

**பொய்ய விரண்டையுந் தவிர்த்து தானாகி யிருந்தாற் பூரணமாம் :-** — கற்பனா வடிவெனற் கியைந்த இவ் விரண்டு நிலையையும் விட்டு நீங்கித் தானே தானாகி யிருந்தால் பரி பூரண நிலையதாகும்.

**சீவன் எதிற் பொருந்துமோ அதுவாம் :-** — ஆதலின் சீவனாகிற சைதன்யம் யாது யாதாகத் தடிக்கின்றதோ அது அதுவாகச் சனிக்கும்,

**மையலுறு மனம் விடயத்தாசை யுற்றே யதுவாய் மரண சனனமும் விளைந்த வாறு என்றே யுணர்ந்து:-** — அதோ முகத்தில் திருக்குத் திருசிய நிலை தெரியாது மயக்குற்கு நிற்கும் மனமானது விடயங்களில் பிரியமோதப் பிரமோதமா நின்று, தானது, அதுவாகப் பிரதி பலித்துத் தனது பிரதிபலனமென அறியாது மெய்யென நம்பித் தானும் அதுவதுவாகி அங்ஙனம் அதுவது வாதல் சகசமாக நிற்றலால் பிறப் பிறப்புஞ் சகசமாக எய்தும். அது காரணமாய் இன்ப துன்பங்களுஞ் சகசமாக எய்தும், எய்தவே, உறவு பகை, பந்த விளைவு முடிவின்றி எய்தும். எய்தவே, அதுவது அந்தந்தச் சனனத் அளவினதாகக் காணும். காணுதலால் முன்பின் சனனம் இல்லதாகத் தோற்றும், தோற்றுவதால், கண்டதே காட்சி, கொண்டதே கோலம், தேகமே ஆத்மா, போகமே, முத்தி, என்ற அனுபவம், இயற்கை நிலையினதாகவும், **ஆஸ்திகமெனல் சொல் அளவினதாகவும், நடிப்பளவினதாகவும்,** எவ் உயிர் பாலும் நிகழ்ந்து வருகின்றன. வருவதால், உபாதான உபாதேய நோக்குச், சற்றுமின்றி யுத்தியால் பிதற்றி, மீண்டும் அம் மையலில் அழுந்தும், அழுந்தவே. பிறவிப் பெருங் கடலை, நீத்தற் கிடமின்றி வாளா மடியும். இங்ஙனம் மடியுமாதலைச் சாதன மேலீட்டால் உணர்ந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மெய்யறிவே தானாகப் பாவித்தால் அதுவா விளங்குவர். யாவருஞ் செனியா வீட்டையும் எய்துவர் :-** — அங்ஙனம் சாதன மேலீட்டால் உணர்ந்த அறிவு இரு வகைத்து, பொய் அறிவு மெய் அறிவென. பொய் யறிவு : பொரு ளல்லாவற்றைப் பொருளாக உணர்வது.

**மெய்யறிவு :** பொருளைப் பொருளாக உ ணர்வது. இவ் விரு வகையாக உணர்தல் சேட்டை அறிவின் பாலதன்றி, ஏனைய இடத்தின்மையின். அறிவொன்றே மெய். ஏனைய அனைத்தும் பொய்யென, ஐயந் திரிபின்றித் தீர்மானித்து, அவ் விருவகை நோக்கும் அகன்று, பிரத்தியட்சமாக விளக்குவிப்பவர் பாற் சென்று, அவர் நோக்கம் கிடைக்கப் பெற்று, அதனால் சதோதயமாக விளங்கும் மெய்யறிவினைக் கண்டு அது சுசாதியாதி விகற்ப மின்றி விளங்குவதால், அம் மெய்யறிவே தனது எதார்த்த நிலையினதாகக் கொள்ள வேண்டி வரும். அங்ஙனம் வருவதால், அதனைத் தானாகப் பாவிக்க வேண்டிவரும். அங்ஙனம் வருவதால் தானதுவாக நிலைக்க வேண்டிவரும். அந் நிலை, நாளுக்கு நாள் மேலீட்டால், இவ் விரு பேதமுங் கழன்று சதோதயமாக விளங்கும். அங்ஙனம் விளங்குபவர், யாவரோ, அவர்கள் அனைவரும், இனிச் செனியா நிலையினதாகிய முத்தியையும் அடைவர்.

சீவன் எதைத் தியானித்தாலும், அந்தந்த மயமாவன் எனற்கு முரணுளதேல் கூறுதும். இக்கணத்தில் அது வது வாகாவிடத்து அதுவது காணட்டும். காணப்படாதெனின், யாது காரணத்தால்? சிந்தை வையாததால் எனின். சிந்தை வைத்த விடத்து, ஏனையவை தோற்றாத தற்கும், அறியாததற்கும் ஏதென்னை? வேறு மயமானதாலெனின், வேறுமயமான விடத்துத் தோற்றாமையும், ஆகா விடத்துத் தோற்றுதலும் என்றால், அனைத்தும், சிந்தனாப் பிரதிபலன மெனற்கு முரணென்னை? இஃதன்றியும், தேகம் என்னுமிடத்து, அவயவங்களை யன்றித், தேகமெனலும், அவயவங்கள் என்னுமிடத்து, அஸ்தி, மாமிசாதிகளை, யன்றி அவயவமெனலும், அஸ்தி மாமிசாதிகள் என்னுமிடத்துப் பிருதிவி முதலிய பஞ்ச பூதங்களை யன்றி அஸ்தி மாமிசாதிகளெனலும், பஞ்சீகிர்த பஞ்ச மாபூதமென்னும் இடத்து அபஞ்சீகிர்த பஞ்சமாபூதங்களை யன்றிப், பஞ்சீகிர்த பஞ்சமாபூதங்களெனலும் போய்வாறெங்ஙனோ? வாயாடக் கற்ற மொழிகளைத் தள்ளி வஸ்துக்கள் சம்மதிக்கத் தக்க பொருத்தமான ஞாய நெறி செல்லில் சமஸ்தமும் மனோ கற்பிதமாகவே முடியும். ஞான நூலனைத்தும் ஒருவன் சிறு வயதில் தானே மெய்யுணர்வு விளங்கச் செய்து கொள்ள வேண்டு மெனவும், மக்களுக்கெனப் பொதுப்படவிதித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூறாண்டு வயதென்னும் அளவும், ஞான நிட்டை பயில வேண்டு மெனவும் கூறியிருக்க. தெய்வ உருத் தியானித்தால் அதுவாதற்கும், அஷ்டமூர்த்தியைத் தியானித்தால் அதுவாதற்கும், தானாவிருந்தால் பூரணமாதற்கும், கால வரை யறை வேண்டுமன்றோ? இங்ஙனமிருக்க இதனை மறுப்ப தெங்ஙனம்? கூடாமையின் ஏற்றற் பாற்று. அஷ்ட மூர்த்தமாவது பிருதிவி, அப்பு, தேயு, ஆகாசம், சூரியன், சந்திரன், ஆன்மா என்பன. தெய்வ உருவாவது, மூலாதார முதலிய ஆறிலும், அந்தந்தப் பாவனா வடிவமாகக் காணப்படும், பிரமன் முதலிய தேவதைகளும், இஃதன்றியும், காளி, சரஸ்வதி முதலிய தேவதைகளுமாம். தானென்னும் நிலைக்குத், தெய்வ வடிவங்களும் அஷ்டமூர்த்தமும், தனது பிரதிபலனமாதலினானும், கற்பிதமாதலினானும், பொய்ய விரண்டையுந், தவிர்த்து என்றார். இதனை ஆராய வேண்டின், ஆறாதார நிலையிலும், பகிர் முக, அந்தர் முக நிலையிலுங் கண்டு தெளியலாம். கலக்க முற்ற இடத்துக் கூடாமையின், ஐயமின்றி என்றார். குறியைக் குறியாது குறித்தலைத், தானாகியிருத்தல் என்றார். மையல் தனது சத்தை, அயலதாகக் காணடல். அததுவாதல் போல்வதன்றி யெனக் குறித்தலாலும், அந்தந்தப் பயனை அடைவதன்றி யெனக்குறித்தலாலும், வீட்டையும் என்பதிலும்மை இறந்தது தழீஇய வெச்சம். (22)

## இதற்கு இது விஷயமாம் எனல்.

ஏற்றமுடை யிந்தியத்தின் விடயமதே யுலக மிந்தியங்கள் கரணத்தின் விடயங்க ளாகுஞ், சாற்றுகரணங்களுமா பாசனுக்கே விடயஞ் சாட்சிக்கு விடயமதாத் தயங்குவதா பாசன், போற்றுவிவே கக்ஞான விடயமதாஞ் சாட்சி புகன்றவிவே கமும்பிரம பூரணத்தின் விடயங், தோற்றரிய பிரமமொன்றின் விடயமன்றா தலினச் சொரூபநிலை வுணர்ந்ததுவாத் துலங்குவர்ஞானிகளே.

**ஏற்றமுடை இந்தியத்தின் விடயமதே உலக இந்தியங்கள், கரணத்தின் விடயங்களாகுஞ், சாற்று கரணங்களும் ஆபாசனுக்கே, விடயஞ் சாட்சிக்கு விடயமதாத் இயங்குவது ஆபாசன், போற்று விவேகக் ஞான விடயமதாஞ் சாட்சி, புகன்ற விவேகமும் பிரம பூரணத்தின் விடயங், தோற்றரிய பிரமமொன்றின் விடயமன்றாதலின் அச் சொரூப நிலை உணர்ந்தது அதுவாத் துலங்குவர் ஞானிகளே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்)

**ஏற்றமுடை இந்தியத்தின் விடயமதே உலக இந்தியங்கள், கரணத்தின் விடயங்களாகும் :-** — உணர்தற் தன்மையுடைய பஞ்சேந்திரியங்களுக்கு விடயமாவது, உலகமும் அகக் கரணத்திற்கு விடயமாவது புறக் கரணங்களாகிய இந்திரியங்களுமாம்.

**சாற்று கரணங்களும் ஆபாசனுக்கே விடயஞ், சாட்சிக்கு, விடயமதாத் இயங்குவது ஆபாசன் :-** — சீவனுக்கு விடயமாவது முற்கூறிய அந்தக் கரணங்களும், சீவசாட்சிக்கு விடயமாவது மெய் போல் இலங்குவதாகிய சீவனுமாம்,

**போற்று விவேக் ஞான விடயமதாஞ் சாட்சி :-** — துதிக்கத் தக்க விவேக ஞானத்துக்கு விடயமாவது, முற் கூறிய சீவ சாட்சியும்,

**புகன்ற விவேகமும் பிரம பூரணத்தின் விடயம் :-** — பரி பூரண பிரம ஞானத்துக்கு விடயமாவது முற் கூறிய விவேக ஞானமுமாம்.

**தோற்றரிய பிரமம், ஒன்றின் விடய மன்றாதலின், அச் சொரூப நிலை உணர்ந்து, அதுவாத் துலங்குவர் ஞானிகள் :-** — விளங்கற் கரிய அந்தப் பிரம ஞானமோ முற்கூறி வந்த முறை போல, முன் பின் ஒன்றிற்கும் விடயமாகாது, மேலொன்றில்லா மையின், அந்தப் பிரமசொரூப நிலையை ஐயந்திரிபற வுணர்ந்து, அது தானாகவும் தானது வாகவும் விளங்கும். இவ்வாறாக விளங்கினோர், யாவரோ, அவர்களே ஞானிகளெனப்படுவர்.

விடயங்களை அறிதற்கு மேலாக நிற்றலின், ஏற்றமுடை எனப்பட்டது. உடைய வென்பதிது ஈறெஞ்சியது ஆக்கவினைக் குறிப்பெஞ்சிய விடங்களிற் கொள்க. தேற்றேகாரத்தையும் இடமறிந்து கொள்க. உருபு மயக்கமும் பொருளறிந்து மாற்றுக. இங்கே சாட்சி யெனல் கடாகாயம் போல்வதின் கூடஸ்தனெனவும், விவேக ஞான மெனல், மகாகாயம் போல்வதின் பிரமமெனவும், பிரம பூரணமெனல் ஏகாகாயம் போல்வதின் திரஞானமெனவும் கோடற்கியைந்தன என்க. பரிபூரணமாகிய திரஞானமெனல் அபரிச்சின்னமாதலினானும், நீக்கமற நிற்றலினாலும், மேல் கீழொப்பின்மையானும். ஒன்றின் விடயமாகா தெனற்கு முரணெனனை! இன்மையின் எவர்க்கும் உடன்பாடென்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரி பதார்த்தமாகவும், முப் பாழாகவும், அப்பாலுக்கப்பாலாகவும் விடாது நிற்பது ஓர் தெரிவாதலினானும், என்னை யானறியேன் அறிவேன் எனலும் அதுவாதலினானும் அநவத்தாதோடம் எங்ஙனம் எய்தப் பெறும்? மறுக்கற்க. (23)

# தாதான்மியத் திரயம்.

சகசம் என்றும் பிராந்தி என்றுங் கன்மம் என்று மூன்றாந் தாதான்மி யங்களிவை சாற்றிலகங் காரம், புகல்சீவ னொடுகலத்தல் சகசமதாம் பிரம பூரணத்திற் கலப்பதுவே பிராந்திசரீ ரத்தோ, டகலாது கலப்பதுவே கன்மநா னறிவேன் கர்த்தாநான் றேகமக மென்பதுதா னிவைகள், பகர்செய்பிரா ரத்தத்தாற் றத்துவஞா னத்தாற் பணிசுழுத்தி யாலகலப் படுமளவுந் தொடரும்.

**சகசம் என்றும் பிராந்தி என்றுங், கன்ம மென்று, மூன்றாந் தாதான்மியங்கள், இவை. சாற்றில் அகங்காரம், புகல் சீவனொடு கலத்தல், சகசமதாம், பிரம பூரணத்திற் கலப்பதுவே பிராந்தி, சரீரத்தோடு, அகலாது கலப்பதுவே கன்மம், நானறிவேன். கர்த்தா நான். தேகம் அக மென்பதுதான் இவைகள், பகர் செய் பிராரத்தத்தாற் தத்துவ ஞானத்தாற் பணி சுழுத்தியால அகப்படும் அளவுந் தொடரும்.**

**(இதன் பொருள்)**

**சகச மென்றும் பிராந்தி யென்றுங் கன்ம மென்று மூன்றாந் தாதான் மியங்களிவை, சாற்றில் :-** — தாதான்மியங்கள் சகச மென்றும் பிராந்திஜ மென்றும், கன்மஜ மென்றும் மூன்று வகைப்படும். இவற்றை முறையே சொல்லுமிடத்து.

**அகங்காரம், புகல்சீவனொடு கலத்தல், சகசமதாம், பிரமபூரணத் திற் கலப்பதுவே பிராந்தி :-** — சொல்லப்பட்ட சீவனோடு அகங்காரங் கலப்புற்றிருப்பது, சகச தாதான்மிய மெனப்படும், பரிபூரண பிரமசொரூபத்தில் பிரியாமற் கலப்புற்று நிற்பதே, பிராந்திஜ தாதான்மிய மெனப்படும்.

**சரீரத்தோடகலாது கலப்பதுவே கன்மம் :-** — வந்து வந்து மடியுந், தூல சரீரத்தோடு அகலாது கலப்புற்று நிற்பதே கன்மஜ தாதான்மியமெனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நானறிவேன், கர்த்தா, நான் தேகம் அகமென்பது தான் :-** — இவற்றிற்கு முறையே உதாரணமாவது நான் என்னை அறிவேன் என்னவும், நானெவற்றிற்குங் கர்த்தாவெனவும், தேகமே யான் எனலுமாம்.

**இவைகள், பகர்செய் பிராரத்தத் தாற் தத்துவ ஞானத்தாற் பணி சுழுத்தி யால் அகலப் படுமளவுந் தொடரும். :-** — இம் மூன்றும் சொல்லப்பட்ட பிராரத்து வத்தாலும் தத்துவ ஞான விளக்கத்தாலும் யாவரும் பணிதற்குரிய நனவிற் சுழுத்தி நிலையாலும் ஒழியப்படும். அது காறும் விடாது தொடர்ந்து கொண்டே நிற்கும்.

உதாரணம் மூன்றும், நேர் நிரனிறை யெனவும். இவை ஒழி தற் ஏதுவாகிய மூன்றும் எதிர் நிரனிறை யெனவுங் கொள்ளக் கிடந்தன. எங்ஙனமெனின், பிராரத்த கன்மத்தால் அன்றித் தேக நானென்பதும், தத்துவ சோதனையால் விளங்கும். ஞானப் பிரகாசத்தாலன்றி, நான் கர்த்தாவென்பதும், நனவிற் கழுத்தியாலன்றி, நானென்னை யறிவேன், என்பதும், ஒருகாலும் நசித்தற்கிடம் இன்றென்க. அவரவர் தூல தனு அவரவர் பிராரத்வ கன்மத்தளவாக நிற்றலானும், அவரவர்க்கு மேலாய தவத்தால் வாய்த்த பரிபூரணநிலை, தானினைய எனக் காணுமளவும் நிற்றலானும், அவரவர்க்குரிய அகங்கார மேலீட்டு நிலை, நனவிற் சுழுத்தி நிலை வருமளவும் நிற்றலானும், எதிர் நிரனிறை யென்றாம். தான் இனையனெனக் காணலாவது, சுயஞ் சோதியை, குறிகளிலொன்றால் வாய்க்குஞ் சமநிலை, அக் குறி கடந்த விடத்தின்றித் ததாகாரம்போற் காண்பது. இப் பரிபூரணநிலை ஆதலால், தெருளாதான் மெய்ப்பொருள் கண்டது போலுமாம். இதனைத் தத்துவமென்ற ஞானத்தாலேனும், தத்துவம் என்ற சோதனையாலேனு மாய்த்தற்கு இடம்பெறுமாதலினானும், மக்கின சுழுத்தி, சர்வசங்காரப் பிரளய சுழுத்தி இவற்றாற் சற்றுங் கெடாது நனவிற் சுழுத்தி, ஆன்மாத்திரம் அகங்காரம் மாய்தற் கிடம் பெறுமாதலினானும் இங்ஙனம் உரைகொண்டாம். இங்ஙனமிருக்கத், தேகமே தானெனல் கன்மஜ தாதான்மியம் ஆதலால், இது பிராரத்து வத்தாலன்றிச், சுழுத்தியினால் எங்கேனும் அகலுமோ? அகலுமெனின் உறங்கிச் செத்தவர் உளரோ? நனவிற் சுழுத்தியெனின் இறக்கின்ற எழுவகைத் தோற்றமும் நனவிற் சுழுத்தி நிலை வந்துதானோ? சர்வசங்காரப்பிரளய சுழுத்தியெனின், இப்போது மரிக்கின்ற உயிர்களெல்லாம் அது வருமளவுங் காத்திருக்கின்றனவோ? ஆதலின், வழு. அகங்காரத்தோடு கூடியது சகச தாதாத்மிய மெனப்படலால் அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராரத்துவத்தால் நசிக்குமென்று எங்ஙனம் உரை கொண்டனரோ? அது தெரியாது. பிராரத்துவ கன்ம நாசத்தால், அகங்கார நாசமாவதுளதோ? உளதெனின், சிரவண, மனனாதிகள் எற்றிற்கு? இயம நியமாதிகளும், ஆறாதார அரிய முயற்சிகளும், யாது பயன் பெறும்? ஆதலின், பிராரத்வ கன்ம நாசத்தால் சகசதாதான்மியம் நாசமுறு மென்பது வழு. பரிபூரண பிரமத்திற் கலந்து ஏகமா நிற்றல் தத்துவ ஞானத்தால் எங்ஙனம் அகலும்? அகலுமெனின், சலனத்துவம் வாய்க்குமே. வாய்க்கின் முன் போல் விடயங்களில் வாழ்ந்து, மொத்துண்ண வரும். இது கருதாது தத்துவ ஞான மெனற் கெவ்வாறு பதச் சேதஞ் செய்துரை கொளப் புகினும் இயையதாதலின் இதுவும் வழு. இவ் விஷயந் தெரியாதுரை செயப் புகின், கல்விச் செருக்கு, மடமையே தருமென்க. பரிமேலழகர் ஒழிந்த ஏனைய உரை ஆசிரியர் இன்னும் பேத வாத மெனக் கருதி, 'அகர முதல வெழுத்தெல்லா' மென்னுங் கவிக்கு உபமான உபமேய சாதாரண தரும் விலக்கணம் நன்குணர்ந்தும், ஏக மேவாத்துவித சுவானுபூதிப் பிரத்தியட்சந் தினைத் துணையும் இன்மையின் தத் தமக்கு இயைந்தவாறு உரை கூறி வாளா போயினர். தான் இனையனெனத் தெரியாது 'தன்னிழப்பை யென்னகற்றும்' என்னும் கவிக்குப் பொருத்த மின்றிக் கூறிய வுரை யாசிரியரும் உளர். (24)

## பஞ்ச கோச தாதாத்மியம்.

அன்னமயம் பிராணமய மனோமயம்விஞ் ஞான மானந்த மயமைந்தி னன்னமய மாகும், பின்னுடல்கன் மேந்தியத்திற்பிராணன கூடிற்பிராணமயமனங்கூடிற் பிறங்குமனோ மயமா, நன்னிலைஞா னேந்தியமும் புத்தியுங்கூடிடில்விஞ்ஞானமய மாமவித்தை யானந்த மயமாஞ், சொன்ன வைந்துந் தானெனல் தாதான் மியமிவ்வெல்லாந் தோய் வற்நின் றெனதெனல்காண் சுத்தவனுபவமே.

**அன்ன மயம், பிராண மயம், மனோ மயம், விஞ்ஞான, ஆனந்த மயம், ஐந்தின், அன்ன மயமாகும் பின்னுடல், கன்மேந்தியத்திற் பிராணன் கூடிற் பிராண மயம், மனங் கூடிற் பிறங்கும் மனோ மயமாம், நன்னிலை ஞானேந்தியமும் புத்தியுங் கூடிடில் விஞ்ஞான மயமாம், அவித்தை ஆனந்த மயமாஞ், சொன்ன ஐந்துந் தானெனல், தாதான்மியம் இவ்வெல்லாந் தோய்வற்று நின்று, என தெனல் காண், சுத்த அனுபவமே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்)

**அன்ன மயம், பிராண மயம் மனோ மயம், விஞ்ஞான, ஆனந்த மயம் ஐந்தின், அன்ன மயமாகும் பின்னுடல் :-** — பஞ்ச கோச மெனப்படுவது அன்ன மயம் ~ பிராண மயம் ~ மனோ மயம் ~ விஞ்ஞான மயம் ~ ஆனந்தமயமென ஐந்தாம். இவற்றுள், கடையா நின்றுள்ள தூல சரீரம் யாதானு ஓராகார மயமா நிற்றலின் அன்ன மய கோசம் எனப்படும்.

**கன் மேந்தியத்திற் பிராணன் கூடிற் பிராணமய, மனங் கூடிற் பிறங்கு மனோ மயமாம் :-** — கன்மேந்திரியத் தோடு பிராண வாயு கூடில் பிராணமயகோச மெனப்படும். அந்தக் கன் மேந்திரியத்தோடு மனங் கூடில் மனோ மயகோசமெனப்படும்.

**நன்னிலை ஞானேந்தியமும் புத்தியுங் கூடிடில் விஞ்ஞானமய மாம் அவித்தை, ஆனந்த மயமாம் :-** — நன் மார்க்கத்திற்கு மியைந்த ஞானேந்திரியமும் புத்தியு ஒருங்கு கூடில் விஞ்ஞானமய கோச மெனப்படும். அவித்தையாகிய காரண சரீரமாகத் தனித்து நிற்புழி, ஆனந்தமய கோச மெனப்படும்.

**சொன்ன வைந்துந் தானென்றால் தாதான்மியம் :-** — இங்ஙனங் கூறிய ஐந்து நிலையுந் தானென நிற்கும் அவ் அவ் அவசர நிலையே தாதான்மிய மெனப்படும்.

**இவ் வெல்லாந் தோய்வற நின்றென தெனல் காண் சுத்த அனுபவம் :-** — இவ் வைந்து கோசமும் பேதமா நிற்பினும் விசாரணைத் தெளிவின் மேலீட்டால் ஒவ் வொன்றும் யானலன் யானலன் என்று அவற்றிற்கு விலட்சணமாகச், சதோதயமாக விளங்கி நிற்றலே, சுத்தாத்துவித அனுபவ மெனப்படுவதாம்.

இங்கே மய மெனல் உபாதானத்தை, கோச மெனல் திரைச்சீலை போல்வது. எனவே, ஆன்மாவாகிய புருஷன், இவ் ஐந்தனையில் கட்டுப் பட்டிருப்ப எனப் பெற்றாம். பெறவே, ஏனைய நான்கு கோசமும் கடவாதிருக்க அன்னமய கோசமாகிய தூல தேகம் பிராத்துவத்தால் நீங்க முத்தி எனல் கூடாது. ஏனைய மூன்று கோசமும் இருக்க யோகத்தால் பிராணமயங் கடக்கில், முத்தி யெனல் கூடாது. ஏனைய ஆனந்த மய கோச மொன்றிருக்க அனைத்தையுஞ் சோதனைத் தெளிவால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மித்தையாக்கிய விடத்து விஞ்ஞானமயங் கெடும். அதனால் முத்தி யெனல், அனைத்தையும் மித்தையாக்கி, நின்றது அறி வாதலால், அது விளங்காத காறும் அவித்தை யெனப்படும். அது காரணமாக வரும் ஆனந்த மய மெங்ஙனம் நீங்கும். அது நீங்காததால் முத்தி யென்பது கூடாது. இவ் வகை தெரியாதார், யாது கருதி முத்தி யென்றனரோ யாம் அறிகிலம். இவை யனைத்துந் தானாகிற சிதா காயத்தில், சலட்சண விலட்சணமாகக் காணும். இங்ஙனங் காண்டலே சுத்தாத்து வித அனுபவமெனக் கொள்க. ஆக்கவினை எஞ்சிய விடத்துக் கூட்டிப் பொருள் கொள்க. 'ஆக்கவினைக் குறிப்பாக்க மின்றியலா' என்பதினால். தோய் வற நிற்றல் விலட்சணமாதலை. காணென்பது அசை நிலையெனினும் நீ கண்டு தெளியெனினும் அமையும். இதறகு அனுபவம் எங்ஙன மெனின், நான் பருத்தேன் இளைத்தேன் என்பது. அன்னமய கோச தாதாத்மியம். எனக்குப் பசிக்கிறது. தாகிக்கிறது என்பது, பிராண மய கோச தாதாத்மியம். நான். சங்கற்பித்தேன், விகற்பித்தேன், என்பது மனோ மய கோச தாதாத்மியம். நான் கர்த்தா, போக்தா வென்பது விஞ்ஞான மய கோச தாதாத்மியம். நான் அறியேனென்பது, ஆனந்த மய கோச தாதாத்மியம். இவைகட்கு அன்னியமாக நின்று என் சரீரம், என் பிராணன், என் மனம், என் புத்தி, என் அஞ்ஞானம் என்னும் அபவத்தினால், தனக்கு இப் பஞ்சகோசங்கள் வேறு, விவாகார தசையில் தாதாத்மிய மென்று அறிந்து, அவற்றில் தோய்வற நின்று, அறிவு வடிவமாகிய தன்னை உள்ளபடி காண்பதே சுத்தமாகிய அனுபவமாம். இவ் வெல்லாந் தோய்வற நின்று என்பதனால், தான் தெருளாய் நின்றவிடத் தெனக்கண்டாம், தெருளும் அருளுந் தன்னை யன்றி இல்லாமையின் இவை யிரண்டுந் தான் அல்ல வென்க. இவை ஒற்றுமை நயத்தால் ஒன்றெனத் தோன்றலும், வேற்றுமை நயத்தால் வேறெனத் தோன்றலும், தாமோர் முதல் அன்றாகையின் இயல்பன்று என்றார் அறிஞர். (25)

## சாக்ஷி சரீரத்திய விலக்ஷண மெனல்.

மொய்த்தாருஞ் சாட்சிக்குச் சரீர மான மூன்றினுக்கு மன்னியமு முடிவுங் கூறிற், கர்த்தாவாஞ் சாட்சியதான் ஞானத் தாலே காரணமாந் தேகமந்தக் கணத்தி னாசந், தொத்தாய காரணதே கந்தானொன்று தொலைவதன்முன் சூக்குமதே கங்கன் கோடி, யொத்தாய பிரளயத்தி லொடுக்குஞ் சூக்கமொன்றொடுங்கு முனமனந்த மொடுக்குந்தூலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மொய்த்தாருஞ் சாட்சிக்குச் சரீர மான மூன்றினுக்கு அன்னியமும் முடிவுங் கூறிற், கர்த்தாவாஞ் சாட்சியதான் ஞானத் தாலே காரணமாந் தேகம் அந்தக் கணத்தில் நாசந், தொத்தாய காரண தேகந் தானொன்று தொலைவதன் முன் சூக்கும தேகங்கள் கோடி, ஒத்தாய பிரளயத்தில் ஒடுக்குஞ், சூக்கமொன்று ஒடுங்கு முன், அனந்த மொடுக்குந் தூலம்.**

**(இதன் பொருள்)**

**மொய்த்தாருஞ் சாட்சிக்குச் சரீர மான மூன்றினுக்கு அன்னியமு முடிவுங் கூறில் :-** — எங்குந் தாக்கற்று நிறைந்திருக்கின்ற கூடஸ்த சைதன்யத்திற்கும் துல முதலிய உபாதித்திரயத்திற்கும் பேத நிலையும் அந்த முங் கூறுமிடத்து,

**கர்த்தாவாஞ் சாட்சிய தான் ஞானத்தாலே காரணமாந் தேகம் :-** — கூடஸ்த சைதன்யம் எப்போது எவற்றிற் குஞ் சாட்சியா விளங்கி நிற்றலின் கர்த்தத்து வத்தையுஞ், சேதனத் துவத்தையு, இயல் பாகவே உடையதா விளங்கும். காரண தேகமாகிய அவித்தையோ, பிரத்தியட்ச ஞானத்தினால் நாசமுறும்,

**அந்தக் கணத்தின் நாசந் தொத்தாய காரண தேகந்தான் ஒன்று தொலைவதன் முன் சூக்கும தேகங்கள் கோடி :-** — விடாது தொடர்ந்து நின்றுள்ள அவித்தை யாகிய காரண தேகம், ஒன்று நசித்தற்குரிய கண நேரத்திற்குள், சூக்கும சரீரங்கள் எண்ணிறந்த கோடி, தோன்றித் தோன்றி நசிக்கும்.

**ஒத்தாய பிரளயத்தி ஒடுக்குஞ் சூக்க மொன்று ஒடுங்குமுன் அனந்த மொடுக்குந் தூலம். :-** — ஒருங்கு நசித்தற்குரிய சர்வ சங்காரப் பிரளயத்தில் ஒரு சூக்கும தேகம் ஒடுங்குவதற்கு முன், அனந்த தூல தேகந் தோன்றித் தோன்றி ஒடுங்கும்.

இதனால் காரண தனு ஒன்று அழிதற்கு முன்னால், அனந்த கோடி சூக்கும தனு அழியு மெனவும், ஒரு சூக்கும தனு தோன்றி அழிவதன் முன், அனந்த கோடி தூல தனு தோன்றி அழியுமெனவும், இக்கவி கூறலின், இங்கே சாட்சி ஒன்றெனலும், சரீரம் மூன்றெனலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடஸ்தனையும் வியட்டி உபாதித் திரயத்தையுங் குறிப்பிக்கப் பெற்றாம். சாட்சியாகிய சைதன்யத்தை அன்றி உபாதித் திரயந் தோன்றி அழிதற்கும் இவையோர் முதலாதற்கும் இடம்பெறுவதாகத் தோற்றுவதே அன்றி உற்று நின்று உணருமிடத்துச் சற்றும் பேத மில்லை. பகிர் முகத்தில் சாட்சிக்கும் உபாதித் திரயத்திற்கும் அன்னியமும் முடிவும் உளவாகக் காணும். காணினும், அந்தர் முகத்தில் அன்னிய மென்பதும் முடி வென்பதுஞ் சாட்சிக்குச் சற்றும் இன்றென உணர்க. உபாதித்திரயத்திற்குக் காலவரையறை ஏற்கப் பெற்றது பகிர்முகத்திலென்க. இங்கே கோடி யென்பது கணக்கின்மையைக் காட்டிநின்றது. கர்த்தாவாஞ் சாட்சி என்றதனால், சேதனத்துவம் வருவிக்கப்பட்டது. இங்கே அவித்தையெனல், தானலாததைத் தானெனக் கோடலை. பொருளல்லவற்றைப் பொருளாக ஏற்குமளவும், இங்கே கூறிய உபாதித்திரய முடிவுகள் தள்ளற் பாற்றன்று. உபாதி நாட்டத்தால் சைதன்யம் மேலாகவுங், கீழானவும், ஒப்பாகவுங் காணப்படுவதன்றிச் சைதன்ய நாட்டத்தில் சற்றும் இன்றென்க. உபாதி நாட்டஞ் சற்று மகலாததால் இங்ஙனம் வரையறுத்த முறைகளைத் தடுக்கில், உபய பிரஷ்டத்து வந்தப்பால் எய்துவரென்க. எனவே, தூல தனுவுக்குச் சூக்கும தனுவும், அந்தச் சூக்கும தனுவுக்கு, மூடமாகிய அவித்தையும், உபாதான மெனப் பெற்றாம். பிர விர்த்தியுங் கணத்திலாதலால் நிவிர்த்தியுங் கணத்தி நாச மென்றார். உபாதியாகிய தூலதனுவை மெய்யென ஏற்றல் அதற்கியைந்த காலத்தையும் இடத்தையும் மெய்யாக ஏற்க வேண்டி வரும். இங்ஙனம் விரிக்கிற் பெருகுமாதலின் சுருக்கியுரைத்தனரென்க. (26)

## வஸ்துவை அணுவுக் அணு எனல்.

ஆய்ந்த சுத்தத்தவியத்தம் அதிலவ்வியாகிருதம் அதனிலிரணிய கருப்பம். அதனில்விராட்டடக்கம். வாய்ந்தவிராட்டினில்வானம் வானில்வளி வளியின் வன்னி வன்னியதில்வனம் அவ்வனத்தின்மண்டா னடக்கந், தோய்ந்தமண்ணிற் றூலவுடலடக்கம் அதிற்சூக்கஞ் சூக்கு மத்திலவித்தை அதிற்றோய்சீவனடக்கம், போந்தடங்கு மதனை பணுவென்பர் இதிலடங்கும்பொருளை யணுவுக் கணுவாப் புகன்றிடுநான் மறையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆய்ந்த சுத்த அவ்யத்தம், அதில் அவ்வியாகிருதம், அதனில் இரணிய கருப்பம். அதனில் விராட்டடக்கம். வாய்ந்த விராட்டினில் வானம், வானில் வளி, வளியின் வன்னி, வன்னியதில் வனம், அவ் வனத்தின் மண்தடான் அடக்கந், தோய்ந்த மண்ணிற் தூல உடல், அடக்கம் அதிற் சூக்கஞ், சூக்குமத்தில் அவித்தை, அதிற் தோய் சீவனடக்கம், போந்தடங்கு மதனை அனு வென்பர், இதிலடங்கும் பொருளை அனுவுக் அனுவாப் புகன்றிடு நான் மறையே.**

**(இதன் பொருள்)**

**ஆய்ந்த சுத்த அவ்வியத்தம் அதில் அவ் வியாகிருதம் அதனில் இரணிய கருப்ப, அதனில் விராட்டடக்கம் :-** — அளவைகளாலும் யுத்தி யனுபவங்களாலும் ஆராய்ந்து, தெளிந்த விடத்துச் சதோதயமாக விளக்கி நிற்பது யாதோ, அந்தச் சுத்த சைதன்யத்தில், அவ்வியத்தமா நிற்பது மூலப் பிரகிருதி. அந்த மூலப் பிரகிருதியில் அடங்கி நிற்பது, ஈசனுக்குக் காரண தனுவாகிய அவ் வியாகிர்தமும், அந்த அவ் வியாகிர்தத்தில் அடங்கி நிற்பது சூக்கும தனுவாகிய இரணிய கருப்பமும், அந்த இரணிய கருப்பத்தில் அடங்கி நிற்பது, விராட்டாகிய தூல தனுவும்.

**வாய்ந்த விராட்டினில், வானம், வானில் வளி, வளியின் வன்னி, வன்னியதில் வனம், அவ் வனத்தின் மண் தான் அடக்கம் :-** — இங்ஙனம் வாய்ந்த விராட்டாகிய தூல தனு அடங்கி நிற்பது ஆகாயமும். அந்த ஆகாயத்தில் அடங்கி நிற்பது காற்றும், அந்தக் காற்றிலடங்கி நிற்பது அக்கினியும், அந்த அக்கினியில் அடங்கி நிற்பது சலமும், அந்தச் சலத்தில் அடங்கி நிற்பது மண்ணும்.

**தோய்ந்த மண்ணிற் தூல உடல் அடக்கம், அதிற் சூக்கஞ் சூக்கு மத்தில், அவித்தை, அதிற் தோய் சீவனடக்கம் :-** — இங்ஙனம் மிசிரிம்பித்து நின்றுள்ள மண்ணிலடங்கி நிற்பது வியட்டி. தூல தனுவும் அந்தத் தூல தனுவில் அடங்கி நிற்பது சூக்கும தனுவும் அந்தச் சூக்கும தனுவிலடங்கி நிற்பது காரண தனுவாகிய அவித்தையும் அந்த அவித்தையில் அடங்கி நிற்பது சீவனும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போந் தடங்கு மதனை யணு வென்பர், இதில் அடங்கும் பொருளை அணுவுக் அணுவாப் புகன்றிடு நான் மறை :-** — இங்ஙனம் நிரலே வந்தடங்கிய சீவனை அணு எனச் சத்துக்கள் கூறா நிற்பர். இந்தச் சீவனாகிய அணுவில் அடங்கி நிற்பது யாதோ, அந்தப் பரம் பொருளை அணுவுக் அணு, என்று நான்கு வேதங்களுந் துதியா நிற்கும்.

சுத்தம் என்றதனால், அசுத்த மெனக் கொள்ளக் கிடந்தது. இயைவதினால் அதனை மூலப் பிரகிருதி யென்றாம். சுசாதியாதி பேதமின்மையே சுத்தமென்றற்கு இயையின், அவை உடைமைக்கு அசுத்தமெனக் கூறவேண்டுமோ? சுத்தத்தில் அசுத்தம் அடங்கி நிற்றல் விதையின்கண், விருஷம், சாகை முதலியவைகளடங்கி நிற்றல் போல்வதாம். வியத்தம் - வெளிப்படல். அவ்வியத்தம் - வெளிப்படாமை. இதிலடங்கும் பொருளை அணுவுக்கணுவாப் புகன்றிடு நான்மறை என்றதனால், சுத்த சைதன்யத்திற்கு அணு மூலப் பிரகிருதி யெனவும், அதற்கு அணு அவ்வியாகிருத மெனவும், அதற்கு அணு இரணிய கருப்ப மெனவும், அதற் அணு விராட்டெனவும், அதற் அணு வான மெனவும், அதற் அணு காற்றெனவு, மிவ்வாறே கீழ்ச்சேறற் கிடம்பெற்றாம். இங்ஙனங் கூறிய நெறியால் வஸ்து அணுவுக் அணுவா மென்றது ஐயமின்றி ஏற்றற் பாலதென்க. உபாதி பேத நாட்டத்தாலன்றி அணுவுக் காணுவெனல், வஸ்து நாட்டத்தாற் சற்றுமின்றென்க. இங்ஙனமாய பேதங்களை அறியப் புகின் ஏனைய கருவிகளிலும் மிகச் சிறந்தது அறிவாகிய கருவி ஆதலால் அதனையே ஐயந் திரிபெய்தாதற்கு அறிவுடையோர் ஏற்பரென்க. ஏனையோர், வேறு கருவியை ஏற்பதனால் அது முடிவுபெறாததற்கும், துக்க விர்த்தி, தடையற்ற ஆனந்தம் வாய்க்காததற்குங் காரணமாமென்க. (27)

## வஸ்துவை மகத்துக்கு மகத்தெனல்.

அரிதான சீவனுக்குப் பஞ்சகோச மைங்குகையா
மதின்குகையா மைம்பூதந்தா
மிரியாத விராட்டிதுமற் றிதற்கு மேலா
மிரணியகருப்பமதா மிதற்கு மேலாம்
பெரிதாமவ்வியாகிருத மிதற்குமேலாம்
பேசருமவ்வியத்தமிதிற் பெரிதாஞ் சுத்த
முரியார்க ளிதனைமகத்தென்பர் மேலா
மொளியைமகத் தின்மகத்தென்றுரைப்பர் மேலோர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரிதான சீவனுக்குப் பஞ்ச கோசம் ஐங் குகையாம்**
**அதின் குகையாம் ஐம் பூதந்தான்**
**இரியாத விராட்டிது மற்றிதற்கு மேலாம்**
**இரணிய கருப்பமதாம், இதற்கு மேலாம்**
**பெரிதாம் அவ்வியாகிருதம் இதற்கு மேலாம்**
**பேசரும் அவ்வியத்தம் இதிற் பெரிதாஞ் சுத்தம்**
**உரியார்கள் இதனை மகத் தென்பர், மேலாம்**
**ஒளியை மகத்தின் மகத்தென்று உரைப்பர் மேலோர்.**

**(இதன் பொருள்)**

**அரிதான சீவனுக்குப் பஞ்ச கோச ஐங் குகையாம் அதின் குகையா ஐம் பூதந்தான் :-** — எட்டற் கரிய சீவனென்னு நிலைக்கு பஞ்ச கோசமெனல் ஐந்து குகை போல் வனவாம். அந்தப் பஞ்ச கோசங்களுக்கும், பஞ்ச மா பூதங்களுங், குகை போல் வனவாம்.

**இரியாத விராட்டிது மற்றிதற்கு மேலாம் இரணிய கருப்பமதாம் :-** — இந்தப் பஞ்ச மாபூதங்கட்கு என்றும் நசியாத விராட்டென்னு நிலை குகை போல்வதாம். இந்த விராட்டென்னு நிலைக்கு மேலா நின்றுள்ள விரணிய கருப்ப நிலை, குகை போல்வதாம்.

**இதற்கு மேலாம் பெரிதாம் அவ் வியாகிருதம் இதற்கும் மேலாம் பேசரும் அவ் வியத்தம் இதிற் பெரிதாஞ் சுத்தம் :-** — இந்த விரணிய கருப்பத்திற்குச் சிறந்த அவ் வியா கிருத மென்பது குகை போல்வதாம். இந்த அவ்வியாகிருதத்திற்கு வேறொன்றை மேலாகச் சொல்லற்கு அரிய, அவ்வியத்த நிலை யென்பது குகை போல்வதாம். இந்த அவ் வியத்த நிலைக்குச் சுத்த சைதன்யம் என்பது குகை போல்வதாம்,

**உரியார்கள் இதனை மகத் தென்பர். மேலாம் ஒளியை மகத்தின் மகத் என்றுரைப்பர் மேலோர் :-** — இங்ஙனமாய நிலையை அனுபவித்தற் குரிய பெரியோர்கள், இவ்வாறு முடிந்த முடிவாய நிலையை, மகத் தெனக் கூறா நிற்பர். எவற்றிற்கும் அடங்காது விளங்கும் பரஞ் சோதியை, மகத்துக்கு மகத் தெனக் கூறா நிற்பர் சத்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சல சந்திரன் போற் தனக் கெனச் சொரூப மொன்றின்மையை உளதாகக் கருதி ஆரோபம் என்றெண்ணாமற் தேடப் புகுவான் போல்வதின், அரிதான சீவனென்ற அடை கொடுத்தார். பஞ்ச கோச மெனல் அன்ன மயம், பிராண மயம், மனோ மயம், விஞ்ஞான மயம், ஆனந்த மய என்பவற்றை. எனவே, ஒன்றை ஒன்று வியாபித்து மறைத்து நிற்ப தெனப் பெற்றாம். இவ்வாறே ஏனையவையும் எனப் பொருள் கொள்க. விராட்டாதி கூறியவதனால் விசுவாதி பஞ்ச கோசங்களில் அடங்கினவாகக் கண்டாம். இரியாத விராட்டெனல் யாதொன்றாலும் விலகாத சமஷ்டி வியஷ்டி தூல வடிவங்களைத் தானென்று அபிமானித்தலை. பெரிதாஞ் சுத்தமெனல் சுருதிக்கும் யுத்திக்குஞ் சற்றும் முரணின்றி, அறிவே உண்மை, ஏனையவை அனைத்தும் ஆரோபமெனத் தெளிதலை. மேலா ஒளியெனல் ஏனையவை அவற்றால் விளங்காமல் சற் குருவின் அருள் நோக்கத்தால் அவ் அவறிவு விளங்கலை. உரியார்களெனல் வாச்சியார்த்தத்தில் மேலிட் டோரையும் மேலோரெனல் இலட்சியார்த்தத்தில் மேலிட்டோரையு மெனக் கொள்க. ஒருவன் அணுவெனவும் மகத்தெனவும் இருப்பதை விசாரிக்கப் புகின், தான் அந்த அணுவாகவும், மகத்தாகவும் ஆகவேண்டும். இங்கே தானெனல் அறிவு, ஆகா விடத்து அதுவது தனக்கு விளங்காது, விளங்கா விடத்துக் கணிப்பதரிது. எங்ஙனமேனின், தான் அணுவாயவிடத்து மகத்தும், மகத்தாய விடத்து அணுவும் எங்ஙனம் விளங்கும். இஃதன்றியும் தான் அதுவது வானால் அதுவது விளங்கும். தானாகா விடத்து, விளங்கா என்ற விடத்து, அணுவில் மகத் தெனலும் மகத்தில் அணு வெனலும் தனக்கில்லை. தன்னை விட வேறொ வெனின் தனது பிரதி பலனம் ஆதலின் வேறல்ல. அறிவே சமஸ்தமுமாக விளங்கலின் அவ் வறிவு அணுவெனற்கும் மகத்தெனற்கும் முடன்படாதோ? படுமாதலின், அணுவுக்கணு வெனவும் மகத்துக்கு மகத் தெனவுங் கூறியது பொருந்து மென்க. இவ் வறிவு விளங்கிய விடத்து இப் பேதமின்றெனக் கொள்க. உபாதானவடுக்கிற் செல்லுழி அணுவுக் அணு வெனவும், உபாதேய வடுக்கிற் செல்லுழி மகத்துக்கு மகத்தெனவுஞ் சேரல் அறிவன்றி யின்றேனும், அந் நாட்டமும் அது விளங்கும் விளக்கமும் எய்தப் பெறா வளவு மகத் தெனவும், அணு வெனவுங் கூறற் தகையதாமெனக் கொள்க. மறுத்துக்கூறின், சொல்லானந்தமும், விடயப் பயனுமே மேலிட்டழிதற்குத் தெரியாமல் இடந் தருமென அருத்தாபத்தியால் ஓர்ந்தாம். இங்ஙன இருந் துணராத குற்றம் நமதென்க. அனுபவ உத்தரவாதி ஆதலினும் மிக்க தொன்றில்லை யென்பது திண்ணம்.

(28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்ஞான நீங்குமுறை.

தோற்றுமசத் தறிந்தகலத் தொடர்பகல்வ தேதெனிலித் தூலதேக, மாற்றுதொறுந் தொழிலகலு மிந்திரியச் செயலகன்றால் வைய நீங்கு, மேற்றுமனோ லயத்திலறும் விடயமவித்தை நீங்கில் யாவு நீங்கும், போற்றுமந்தச் சீவவறி விழந்தவிடம் புகல்பரிபூரணமதாமே.

**தோற்றும் அசத் அறிந்து அகலத், தொடர்பு அகல்வதேது எனில் இத் தூல தேக, மாற்றும் தொறுந், தொழில் அகலும், இந்திரியச் செயல் அகன்றால் ஐயம் நீங்கும், ஏற்று மனோ லயத்தில் அறும் விடயம், அவித்தை நீங்கில், யாவும் நீங்கும், போற்றும் அந்தச் சீவ அறிவு இழந்த இடம், புகல் பரிபூரணம் அதாமே.**

**(இதன் பொருள்)**

**தோற்றும் அசத் அறிந்து அகலத், தொடர்பு அகல்வதே தெனில் :-** — மெய் போலத் தோற்றித் தனக் கெனச் சொரூபம் மொன்றில்லாதன வென்று காட்சிப் பொருளையும் கருத்துப் பொருளையுஞ் சோதனை முதலியவற்றால் ஐயந் திரி பற நன்குணர்ந்து, உணர்ந்தவாறு கலங்காது நிற்க தம்மை விட்டகலும். அகலலே அது காரணமாகப் பிறவி தோறுந் தொடர்ந்து வரும் பந்தத் தொடர் பகலும், எனச் சுருதி கூறுவது எங்ஙன ஏற்பதெனில்.

**இத் தூலதேகம், மாற்றும் தொறுந் தொழில் அகலும் இந்திரியச் செயல் அகன்றால் ஐய நீங்கும் :-** — பஞ்ச பூதமாகிய தூல பூதத்தை அன்றித் தூல தனு எங்கணும் இல்லை யென மறவாது, நின்று வாசனையால் அடிக்கடி தோற்றினும், அங்ஙனமாய விசாரணைத் தெளிவால் அத் தடிப்பைக் கரைக்குந் தோறும் வந்தேன், போனேன் இருந்தேன், நடந்தேன் முதலிய தூலதனுவுக் இயைந்த புடை பெயர்ச்சிகள் மெல்ல மெல்ல நீங்கும். அவை நீங்கவே தூல தனுவில் அமைத்திருப்பதாக எவர்க்கு இயல்பாகக் காணப்படும் பஞ்சேந்திரியங்களும் அவற்றிற்குரிய ஸ்தானங்களும் அவற்றின் புடை பெயர்ச்சிகளாகிய, பார்த்தேன், கேட்டேன், முகர்ந்தேன், ஸ்பரிசித்தேன், ருசித்தேன் முதலிய செயல்களுந் தாமே அகலும். அங்ஙனம் அகலில், உலக மெனல் எங்ஙனங் காணப்படும். காணப்பட்டாததால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏற்று மனோலயத்தில் அறும், விடயம் அவித்தை நீங்கில் யாவும் நீங்கும் :-** — சங்கற்பம் எங்ஙனம் எழும், அச் சங்கற்பத்திற்கு வினை முதலாகிய மன மென எங்ஙனந் தலைகாட்டும். தலைகாட்டாவிடத்து அதின் பகிர்முகப் புடை பெயர்ச்சியாகிய, நினைத்தேன், மறந்தேன், விரும்பினேன், வெறுத்தேன் முதலியவைகள் எங்ஙனம் இருக்கப்பெறும். இங்ஙனமாய மனோ லயத்தில் சத்த பரிச முதலிய விடயங்கள் தலை காட்டுமோ? காட்டா விடத்து தன்னைத் தானுணர்தற்கு இடையூறா நின்றுள்ள அஞ்ஞானமாகிய அவித்தை யெனல் ஒழியாதிருக்குமோ? அந்த அவித்தை நீங்கப் பெறில் சமஷ்டி சங்கற்பங்கள் அனைத்துந் தலை காட்டாது ஒருங்கு அகலும்,

**போற்றும் அந்தச் சீவ அறிவு இழந்த விடம் புகல் பரி பூரணமதாம் :-** — அங்ஙனம் ஒருங்கு அகன்ற அவசரத்தில் தானே நானல்லாதகை நானெனக் கொண்டு உழமு அந்தச் சீவ அறிவு நசிக்கும். நசித்த அக் கணத்திற் தானே கூடஸ்தனும் பிரமமும் பேதமின்றி ஏகமாக விளங்கும். அங்ஙனம் ஏகமாக விளங்கும் நிலையே வேத முடிவிற் சொல்லப் பட்ட பரிபூரண சொரூப மெனப்படுவதாம்.

மனோ லயம் எவர்க்கு உடன் பாடாதலின், ஏற்று மனோலயமென அடைகொடுத்தார். தற் போதம் இழந்த இடம், மேலாய நிலையாதலால் போற்றுமென்றார். தோற்று மெனல் பெயரெச்சம் அதலின் உலகென எஞ்சியது. அசத் அறிந்து, அகலத், தொடர்பு அகல்வது என்றதனால், இது காறுஞ் சத் என்று அறிந்திருந்ததாகப் பெற்றாம். ஐய நீங்குமெனக் கூறி மனோ லயத்தில் அறும் விடயமென, வேறு பிரித்துக் கூறுவதென்னை எனின், இந்திரிய நிக்கிரகத்தால் உலகந் தோற்றா தொழியினும் முன்னர் அது வது வாகத் தடித்து நின்ற விடயத் தடிப்புகள் மனத்தில் இலா லிங்ஙனங் கூறினாரென்க. தானலா தொன்று தன்னைத் தானெனக் கோடல் தெளிவின்மை பற்றி யாதலாலும், அது காரணமாக அனைத்தையும் மெய்யெனக் கொள்ள வருமாதலினானும் அவித்தை நீங்கில் யாவும் நீங்கும் மென்றார். அகலும், நீங்கும், அறும், யாவும் நீங்குமெனத் தன் வினையிற் கூறியது ஆங்காங்கு யாம் தெளிந்த விடத்தாதல் என்க. எனவே, சகல கற்பனைகளும் அற்று அறிவாய் விளங்கிய அவசரமெனக் காட்டச், சீவ அறிவிழந்த விடம் புகல் பரி பூரணமதாம் என்று கூறப்பட்டது. இழவாத இடம், திரி புடி மயமதா, எனத் தாமே யுரை கொடுக்கின்றது. (29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்ஞான கால வரையறை முறை.

மாறாத வஞ்ஞான முழுதுமகல் வதுகூறின் வையந் தன்னின், வேறானாற் காலகலும் முடன்மூன்றுஞ் சீவனுக்கு வேற தானா, னீறாகும்பாதி தற்சாட்சியைக் காணின் முக்காலு நீங்குந் தானாய்ப், பேறான சொரூப பரிபூரணமா னான் முழுதும் பேசொணாதே.

**மாறாத அஞ்ஞானம் முழுதும் அகல்வது கூறின், வையந் தன்னின், வேறானாற், கால் அகலும், உடன் மூன்றுஞ் சீவனுக்கு வேறதானால், நீறாகும் பாதி, தற் சாட்சியைக் காணின், முக்காலு நீங்குந், தானாய்ப், பேறான சொரூப பரிபூரணமானான், முழுதும் பேசொணாதே.**

**(இதன் பொருள்)**

**மாறாத அஞ்ஞான முழுதும் அகல் வதுகூறின் :-** — என்றும் நசியாதுள்ள அறியாமை எனப் படுவன அனைத்தும் அகல வேண்டுவதைப் பற்றிக் கூறுமிடத்து,

**வையந்தன்னின், வேறானாற் கால் அகலும், உடன் மூன்றுஞ் சீவனுக்கு வேற தானால், ஏறாகும் பாதி :-** — தானாகிற அறிவு உலகம் ஆகாதாதலின் தக்க ஆதார அனுஷ்டானத்தால் உலகாகாரந் தவிர்ந்து சத்தா மாத்திரமாக விளங்கின் காற் பங்கு தன்னை விட்டகலும். தூல சூக்கும காரண மென்று மூன்று உபாதி உடல்களும், அவ் விளக்கஞ், சுருங்காது செய்யுஞ், சாதன மேலீட்டால், சீவ சைதன்யத்திற்கு வேறாகும், எனத் திடந் தரும்தில் பாதிப் பங்கு இனித் தலையெடாது நசிக்கும்.

**தற் சாட்சியைக் காணின் முக்காலு நீங்குந் தானாய்ப், பேறான சொரூப பரி பூரணமானால் முழுதும் பேசொணாது :-** — அம் மேலீட்டுத் தேர்ச்சியால் சீவனுக் அதிஷ்டானமாய் நின்றுள்ள சொப்பிரகாசத்தை அவத்தை மூன்றினும் ஞானாசிரியரது அநுக்கிரகத்தால் நேரே உண்மையாகக் காணுமிடத்து முக்கால் பங்கு நீங்கும். அங்ஙனம் மேலாய பயனாக விளங்கும் பரிபூரண சொரூபமாக இயல்பாகத் தான் நிற்கில் முழுதும் நீங்கும். அப்பால் இணைய நிலையினை இதெனச் சொல்லக் கூடாமல் நிலைத்து விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறாத எனல் விசாரணைத் தெளிவால் அன்றி யெனக் குறிப்பிக்க நின்றது. வையந் தன்னில் வேறாதல் - அறியாமை வயத்தாகாமை. முழுதும் அகலும் என்றதனால், பகிர் முக நெறிக் கண்ணும் - அந்தர் முகநெறிக் கண்ணும் - அறி வறியாமை யடுக்குகள் அபரிதமாக உளவெனப் பெற்றாம். கால பரிச் சேதம் - தேச பரிச்சேதம் - வஸ்து பரிச்சேதம் - என்னும் இம் மூன்றும் எங்கு மில்லை எனக் காட்டச் சொரூப பரி பூரணமானால் என்றார். அப்போது முழுதும் அகல்வதற்கு ஐயம் வேண்டுமோ வென்பார், பேசொணாதே என்றார். வாச்சியார்த்த மென்னும் நிச்சயார்த்தத்தால் அறிவே எல்லாமாய் அல்லவுமாய் நிற்பதெனத் திடங் கோடல் தினைத் துணையும் பயனின்மையின் எங்ஙனம் பிராந்தி அகலும், இன்மையின் இலக்கியார்த்தமாகிய பிரத்தியட்ச ஞானத்தாலெனக் கருதித் தக்கோர்பாற், திரிகரண சுத்தியாகத் தொண்டு செய்யப் பெறில் ஆசிரியரது கிருபா நோக்கம் வரும், வரின் தானாகிற அறிவு, மின்மினி போலவும் - தீபம் போலவும் - வளர் பிறையின் அடுக்குகள் போலவும் - தினகரன் போலவும் - ஒளி விட்டிலங்கும், அங்ஙனம் இலகுவதால் உலகங் காணா தொழியும், ஒழியினும் முன்னர்ப் பழக்கத்தால் உலகிருப்பு முற்றுங் கெடாது. கெடாது பற்றிப், பிராந்தி காற்பங் அகலுமெனவும், தனக்கின்றேனும் ஊழ் பற்றி இன்ப துன்பத் தாக்குகள் இடை விடாது வருமன்றோ? வரினும் அவற்றோடு போக்கு வரத்தின்றி நிற்குது மன்றோ? அங்ஙன நிற்றல் அறிவன்றோ? எனத் துணிந்து அவ் விளக்க நாட்டத்தில் விடாது பற்றுதும் அன்றோ? பற்றுந் தோறும் ஆதேய நாட்டம் இழக்குமன்றோ? இங்ஙனம் இழக்குந் தோறும் ஒளி விட்டெறிதல் பல கோடி தினகரன் உதயத்திற்குவமை கூறற்கடங்காது சாக்கிராவஸ்தை முழுதுமா நிற்குமன்றோ? நிற்கின் அப்பழக்கம் ஏனைய வீரவத்தைக் கண்ணும் மெல்ல மெல்ல வருமன்றோ? வரின், மூன்றவத்தைகளும், அவற்றிற்குரிய உபாதிகளும், அது பற்றிக் கற்பனையாக வெழும், அபிமான நாமங்களும், எங்ஙனம் தலை காட்டப் பெறும். இங்ஙனந் தலை காட்டாத நிலைமையைப் பற்றி உன்னுமிடத்துப் பிராந்தி அரைப்பங்கு அகலு மெனவும், சுசாதியாதி பேதமின்றிச் சதோதயமாகவிளங்கும் அந்த வியாபக விளக்கத்தைத் தவிரத் தானென இல்லாததாகவும், அஃது அவத்தைகள் தோறும் நிகழும் சேட்டைகளாகாது, அவற்றிற்குச் சாட்சியாகவும் தான் காணப் பெறும். அங்ஙனங் காணப் பெறுவதால் பிராந்தி முக்காற் பங்ககலும் எனவும், அகலின், அச் சுயம் பிரகாசமே தானாக முடியும். முடியின், பரிச் சின்னத்துவம் இன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கும். விளங்கின், பிராந்தி முழுப்பங்ககலும் எனவும், அகலின், பிராந்தியெனல் வந்ததுமின்றிப் போயதுமின்றி இயல்பாய நெறியில் நிற்கும். நிற்கின், அப்போதுள்ள நிலை எங்ஙனங் கூறப்படுவது. ஆதலின் பேசசொணாதே யெனவுங் கூறியதாகப் பெற்றாம். இதுநிற்க. இந் நிலை அடுக்குகள் தானாகாது அதனை வாசித்துப் பிறருக்குக் கூறுவதில் யாது பயனுறுவர். இன்றாதலின், நிட்டை கூடுதலே தனக்குப் பெரும் பயனென்க. காற் பங்கு முதலிய அளவைகள், துக்க நிவிர்த்தி தடையற்ற ஆனந்தப் பேற்றின் வளர்ச்சியால் நுண் உணர்வினார் கணித்தற் கியையுமாதலின் ஏற்றற் பாற்றாம். இவ் விலக்கணங்கள் அனைத்துந் தன்னிலாதலாற் தன்னைப் படிக்கவேண்டும். தன்னைப் படித்தலாவது அயலனைத்துந் திரி புடியாக ஆங்காங்குக் காண்டல் அறிவின் விகாரமன்றேற் சோதனை ஆதிகளாலுற்று நின்றுணரில் எவர்க்கும் அறிவாக முடிவதென்னையோ? இ∴தன்றியும், மண்ணையும், பொன்னையும், நீரையும் நேரே காண்பார்க்கு, அவற்றின் விகாரம் எங்ஙனம் ஓர் முதலாகக் காணப்படும்? கற்பனையைப் பற்றிச் சுயம் பென வரலால் இரண்டு மறிவே யெனத் தெளிவுறுவ தென்னையோ? ஆதலின், யாதானு ஓர் பொருள் தோற்றின் அதன் வயத்தாகாது நிதானித்து உபாதானம் இல்லாத இன்மையின் அவ் வுபாதான ஆதாரமாக வேண்டும். ஆயின், காரிய மெங்கே யென நாட்டம் வரும், வரின், பாழாக முடியும், முடியின், மருளாதலின் இருளாகக் காணும், காணின், தெருள் வருங்காறுங் காக்க வேண்டும். காக்கின், மின்மினி முதலிய பலவித விகற்ப ஒளியாக மேன் மேல் வளரா நிற்கும், நிற்கின், நிரதிசயானந்தப் பெருக்கா முடியும். இங்ஙன முடிந்தவாறு இதற்கு கானி நேரிடாது கலங்காது நிற்கும். கலங்கல் சச்சிதானந்தம் போற் காண்டலின் விகாரத்தை மீண்டும் மெய்யெனக் காண்டலை, தன்னை யன்றி வேறன்மையினென்க. இ∴தன்றியும் வெளியால் சூழப்படாத பொருள் தினைத் துணையுமில்லை யெனப் பிரத்தியட்சத்தால் எவர்க்குங் காணப்படுவதால், யாதானும் ஒன்றைப் பற்றி விசாரிக்கும் இடத்து விசாரிக்கப் படும் பொருள் உருவமும், அதனைச் சூழ் வெளி அருவமும், விசாரிக்கப் புகுவது தெரிவுமாதலின் இ∴தெவர்க்கும் எல்லை யாது? உணர்தல் இருப்பினும் அருவமாதலின் இல்லை யெனின் உருவமும் அருவமுஞ் சடமன்றோ? அகர்த்தத்துவ மன்றோ? உருவ நாட்டத்தில் அருவமும் அருவ நாட்டத்தில் உருவமும் இல்லாமற் காண்டற்கு ஏது என்னை? நாட்ட பேதத்தா எனின், நாட்ட பேதம் அறிவின் புடை பெயர்ச்சி யன்றி ரூபா ரூபமாகும் என வரும், வரின், அது வதுவாகப் பரிணமித்துத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றலும், தானே திணை பாலிடமாகலும் அவ் அவற்றிற் குரிய செயல்களைப் போல் நிகழ்தலும், இத்தனையும் யாதென்று உணருமிடத்துச் சர்வ சங்கார மயானம் போல் நிர் விகற்பமா நிற்றலும் இயல் பாகப் பருவத்துக்குத் தக்கவாறு உடைமையின் பொருந்து மென்க. பற் பல விகற்ப ரூபமாகச் சிதைத்து நிற்றலும் தானே தானாகச் சேட்டித்து நிற்றலும் அறிவன்றி இன்மையின், பகுத்தறிவு இன்மையின் நின்ற அகலும் வகையும், கால வரையறை வகையுங், கணித்தல் எங்ஙனம் அருமைத்தா மென்க. பெருகும் ஆதலின் சுருக்கி உரைத்தாம்.

## முத்தர் பெத்தர் இலக்கணம்.

முத்தரையும் பெத்தரையு முகக்குறியா னகக்குறியான் முழுதுந்தேரின், மெத்தனவாகியமொழியுமானந்த பரவசத்தான் மிகுந்த சோர்வுஞ், சித்தநிலை திரியாத செல்வமுமா யிருப்பர்நல்லோர் தீயோ ரெல்லா, மித்தகைமை யோர்களையே யிகழ்ந்துபுகழ்ந்தோர்க்குறவா யிருப்பர் தாமே.

**முத்தரையும் பெத்தரையும் முகக்குறியால் அகக் குறியால் முழுதுந் தேரின், மெத்தனவாகிய மொழியும் ஆனந்த பரவசத்தான் மிகுந்த சோர்வுஞ், சித்த நிலை திரியாத செல்வமுமாய் இருப்பர் நல்லோர், தீயோரெல்லாம், இத் தகைமையோர்களையே இகழ்ந்து, புகழ்ந்தோர்க் உறவாயிருப்பர் தாமே.**

**(இதன் பொருள்)**

**முத்தரையும் பெத்தரையும் முகக் குறியால் அகக் குறியான் முழுதுந் தேரின்:-** — வீடு பெற்றோரையும் பந்த உற்றோரையும் முகக் குறியினாலும், அகக் குறியினாலு முழுதும் விசாரித்துத் தெளியுமிடத்து.

**மெத்தனவாகிய மொழியும் ஆனந்த பரவசத்தான் மிகுந்த சோர்வுஞ், சித்த நிலை திரியாத செல்வமுமாய் இருப்பர் நல்லோர் :-** — கடிய வசனம் இன்மையும், பேரின்ப மேலிட்டால் பரவசப் பட்டு, அதனால் ஓய்தும், மிக்க சோர்ந்த நடையும் தெளிந்ததால் உண்டாகுந் திடச் சித்தமும் அதனால் என்றும் மாறா ஒரு தகைமையாயுள்ள நிரதிசய ஆனந்தமுமாய் முத்தர்கள் இருப்பார்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தீயோ ரெல்லாம் இத்தகைமை யோர்களை இகழ்ந்து, புகழ்ந் தோர்க்கும் உறவாயிருப்பர்:-** — இங்ஙனமாய நெறி பெறாத பெத்தராகிய பாவிகள் தம் நிலை பிறழாதுள்ள இப்படிப் பட்ட பெரியோர்களையே ஞாயமின்றி யெங்கணும் இகழ்ந்து, அவர்களை விரோதித்துத், தம்மைப் புகழ்பவர் யாவரோ, அவர்களுக்கு உறவாகவே இருப்பர்.

முகக் குறியானும் அகக் குறியானும் முழுதும் ஓர்தலாவது நல்லோர்களது முகம் பிரம்ம தேஜசும், அகம் ஆனந்தப் பெருக்கு அகலாமையும், தீயோர்களது முகம் பிணக் குறியும், அகம் தமது எண்ணப்படி நிறைவேறாமையால், எய்தும் வதையுமாம் எனலை. மெத்தனவாகிய மொழி, தனது விகார நாட்ட இழந்தமையானும், மிகுந்த சோர்வு அயனாட்டம் இழந்துழி எய்தற் பாலது ஆனந்த பரவசமாதலானும், சித்த நிலை திரியாத செல்வம், சகல வித பதவிப் பேறும், இது காறும் அயலாகக் கொண்டிருந்த மயக்கம் இறந்து, என்னையே யல்லாமல், யான் பயனாகப் பெற்றது, இப்போது வேறில்லை யென்றும், பந்த கால முழுதும் இவ்வாறே இருந்தேன் என்றும், தெளிந்த திட எய்தினமையானும் வரற்பாலன தென்க. (31)

# அஞ்ஞானங்களின் இலக்கணம்.

ஏற்றபிர பஞ்சமதே நித்தமென்றும் பிரமமென்பதில்லை யென்றும், தோற்றமுட றானென்றுந் துளங்குவதே யஞ்ஞான துக்கமாகும், சாற்றுபிர பஞ்சமெலாம நித்தமென்றும் பிரமமது தானே யென்றும், வேற்றுடல் வேற்றுடலென்றும் விரிந்துணரப் பெறுமதுவே தாந்தஞானம்.

**ஏற்ற பிரபஞ்சம் அதே நித்த மென்றும், பிரமமென்பது இல்லை என்றும், தோற்றம் உடல் தானென்றுந் துளங்குவதே அஞ்ஞான துக்கமாகும், சாற்று பிரபஞ்ச மெலாம் நித்த மென்றும், பிரமமது தானே யென்றும், வேற்றுடல் வேற்றுடல் என்றும் விரிந்து உணரப் பெறும் அது வேதாந்த ஞானம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்)

**ஏற்ற பிரபஞ்சமதே நித்த மென்றும் பிரமம் என்பதில்லை யென்றும், தோற்ற முடன் தானென்றுந் துளங்குவதே அஞ்ஞான துக்கமாகும் :-** — அந்தர் முக நாட்ட இழப்பில் எவரு ஏற்றற் பாலதாகிய பிரபஞ்ச மென்பது சத்தாகக் காண்டலின் அநாதி நித்திய மென்றும், அரி பிர மாதிகளாலும் எட்டி அறிதற்கரிய பிரமமென்பது நாஸ்தி நபாதி யென்றும், பிரத்தியட்சமாகப் பிறவி தோறும் பல விகற்ப பேதமாகத் தோற்றற் குரிய உடலோ தானென்றும், சித்தங் கலங்கற்கு இயைந்து நிற்பதே அறியாமை மயமாகிய துக்க ஸ்வரூபம் எனப்படுவதாம்.

**சாற்று பிரபஞ்ச மெலாம் அநித்தம் என்றும் பிரம மது தானே யென்றும், வேற்றுடல், வேற்றுட லென்றும் விரிந்துணரப் பெறும் அது வேதாந்த ஞானம்:-** — இன்ன நிலையின என அறியாமல் எவருஞ் சொல்லுதற் இயைந்த பிரபஞ்சம் அனைத்தும் அநிதயம் எனவும், பிரம மென்பது ஒன்றுமே யானே எனவும், நானெனற்கு வேறாயிருப்பதால், விவர்த்த உடலெனவும், சுருதி யுத்திகளால் ஐயந் திரிபற விரிந்துணரப் பெறுவது யாதோ அதுவே வேதாந்த ஞான மெனப்படுவதாம்.

அஞ்ஞான துக்கமாகும் மென்பதுகாறும் அத்தியாரோப மெனவும், வேதாந்த ஞான மென்பதுகாறும் அபவாத மெனவும், குறிப்பித்த அருத்தாபத்தி. பிரபஞ்சமதே யென்ற தேற்றேகாரம் பிரமமென்பதற்கு ஏற்றினும் அமையும். அஞ்ஞானத்தைத் துக்க மென்றதனால். ஞானத்தை ஆனந்த மெனற்கு முரண்யாது? எனவே, பிரவிர்த்தி தள்ளற்பாலதும், நிவிர்த்தி கொள்ளற் பாலது எனப்பெற்றாம். விரிந்துணர என்னாது பெறு மென்ற மிகையால் என்னை யானாகப் பெறுதல் என்பதாயிற்று. ஞானம் என்னாது வேதாந்த மென்றடை கொடுத்தது, ஏனைய ஞானம் போல்வ தன்றெனற்கு. அஃதாவது குறி குணங்களற்றது. வேற்றுடல் வேற்றுட லென்றது தன்னை யுள்ளவாறு கண்டு, கழித்தான் அல்லாததாகவும், இருந்தும் பயனற்றதாகவும், நிற்பதை யுணர்த்தற் கென்க. சத்தெனற் கிட மின்மையின் அநித்தமெனவும், யாது யாதென விசாரித்துத் தெளிந்துழி முடிவாக விளங்குவது, ஞானப் பிரகாசமாதலின் அதுதானே யெனவுங் கூறற் கியைந்தவாறு காண்க. தான் சுயஞ்சோதியாகச் சதோதயமாக விளங்கலை மறந்த, மறப்பே விரிந்துணர்தற்கு மாறாதலாற் குவிந்துணரப்பெறுமது அஞ்ஞானமாகும் என்னாதது சுருங்கச் சொல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லென்னும் அழகுறுதற் கென்க. பிரபஞ்சம், அறிவு என முன் பின்னாயது உன்னற் கியைந்த பருவ மெய்தப் பெறாமையானும், அதுகாறுந் தேகமே ஆன்மா, போகமே முத்தி எனப்படு மன்றோ? அல்லவற்றை யாமெனக் கொண்டு அங்ஙனம் அனுபவித்தலும், அனுபவிக்கப்படு பொருளும், அறிவின் சேட்டையும், பிரதி பலனமுமாய் இருப்பினும், தனது அறியாமை தன்னை மறைக்கு மன்றோ? அந்தப் பருவத்திற்கு அங்ஙனமாக நிகழ்வது அது சகசமாதலானும், இந்தப் பருவத்திற் இங்ஙனமாக நிகழ்வது இது சகச மாதலானும், இருமையும் ஏற்குமெனலைக் காட்டற் கென்க. என்றாலும், அறிவு அதிஷ்டானமும் அறியாமையாகிய உலகம் ஆரோபமுமாக முடிதல் திண்ணமாதலால், இதுவே துக்க நிவிர்த்தியுந் தடையற்ற ஆனந்தமுந் தரற் பாலதென்க. இந் நெறி அறியாது அறிவை முன்னும் உலகைப் பின்னும் வைத்துப் போதிப்பதிற் பயனின்றென்க. பல சென்மமாக அறிவே தானாதற் கியைந்த ஞான கதப் பிரத்தியட்சத்தில் விடாது நிற்புழி வினை காரணமாக தூல தனு நழுவும், மீண்டும் அதனை முடிக்கும் அளவு இடையிடையே அனேக தூல தனு வந்து வந்து அகலும். இஃதெவர் பாலும் ஏக தேசத்தில் நிகழ்வதால் இவர்க்கறிவு முன்னெனினும் அமையும். உணர்த்தாது இயல்பாய் அந் நிலை வரப் பெறுநருமுளர். இவரைச் சிறுவயதிலும் உலகத்தில் அவர் வாய்மொழியால், அவ் உளவாளிகள் அங்காங்குக் காண்பது முண்டு. ஆதலின் 'ஊகமுளதேற் சிறுவருரையுங் கொள்க'' என்றார் வசிட்டர். இதற்கு யாமே உத்தரவாதி. (32)

## தங்குருவைப் புகழ்தல்.

இருளகற்று நால்வேதத் துபநிடத மெண்ணான்கினெங்கோன் சொன்ன, பொருளதனை நெஞ்சகத்தே சௌபாக்ய குருவென்னும் பொருளி னோடு, மருளகலும் படியழுத்தித் தமிழ்போலு மதனையொரு வழியெண்ணான்கா, யருளகத்தி லிருந்துரைத்த ததிசயமே யதிசயமற் றறிகிலேனே.

**இருள் அகற்றும் நால் வேதத் உப நிடத எண் நான்கின் எங்கோன் சொன்ன, பொருள், அதனை நெஞ்சகத்தே சௌபாக்ய குருவென்னும் பொருளினோடு, மருள் அகலும்படி அழுத்தித் தமிழ் போலும், அதனை ஒரு வழி, எண் நான்காய், அருள் அகத்தில் இருந்து உரைத்தது அதிசயமே அதிசயம், மற்று அறிகிலேனே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்)

**இருள் அகற்று நால் வேதத்து உபநிடத எண் நான்கின் எங்கோன் சொன்ன பொருள் அதனை :-** — அஞ்ஞானங்களைப் போக்கற் இயைந்த நான்கு வேதங்களிலும் முடிவாய் உள்ள முப்பத்திரண்டு உப நிடதங்களையும் ஆய்ந்து, எமது கர்த்தாவாகிய வியாச பகவான் முடிவாகச் சொல்லிய ஐயந் திரிபகன்ற பொருளை,

**நெஞ்சகத்தே சௌபாக்ய குரு வென்னும் பொருளினோடு, மருள் அகலும் படி அழுத்தி :-** — அவரது சௌபாக்கய குரு வென்னும் தீர்ந்த பொருளோடு ஒத்துக்காண எனது பிராந்தியகலும் வண்ணம் எனது நெஞ்சினிடத்தில் அழுந்தச் செய்து,

**தமிழ் போலும் அதனை யொரு வழி எண் நான்காய் அருள் அகத்தி லிருந்து உள் உரைத்த அதிசயமே அதிசயம் மற்றறிகிலேனே :-** — அந்த மேலாய பொருளை ஒருவாறு பிறருக்கு விளக்கும் படி அருள் வடிவமாக எனது அகத்திலிருந்து தமிழைப் போல் முப்பத்திரண்டு கவியாகப் பாடச்செய்தது அதிசயமே, எவற்றினும் மேலாய அதிசயமாம், இது போன்ற அதிசயம் யானெங்குங் கண்டிலன்.

அழுத்தி, இருந்து, உரைத்தது அதிசயமே, அதிசயமெனக் கூட்டிமுடிக்க. சுசாதியாதி பேதமின்மையை ஐயந் திரிபகன்ற பொருளென்றாம். சௌபாக்கிய குருவெனல் சுயம்பிரகாச நிலையை ஆதலால் பொருளினோடெனவும், உபநிடதார்த்தமும் குரு உபதேசமும் ஒருங்கு ஒத்துத் தலைக்காட்ட அழுத்தி யெனவும். இலக்கண முரண் கிஞ்சித் திருத்தாலும் இருக்கும் என்பதைக் குறிப்பிக்கத் தமிழ் போலும் மெனவும், அந்த மேலாய பொருளை முழுதும் எட்டி அறிதல் எவர்க்கு அரிதென்பதைக் குறிப்பிக்க ஒரு வழியெனவும், இங்கே அருளெனல் ஞானப் பிரகாசத்தை. இங்ஙனமாக விருந்துரைத்தது தனது சற்குருநாதனாதலால் உரைத்த அதிசயமே அதிசயமெனவுங் கூறியவாறாகப் பெற்றாம். குருவை ஏதுப் பொருளாக்காது குருவென்னும் பொருளென்றதனால், இரு பெயரொட்டுப் பண்பாக்குக. மருளகலும்படி யென்னாது மருள் அகற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி எனப் பிறவினையாகக் கூறல் வழுவென்க. சௌபாக்கிய குரு வென்பவர் இந் நூலாசிரியருக்கு ஆசிரியராதலின் இவர்க்குக் கருணாகரனென்னும் ஆசிரியர் என்றாம். எனவே இந் நூலாசிரியராகிய கருணாகரனென்பவர். தமதாசிரியராகிய சௌபாக்கிய குரு வென்பவர், உபநிடதப்பொருளை என அகத்தில் அழுத்தி, அங்கே அருள் வடிவா நின்று, இந் நூலைத் தந்ததாகப் புகழ்ந்தனர் என்பது கருத்து. உப நிடதப் பொருளும், எனதாசிரியரது அனுபவமும் ஒத்துளதேனும், பாஷை அதற்கயலாதலால் வழு எய்தினும் எய்தும். அதனால் வழுவெனக் களையாது பொருள் நாடி ஏற்க வேண்டு மெனக் கூறியதாகப் பெற்றாம். மருளெனல் உபாதேய மெனற் கியையுங் கருத்துப் பொருள் காட்சிப் பொருளாகிய இயங்கு தினை நிலத்தினைகளை உபாதானமாகக் கொண்டு பலவாகக் கற்பித் உழறலை. இதனால் ஆன்மாவாகிய தன்னை யன்றிப் பண்பியில்லை யெனத் தெளியாததால் பண்பனைத்தையும் பண்பியெனத் திடமாகக் கருதிப் பிறவி தோறும் உழல்கின்றனம். இதில் தன்னைக் கல்லாவிடத்துக் கற்றும் பயனின்றென்பது கருத்து. ஆயின் எப்பாடை வல்லவரும் பண்பி அபரிமிதம் என்பதெல்லாம் பண்புந் தொழிலையுமென்க. இதனைச் சோதனை ஞாயம் பொருத்தத்தால் எங்கணுங் காணலாம். அயலனைத்தும் அறிவின் பிரதிபலனம் ஆதலால், சர்வம் மித்தை யென்றும், ஆதி, மத்தி, அந்தம் அறிவா முடிவதாற், சர்வம் பிரமம் என்றும், நானெனல் அறிவை யன்றி, எல்லாவிதத்தும் இன்மையாற், சர்வம் நானென்றும் போந்தவாறு காண்க. இதனை அந் நிலை உடையோர் பாலன்றிக் கேட்டுத் தெளியின் பழிப்பாக முடியு மென்க. இதற்கு இவ் வுலகமே சாட்சி. ஒரு நிலையையும் விடாததால் இவ் உபநிடதத்தைப் போலத் துக்க நிவிர்த்தியையும் தடையற்ற ஆனந்தத்தையும் தரற்பாலது ஒருநூலும் எங்ஙணு மில்லை யெனக் கருதிப் பாடித் தந்தது முறையோ? வழுவோ? வழுவெனின், துவாத சாந்தப் பெரு வெளி தரற்பாலது வேறொன்றிருக்க வேண்டும் இருக்கின்றதெனின் போலியாகாது இருக்கவேண்டும், அங்ஙனமில்லை யெனின் முறையா மென்க. (33)

**முற்றிற்று.**

## எசுர் வேதம் கூடி முத்திகோபநிஷத்

### 1-வது அத்தியாயம்.

''அந்த ஆன்மா (ஆன்மா வென்னும் சொல்லுக்குப் பொருள் பிரம்மம்) விண்ணிடத்திலிருந்து ஆகாய முண்டாயிற்று ஆகாயத்திலிருந்து வாயும், வாயுவிலிருந்து அக்கினியும், அக்கினியிலிருந்து அப்புவும், அப்புவிலிருந்து பிருதிவியும் உண்டாயின''

### கூடி 3-வது அத்தியாயம்.

பூமியைச் சலத்திலும், சலத்தை அக்கினியிலும், அக்கினியை வாயுவிலும், வாயுவை ஆகாயத்திலும், ஆகாயத்தை அகங்காரத்திலும், அகங்காரத்தை மக தத்துவத்திலும், மக தத்துவத்தை அவ்யக்கத்திலும், அவ்யக்கத்தைப் புருஷனிலும், கிரமமாக லயிக்கச்செய்கிறான்.

முத்திகோபநிஷத்

முற்றிற்று.



Thalayan Printers - 2324531

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவன் இந்து

சைவன், இந்து யாரெனக் கேளீர்
- சைவன்

சிவன், விஷ்ணு, அம்பிகை, பிரம்மம்
சம்பந்தம் உடையவனே, சைவன்
- சைவன்

தள்ளவேண்டியவை என்றும் தள்ளிடுவான்
(கோபம், காமம், களவு, கொலை, மோகம், லோபம், கபடம்)
கொள்ளவேண்டியவை நாளும் கொண்டிடுவான்
(தயை, கருணை, அன்பு, கொடை, ஒப்புரவு, சான்றான்மை)
சித்த சுத்தி கை வரவே, சாதனை செய்திடுவான்
தொண்டன், அடியன், எனவே உலவிடுவான்
- சைவன்

நாளும் பொழுதும் அவன்நாமம் பாடிடுவான்
சிவனெனவே எக்கணமும் வாழ்ந்திடுவான்
தடத்தம், சொரூபம் அறிந்திடுவான்
தண் அருள் கொண்டு இலங்கிடுவான்
- சைவன்

கருமக் கழிம்பு எரித்து, சித்தம் சுத்தமாகிட
வேதமும் சாஸ்திரங்களும், ஓதாமல் வெளியாகும்
ஐயனும் ஆன்மாவும் ஒன்றாகிட, அலை எழும்பும்
அகிலம் முழுமையும், பரவியே தானாகும்
- சைவன்

விவேக வைராக்கியம், சத்தியம், சாந்தம், பூண்டு
பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வர, சொரூபமாகி
அட்டமாசித்தியும், அகிலமும், ஒன்றாகிட
நாம ரூப கட்டறுத்து, அகண்டமாகிடுவான்
- சைவன்

தானேயாகி, தண் அருளுமாகி, தாயாகி
சொல்லும் செயலும் அற்று, அத்துவித
சிவமாகி, சிவவோகமாகி தைலதாரை என
பிரம, சிவமே, சிவோகம், சிவோகம்
- சைவன்

அருணாசலத்தான் 11.03.2008

# எழுமின்! விழிமின்! உழைமின்!



- எழுமின்

இமய உச்சி, விழுமிய நோக்கு,
கலையா சித்தம், மலையென ஓங்க

- எழுமின்

உழைப்பே உன் சீர், உறவே நாதம்,
தெளிந்த சிந்தை, ஓய்வுறாச் செயல்,
புதுயுக இலக்கணம், புதுப்புது உத்திகள்,
தாழ்விலா சக்தி, அகிலம் ஆளவே

- எழுமின்

தாமதியாதே, சோர்வடையாதே,
காலமோ சிறிது, கருமமோ பெரிது,
பாதையோ கடினம், பயம் கொள்ளாதே,
காரியம் சித்தி, வீறுடன் செல்வாய்

- எழுமின்

தர்மம் ஓங்கிடும், தயையும் பெருகிடும்,
கருணைக் கர்மம், நிகரில் வலிமை,
சிலையும் மெழுகாய், உலகெலாம் உருக்கிட,
கலையும் திருவும் என்றும் நடமிட

- எழுமின்

ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம், ஓம் தத் சத் ஓம் என்றே

- எழுமின்

அருணாசலத்தான்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org